உ

சிவமயம்



# கனக தீபம்





அமரர்

## திருமதி. கனகம்மா சபாரத்தினம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பெற்றது

**11.08.2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



பளையைப் பிறப்பிடமாகவும், தென்மராட்சி நுணாவில்
மேற்கினை வசிப்பிடமாகக் கொண்டவரும்,
உயர் சைவ வேளாண் மரபினருமாகிய

அமரர்

**திருமதி கனகம்மா சபாரத்தினம்**

அவர்களின்

சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பெற்ற

# கனக தீபம்

**11.08.2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்து
அன்புடனும், பண்புடனும், நல்லவராய், வல்லவராய்,
நாம் வாழ அல்லும் பகலும் அயராது பாடுபட்டுழைத்து,
இன்பத்திலும் துன்பத்திலும் எம்மைத் தளர்வு
காணவிடாது ஏற்றம் பெறவைத்து, எல்லோருக்கும்
இனிய மாதரசியாய் மங்கலம் பொலிய வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வமாய் ஆகிவிட்ட எம்
அன்னையார் திருமதி கனகம்மா சபாரத்தினம்
அவர்களின் பொன்னடிகளுக்கு எங்கள்
கண்ணீரினால் ஏற்றி வைக்கப்பட்ட இந்த கனக தீபம்
நினைவு மலரினைப் பணிவன்புடன்
சமர்ப்பணம் செய்கின்றோம்.

**- குடும்பத்தினர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

ஆலந்தானுகந் தமுது செய்தானை
யாதியையமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் முடையானைச்
சிந்திப்பாரவர் சிந்தையுளானை
ஏலவார்குழ லாளுமை நங்கை
யென்றுமேற்றி வழிபடப்பெற்ற
காலகாலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன் பெற்றவாறே.

**திருவாசகம்**

கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகே னாழிடினும்
மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வார்
உற்றிறுமாந் திருந்தேனெம் பெருமானே யடியேற்கு
பொற்றவிசு நாய்கிடுமா றன்றே நின் பொன்னருளே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பானித்தெருவே
ஐயா நீயுலாப் போந்த வன்று முதலின்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாமோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம் புகுந்து
விழலொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழியாளாய்
மனஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடும் கூடியெம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மாற்றுநீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பின் பெருகிய சிறப்பின்மிக்க
அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலில் மண்மேல் நம்மைச்
சொல்தமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயால்

## திருப்புகழ்

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில் நீறும்
இலங்கு நூலும் புலியதளாடையு மழுமாறும்
அசைந்த தோடும் சிரமணிமாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் அருளிய குருநாதா
உசந்த சூரன் கிடையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசைந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க! மலிவளஞ் சுரக்க மன்னன்!
கோன்முறை யரசு செய்க! குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்களோங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்!
திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"



மலர்வு
31
08
1942

உதிர்வு
12
07
2016

அமரர்

# திருமதி. கனகம்மா சபாரத்தினம்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு துர்முகி வருடம் ஆடிமாதம் நடுநாளாம்
பூண்ட பிரதமையின் சித்திரைநிறை நட்சத்திரத்தில்
நீண்ட புகழ் எங்கள் நிமிர்ந்தநடை கனகம்மா
இப் பூவுலகுவிட்டு மீண்ட நாள் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி கனகம்மா சபாரத்தினம்

அவர்களின்

# வாழ்வாங்கு வாழ்ந்த வழித்தடத்தின் குறிப்பேடு

இந்துமா கடலின் எழில் முத்தாய் திகழ்கின்ற இலங்கையின் வடபுலத்தே விளைபூமி என்ற விவசாய பூமியாம் கிளிநொச்சி மாவட்டத்தில் தென்னையின் சோலையாம் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகப் பிரிவில் புகழ் பூத்த புராண கிராமமான பெரியபளையில் கந்தையா நாகம்மா தம்பதியினருக்கு இரண்டாவது மகளாக பிறந்த கனகம்மா அவர்கள் அமரர் சின்னக்குட்டி மற்றும் செல்வராணி ஆகியோரை சகோதரர்களாகப் பெற்று மகிழ்வாக வாழ்ந்த குடும்பத்தின் ஒரு முதுகெலும்பாக இருந்தவர். தனது கல்வியை பளை மத்திய கல்லூரியில் கற்றுத் தேறினார். பின்னர் அவர் தன் திருமண வயதில் தென்மராட்சியின் சாவகச்சேரியில் நுணாவில் என்ற புராண கிராமத்தில் பொன்னையா வள்ளிப் பிள்ளை தம்பதியினரின் இரண்டாவது மகனான சபாரத்தினம் அவர்களைத் திருமணம் செய்து கொண்டதால் குமாரசாமி, இரத்தினம் ஆகியோரை மைத்துன ராகப் பெற்று மகிழ்வடைந்தார். தனது உறவுகள் உயர ஆரம்ப கர்த்தாவாக இவர் செயற்பட்டார்.

வளர்ச்சியும், மகிழ்ச்சியும், புகழ்ச்சியும் கொண்ட இக்காலப்பகுதியில் சௌந்தரராஜன், நிர்மலராஜன், முரளிதரன், ஞானச்சந்திரன் ஆகிய நான்கு பிள்ளைச் செல்வங்களைப் பெற்று மகிழ்ச்சியடைந்தார். பிள்ளைகளின் எதிர்காலம் சிறக்க வேண்டுமென்ற பேரவா காரணமாக தனது மூத்த புதல்வன் கல்வி கற்றபின் நாட்டுச்சூழல் காரணமாக கல்விக்கு அப்பால் அவரின் பாதுகாப்புக் கருதித் தானே கூட்டிச்சென்று சுவிஸ்லாந்துக்கு அனுப்பி வைத்தார். அவர் தன் திருமண வயதில் வடமராட்சி செம்பியன்பற்று தங்கராசா கமலாம்பிகை தம்பதியரின் புதல்வி மோகனாம்பிகை அவர்களைக் கரம்பற்றி செந்தூரன் என்ற பேரனைக்கண்டு மனம் மகிழ்ந்து இரண்டாவது மகன் நிர்மலராஜனை கல்வி கற்பித்து அவரின் அண்ணா சென்ற இடமான சுவிஸ்லாந்துக்கு அனுப்பி வைத்தார். அந்த மகனின் மகிழ்ச்சியை மையப்படுத்தி புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட கனகரட்ணம் தங்கலட்சுமி தம்பதிகளின் மகள் கலைச்செல்வியை மருமகளாகப் பெற்று நிசாந் எனும் பேரப்பிள்ளையைக் கண்டு மனம் மகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது மகனாகிய முரளிதரனை யா/மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி கற்பித்து கனடா நாட்டுக்கு அனுப்பிவைத்தார். தனது நான்காவது மகனாகிய ஞானச்சந்திரன் மீது அளவற்ற அன்பும் பாசமும் வைத்திருந்தவர். அவரின் கல்வியை யா/ மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி கற்பித்து திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்றதற்கமைய லண்டனுக்கு அனுப்பி வைத்தார். கடைக்குட்டியின் திருமண வாழ்க்கைக்கு ஏற்ற விதத்தில் கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தை வாழ்விடமாகக் கொண்ட பரமலிங்கம் தேவநாயகி தம்பதிகளின் மகள் சாந்தினியை திருமணம் செய்து வைத்து தனது கடைசி ஆசையையும் நிறைவேற்றினார்.

இவ்வகையில் தான் வாழும் காலத்தில் நீதியோடு வாழ்ந்து கடும் உழைப்பையும் விடா முயற்சியையும் தன் பாதையாக அனைவரும் வாழ தன்னாலான அனைத்துப் பங்களிப்பையும் செய்து திருமதி ச.கனகம்மா அவர்கள் 12.07.2016 இல் இறைவனின் பாதாரவிந்தம் சென்றடையக் கிடைத்ததை நாம் தவிர்க்க முடியவில்லை. வாழும் போது மகிழ்ச்சியோடு வாழ்ந்து நிறைவாக அவருக்குக் கிடைத்த மரணம் அதிஷ்டமானது. அவரால் ஏற்பட்ட இழப்பு ஈடுசெய்ய முடியாததாயினும் பிறந்தவர் எப்போதோ இறப்பார் என்ற பேருண்மையோடு நிறைவடைவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலகலப்பானவர்

அமரத்துவம் அடைந்த கனகம்மா சபாரத்தினம் அவரிகளின் ஞாபங்கள் எல்லாம் அவர் ஒரு கலகலப்பான சுபாவமுள்ளவர் என்பதை ஏற்படுத்திக்கொள்ள உதவுகின்றன எனலாம்.

"நெருதல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

எனும் வள்ளுவனின் குறள் மனிதன் பிறப்பு உண்டேல் இறப்பு உண்டு என்பது நியதி. இழப்புக்கு இடையில் மனிதன் செய்ய வேண்டிய நல்ல கருமங்கள் எவர் செய்கின்றாரோ அவரே வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர் ஆகிறார். அன்னார் பளையைப் பிறப்பிடமாகக் கொண்டாலும் நுணாவிலை வாழ்விடமாகக் கொண்டவர். இல்லறத்தின் பலனாக நான்கு ஆண் சிங்கங்களைப் பெற்றெடுத்து நாடும் ஊரும் போற்ற நன்மக்களாக வளர்த்தெடுத்து திரைகடல் ஓடியும் திரவியம் தேடும் பணியில் உள்ளார்கள். அவர்கள் இன்று சைவத்தை வளர்க்க வழி காட்டினார். எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் பெருந்தன்மை அன்னாரிடம் உண்டு. இவ் இடைப்பட்ட காலத்தில் எமது வீரபத்திரர் ஆலயத்தின் வளர்ச்சியில் அன்னாரின் உதவி அளப்பரியது.

தனது இறுதிக்காலம் வரையும் வீரபத்திரர் ஆலயத்தின் வளர்ச்சிக்கு உழைத்த உத்தமி. 74 ஆவது வயதில் அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது பரிபாலன சபையின் சார்பில் ஆறுதல் கூறுவதுடன், ஆத்மா சாந்தியடைய பத்திரகாளி வீரபத்திரப் பெருமானை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சு.பூபாலசிங்கம் (J.P)
தலைவர்
பரிபாலனசபை
ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம்,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பின் சிகரம் எங்கள் பெரியம்மா

பளை பெரியபளையைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா சபாரத்தினம் அவர்கள் இறைபதம் அடைந்தமை எமக்கு மிகுந்த பேரிழப்பாகும்.

"வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற வள்ளுவரின் குறளுக்கு ஏற்ப இப் புவியில் வாழ்ந்த பெரியம்மா அனைவருக்கும் அன்பு பாராட்டி உதவிகள் செய்து இன்முகத்துடன் உற்றார், உறவினரை வரவேற்பார். இவரின் பிள்ளைகள் நால்வருடன் என்னையும் ஆதரித்து பாடசாலை செல்வதற்காக இவரின் இல்லத்தில் தங்கியிருந்த நாட்களை என்றும் மறக்க முடியாது.

12.07.2016 அதிகாலை 3.00 மணியளவில் என்னை தொலைபேசியில் அழைத்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறு கூறினார். வழமைபோல் சிகிச்சை பெற்று வந்துவிடுவார் என்று எண்ணியிருந்த எனக்கு இவர் பிரிவு பெரும் அதிர்ச்சியாகவும் நம்ப முடியாததாகவும் இருக்கின்றது.

பெறாமகன்

செ.நிமலரங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய கிரியைகளும் விளக்கங்களும்

ஆலயங்களில் இடம்பெறும் கிரியைகள் நித்திய கிரியை, நைமித்திய கிரியை, காமிய கிரியை என வகைப்படுத்தப்படுகின்றன. இவற்றுள் நைமித்திய கிரியை முக்கியத்துவம் பெறுகின்றது. இந்தவகையில் ஆலயங்களில் நிகழும் பிரமோற்சவமும் (மஹோற்சவம்) வருடமொருமுறை நிகழும் நைமித்திய நிகழ்ச்சிகள் அல்லது பெருங்கிரியைகள் ஆகும்.

மஹோற்சவமானது இறைவனின் ஐந்தொழில்களை நினைவூட்டுகின்றது. மகா உற்சவம் என்பது பெரிய உயர்வான படைத்தல் முதலிய காரியங்கள் எனப் பொருள்படும். திருவிழாக் காலங்களில் கொடியேற்றம் வரையுள்ள கிரியைகள் படைத்தலையும், வாகனத் திருவிழாக்கள் காத்தலையும், தேர்த்திருவிழா அழித்தலையும் மெளனோற்சவம் மறைத்தலையும், தீர்த்தோற்சவம் அருளலையும் குறிக்கும்.

உற்சவத்தின் ஆரம்பத்தில் விக்னேஸ்வரர் பூஜை, அனுக்ஞை என்பனவும் ஊர் நன்மை பெறுவதற்காக "கிராமசாந்தியும்" செய்யப்படும். அதன்பின் வைக்கோல் தருப்பை முதலியவற்றால் செய்யப்பட்ட உருவம் ஒன்றைச் சிவாக்கினியோடு சேர்த்து வீதி வழியே இழுத்து வீதியை சுத்தஞ் செய்யும் "வாஸ்து சாந்தி" நடைபெறும். இச் சாந்தி செய்ததன் பின்னர் சுத்தமான புற்றுமண் எடுத்து உலகிலே தானிய விருத்திக்காக முளையிடுதலும், விழாக்கள் இடையூறின்றி நிறைவேற வேண்டுமென ஆசாரியார் தமக்கும் உற்சவ மூர்த்திகளுக்கும் காப்பு கட்டுதலும் (ரட்சா பந்தனம்) முறையே நிகழும்.

மேலும் மஹோற்சவ காலங்களில் ஆலயங்களில் வழிபாடானது தம்பம், விம்பம், கும்பம் என்ற அடிப்டையில் இடம்பெறுவதனைக் காணலாம். அத்துடன் இக்காலங்களில் சுற்றுப்பலி இடுகின்ற வழக்கமும் காணப்படும்.

அதாவது, இச் சுற்றுப்பலி இடுதலின் நோக்கம் என்னவென்றால் ஆலய உற்சவமானது இனிதாக நிறைவேறுவதற்காக காவல் தெய்வங்களாக இருக் கின்ற அட்டதிக்குப் பாலகர்களை (இந்தின், அக்கினி, யமன்,நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன்) திருப்திப்படுத்துவதே ஆகும்.

இவ்வாறு பிரம்மோற்சவம் மகா உற்சவம் என அழைக்கப்படுகின்ற வருடாந்த திருவிழாவானது வேதாகம விதிகளுக்கு அமைய ஈழத் திருநாட்டின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள திருகோணமலை மாநகரின் கண்ணே வீற்றிருக்கின்ற எல்லாம் வல்ல அருட் சக்தியாகிய ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் வேதாகம மாமணி பிரம்மஸ்ரீ சோ.ரவிச்சந்திரக்குருக்கள் அவர்களினால் முறைப்படி நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரதோற்சவம்**

மஹோற்சவ காலங்களில் ஆலயங்களில் இடம்பெறும் முக்கியமான உற்சவம் இரதோற்சவமாகும். இவ்வுற்சவம் இடம்பெறுவதற்கான காரணம் என்னவென்றால் இறைவன் தனது அழித்தல் தொழிலை மேற்கொள்கின்ற தன்மையினை எடுத்துக்காட்டுவதே ஆகும். அதாவது இப் பிரபஞ்சத்தில் ஆன்மாக்கள் அதாவது இப் பிரபஞ்சத்தில் ஆன்மாக்கள் படைக்கப்பட்டு வாழ் கின்ற காலங்களில் இறுதி இலட்சியமாகிய முத்தி என்ற தன்மையினை இவ்வான்மாக்கள் அடையவேண்டுமாயின் மலபந்தங்களில் இருந்து விடுபடுதல் வேண்டும்.

அவ்வாறு ஆன்மாக்களைப் பீடித்துள்ள மலங்களை செயல் இழக்கச் செய்கின்ற தத்துவத்தை எடுத்துக் காட்டுவதற்காகவே இரதோற்சவம் இடம் பெறுகிறது. இரதோற்சவத்தின் போது அம்பாள் ஆவேசத்துடன் இரதத்தில் எழுந்தருளி பவனிவரும் போது அக் காட்சியினை அடியார்கள் கண்டுகளிக் கின்றனர். அதேவேளை, அவர்களது உள்ளம் தூய்மை அடைகின்றது.

அம்பாள் ரதத்தின் மீது எழுந்தருளி வலம்வந்து சந்நிதானத்தை அடைந்த வுடன் அம்பாளது ஆவேசத்தைத் தணிப்பதற்காக "பச்சை சாத்துதல்" வைபவம் இடம்பெறும். அதன்பின்பு அம்பாளை இரதத்தில் இருந்து அவரோகணம் (இறக்கம்) செய்து ஆலய வாயிலில் வைத்து விசேட தீபாராதனைகள் செய்யப்படும். மோர், தயிர், அன்னம் போன்ற நிவேதனங்களைப் படைத்து மங்கள ஆரத்தியும் செய்யப்படும். இவற்றுடன் அம்பாள் ஆலயத்துள் பிரவேசிப்பதாக இரதோற்சவம் அமைகின்றது.

**தீர்த்த உற்சவம்**

1. ஆலயங்களில் மஹோற்சவ காலங்களில் இறுதி நாளில் இடம்பெறுவது தீர்த்த உற்சவமாகும். இவ் உற்சவம் இறைவனது பஞ்சகிருத்தியங்களில் இறுதியானதாக உள்ள அருளலைக் குறிப்பதாக அமைகின்றது. அருளல் என்பது பரிபக்குவம் வாய்ந்த ஆன்மாக்களுக்கு இறைவன் பரமுக்தி கொடுத்தல் ஆகும்.
2. ஆன்மாக்கள் முத்தி பெறுவதற்கு குரு லிங்க சங்கம சேவை முக்கியமான தாகும். இறைவனுக்கு செய்யும் தீர்த்த விழா இலிங்க சேவையைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்த உற்சவம் நிகழும் முன் மஞ்சள் முதலிய திரவியங்களை உரலில் இட்டுத் தூளாக இடித்து சாணம், தைலம், நெய் முதலியவற்றுடன் கலந்து சுவாமிக்குச் சாத்தும் "சூர்னோற்சவம்" எனும் வைபவம் நடைபெறும்.

3. தீர்த்தத்தை திருவருளாகக் கருதி இறைவனது அம்சமாகிய அஸ்திர தேவருக்கு அபிஷேகம் செய்த தீர்த்தத்தை அடியார்கள் உள்ளே பருகியும் புறத்தே புரோட்சித்தும் அந்நீரிலேயே மூழ்கியும் தமது பாவங்களைக் கழுவி திருவருளைப் பெற்றுக் கொள்வதாகத் தீர்த்தோற்சவம் அமைகின்றது.

**பஞ்ச கௌவியம்**

தீட்டு, துடக்கை நீக்கி( ஆசூசம்) இடத்தையும் உடலையும் சுத்தப்படுத்தி தூய்மை பெறுவதற்கு அருந்துவதே பஞ்சகௌவியம்.

## சண்டேஸ்வர உற்சவமும்
## ஆச்சாரிய உற்சவமும்

கொடியிறக்கம் முடிவடைந்த பின்னர், வைரவர், சண்டேஸ்வரர் பூசைகள் நடந்து சண்டேஸ்வர உற்சவமூர்த்தி வீதிவலம் வரும் நிகழ்ச்சி இடம்பெறும். சிவனடியார் வடிவமான சண்டேஸ்வர உற்சவம் சங்கம வழிபாடாகக் கருதப்படுகின்றது. அதாவது, தலைசிறந்த பக்தராகவும் பக்த கோடிகளின் வழிபாட்டுப் பலனை அனுக்கிரகம் செய்பவராகவும் உள்ள சண்டேஸ்வரரைப் பணிவுடனும் பக்தியுடனும் கௌரவமாக வீதிவலம் வரச்செய்தல் அவசியமானதாகும்.

மகோற்சவத்தின் இறுதிக் கட்டமாக அமைவது ஆச்சாரிய உற்சவமாகும். மகோற்சவத்தை நடத்திவைத்த சிவாச்சாரியாரை சிவசொரூபமாகப் பாவித்து வழிபடுவது அவசியமாகும்.

மஹோற்சவ காரியங்களைச் செவ்வனே நிறைவேற்றி வைத்துத் திருவருட் பேற்றினைத் தந்தருளும் குரு மூர்த்தியாகிய சிவாச்சாரியாரைப் பூமாலை முதலியவற்றால் அலங்கரித்து மங்கள வாத்தியம் சகிதம் வீதி வலமாக அழைத்து வந்து மண்டபத்தில் அமரச்செய்து யாவரும் அவரை வணங்கி இயன்றளவு குருதட்சணை வழங்கி விபூதி பிரசாதம் பெற்றுக்கொண்டு குருவின் அருளுரைகளையும் செவிமடுத்து அவரிடம் இருந்து ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்வதாக இந்த உற்சவம் இடம்பெறுவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிரக வழிபாடு

நவக்கிரகங்களை வழிபடும்போது விக்கிரகங்களைத் தொட்டு வணங்குவதோ விழுந்து வணங்குவதோ சரியானதல்ல. அதை விலக்கிக்கொள்ளல் வேண்டும்.

### பூங்காவன உற்சவம்

தீர்த்த உற்சவ தினத்திற்கு மறுநாள் இடம்பெறுவது பூங்காவன உற்சவமாகும். இறைவன் பஞ்ச கிருத்தியங்களையும் செய்து முடித்த பின்பு இளைப்பாறுகின்ற அம்சத்தை எடுத்துக் காட்டுகின்ற உற்சவமாக இது காணப்படுகின்றது. அத்தினத்தில் இறைவனை சயன நிலையில் (உறக்க நிலை) அலங்கரித்து பூங்கா போன்ற அமைப்பில் உருவாக்கப்பட்ட பந்தலில் எழுந்தருளச் செய்து விசேட தீபாராதனைகள், தோத்திரங்கள் என்பவற்றால் சாந்தப்படுத்துவதாக உற்சவம் இடம்பெறும். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுவதைக் காணலாம்.

அடியார்கள் இந்த உற்சவத்தைக் காண்பதன் மூலம் அவர்களது உள்ளம் இறைவன்பால் ஈர்க்கப்படுகிறது. பக்தியுணர்வு மேலோங்குகிறது.

### பிராயச்சித்த அபிஷேகம்

மஹோற்சவ விழா இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்களில் அக்காலங்களில் மேற்கொண்ட கிரியைகளில் ஏதேனும் குற்றம் குறைகள் இடம்பெற்று இருப்பின் அவற்றை நீக்குதற்பொருட்டு பூங்காவன உற்சவத்திற்கு மறுநாள் ஆலயங்களில் உள்ள மூர்த்திகளுக்கெல்லாம் தூயநீரினாலும், ஏனைய அபிஷேகப் பொருள் களாலும் அபிஷேகம் செய்தல் பிராயச்சித்த அபிஷேகம் என அழைக்கப்படும். மேலும் ஆலயத்திலோ அல்லது ஆலயத்தை அண்மித்த பகுதிகளிலோ மரண சம்பவங்கள் இடம்பெறுமானால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆலயங்களில் பூஜைகள் இடம்பெறமாட்டா. ஆகவே இதனை நிவர்த்தி செய்யப் பிராயச்சித்த அபிஷேகம் இடம்பெறுவது வழக்கம்.

ஆலயங்களில் உள்ள மூலமூர்த்தி உட்பட ஏனைய எல்லா மூர்த்திகளுக்குமாக வாசனைத் திரவியங்களோடு கூடிய கும்பங்களை நிறுத்தி, இறைவனை அக்கும்பங்களிலே ஆவாகனம் செய்து பூஜைகள் செய்யப்பட்டு அக்கும்ப நீரினால் சகல மூர்த்திகளுக்கும் அபிஷேகம் இடம்பெறும்.

### வைரவர் பூஜை

ஆலயத்தின் பிரதான வாயிலை அடுத்து எல்லா மண்டபங்களுக்கும் வெளியே வடக்குக்கும், வடகிழக்குக்கும் இடையில் வைரவர் கோயில் அமைவுறும். வைரவருக்கு ஷேத்திர பாலகன் என்னும் பெயரும் உண்டு. ஷேத்திரம் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலைக் குறிக்கும் சொல். பாலகர் என்பவர் காப்பவர் எனப் பொருள்படும். வைரவர் கோயில் காவல் தெய்வமென்பதால் உற்சவங்கள் சிறப்பாக இடம்பெற காவலாளியாக இருந்து இனிதே நிறைவேற்றி வைத்ததற்காக வைரவருக்கு மடை பரவி (சர்க்கரைப் பொங்கல் ,பழவகைகள்) வடைமாலை சாத்தி அவரைச் சாந்தப்படுத்தும் பூஜையாக இடம்பெறுவதனை நாம் ஆலயங்களில் காணக் கூடியதாக இருக்கின்றது.

இந்த வைரவ பூஜை மஹோற்சவம் முடிந்து பிராயச்சித்த அபிஷேகம் இடம்பெற்ற பின் முதலில் வருகின்ற செவ்வாய்க்கிழமை அல்லது வெள்ளிக்கிழமைகளில் இடம்பெறும்.

## தீபத்திற்குரிய எண்ணெய்களும் அதன் பயன்களும்

| | |
|---|---|
| தேய்காய் எண்ணெய் | - கணபதிக்கு உகந்தது. |
| நல்லெண்ணெய் | - விஷ்ணுவுக்கு உகந்தது.<br>பீடைகள் விலகும்.<br>உடல்நலம்.<br>மனவலிமை சேரும்.<br>பிரீதி உண்டாகும். |
| நெய் | - மகாலட்சுமிக்கு உகந்தது.<br>சகலருக்கும் சுகமும்,செல்வமும் சேரும்.<br>லட்சுமி கடாட்சம் உண்டாகும்.<br>கிரகதோஷம் விலகும். |
| விளக்கெண்ணெய்<br>(ஆமணக்கு) | - குலதெய்வ கடாட்சம்<br>புகழ் சிறந்த வாழ்க்கை<br>உறவினரால் நன்மை கிட்டும். |
| இலுப்பெண்ணெய் | - அம்மன் அல்லது காளிதேவியின்<br>உதவிகிட்டும். |
| வேப்பெண்ணெய் | - ருத்ர தேவதைகளின் அருள் கிட்டும் |
| கடலை எண்ணெய் | - உபயோகிக்கக் கூடாது |

(வேப்பெண்ணெய்க்குப் பதில் நல்லெண்ணெய் பாவிக்கலாம்) சர்வமங்கள யோகமும் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✧ வெங்கல விளக்கில் தீபமேற்றினால் பாவங்கள் போகும்.

✧ இரும்பு விளக்கில் தீபமேற்றினால் நட்புறவு ஏற்படும். சனிக்கிழமை இரும்பு விளக்கில் தீபமேற்றினால் சனிப்பிரீதி உண்டாகும்.

## தீபம் ஏற்றும் திசைகளும் பயன்களும்

| | |
|---|---|
| கிழக்கு | - துன்பங்கள் யாவும் விலகும், கிரகபீடை அகலும். |
| மேற்கு | - கடன்தொல்லை, கிரகதோஷம், சனிப்பீடை அகலும், விரோதங்களைப் போக்கும். |
| வடக்கு | - திரண்ட செல்வமும், மங்கலமும் உண்டாகும். திருமணத் தடை நீங்கும், அறிவு வளர்ச்சி, சுபகாரியங்கள் நடக்கும். |
| தெற்கு | - தீபமேற்றக் கூடாது. |

மேற்கு நோக்கி நெடிதா எரியும் சுவாலை - ஆரோக்கியத்தையும் சுகபோகங் களையும் தரும்.

## தீப முகங்களும் பயன்களும்

| | |
|---|---|
| ஒரு முகம் ஏற்றினால் | - மத்திம பலன் |
| இரு முகம் ஏற்றினால் | - குடும்ப ஒற்றுமை பெருகும் |
| 3 முகம் ஏற்றினால் | - புத்திர சுகம் தரும். |
| 4 முகம் ஏற்றினால் | - பசு, பூமி இவற்றைத் தரும். |
| 5 முகம் ஏற்றினால் | - செல்வத்தைப் பெருக்கும். |

விஷேட நாட்களிலாவது விளக்கை நன்றாகச் சுத்தம் செய்து, மஞ்சள், விபூதி, சந்தனம், குங்குமத்தால் திலகமிட்டு பூச்சரத்தால் அலங்கரிக்க வேண்டும். இவ்வாறு நித்தியம் செய்வது நன்று.

தீபத்திற்குரிய திரிகளும் பயன்களும்

| | |
|---|---|
| பஞ்சுத் திரி | : சுகவிருத்தி (இலவம் பஞ்சைத் திரித்துப் போடலாம்) |
| தாமரைத் தண்டுத்திரி | : முற்பிறவிப் பாவங்களைக் களைத்தல், ஐஸ்வரியம் நிலைத்தல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழைத்தண்டில் திரி : சந்தான பாக்கியம், செய்வினைக் கோளாறு நிவர்த்தி.

வெள்ளைத் துணியில் திரி : சந்தான பாக்கியம், செய்வினைக் கோளாறுகள் நிவர்த்தியாகும்.

மஞ்சல் நிறத்துணியில் திரி : உத்தம பலன், செல்வங்கள் பெருகும்.

சிவப்பு நிறத்துணியில் திரி : திருமணத்தடை நீங்கும், மகப்பேறு உண்டாகும்.

நூலிழைகளைத் திரிகளாகப் போடும்போது அவை முறையே 21, 16, 14 அல்லது 7 இழைகளைக் கொண்டிருப்பது உத்தமம்.

## விளக்குகளும் உலோகங்களும்

மண்ணால் அல்லது வெண்கலம், பித்தளை, வெள்ளி உலோகங்களால், செய்த விளக்குகளைப் பயன்படுத்தலாம். எவர் சில்வர் விளக்குகளைப் பயன்படுத்துவது உசிதமல்ல. விளக்குகளைத் தரையில் வைக்கக்கூடாது. தட்டிலோ வாழை இலையின் மேலோ வைக்க வேண்டும். வீட்டில் விளக்கேற்றி வழிபடும்போது பஞ்சால் திரியிடுவது மிகவும் சிறப்பானது.

## தீபங்களை ஏன் மூன்று முறை சுற்றுகின்றோம்.

தீபங்களை 3 முறை சுற்றிக்காட்ட வேண்டும். முதலில் சுற்றுவது உலக நன்மைக்காகவும், 2 ஆவது சுற்று கிராமத்தின் நன்மைக்காகவும் 3 அவது சுற்று உயிர்களின் நன்மைக்காகவும் என்று ஆகமங்கள் கூறுவதை உணர்ந்து வழிபாடாற்றி இறையின்பம் பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவும் அப்பாவும்

ஆர். பி. சாரதி - தமிழ்நாடு

## அம்மாவை வணங்குவோம்

என்னைப் பெறுவதற்கே
எத்தனைநாள் தவமிருந்தாய்!
உன்னை உடல்வருத்தி
உண்ணா நோன்பிருந்தாய்!

உடலெல்லாம் துடிதுடிக்க
உயிர் சென்று மீண்டுவர
கடல் தோற்கும் கருணையினால்
கனிவுடனே ஈன்றெடுத்தாய்!

வருந்து நானழுதேன்
வாட்டும் நோய்வலியால்
மருந்தெல்லாம் நீயருந்தி
விருந்துபல நீ திறந்தாய்!

பால்கொடுத்தாய் அமுதினைப்பேர்
பழச்சாறும் நீ கலந்தாய்
பலசுவையும் சேர்த்தென்குப்
பக்குவமாய் உணவளித்தாய்!

ஆடை அணிவித்தாய்
அழகுபல செய்வித்தாய்
ஆட்டம் பலகாட்டி
அழகுநடை பயில்வித்தாய்!
கொஞ்சும் மழலையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடிமொழி கற்பித்தாய்!
கொஞ்சமோ நீ செய்தாய்
என்செய்தாய், சொல்லத் தாயே!

## அப்பாவை வணங்குவோம்

பொன் தந்தாய் பொருள் தந்தாய்
புன்முறுவல் முகம் தேக்க
தேன் போலத் தித்திக்கும்
திண்பண்டம் பலதந்தாய்!

தோள் தந்தாய் பவனிலா
துணைவந்தாய் இருள்வழியில்
நான்பார்த்து நலம் சேர்க்க
நற்கல்வி நீ தந்தாய்!

அடித்தே பலகையினை
ஆயிரம் உடைத்தாலும்
அடித்தேனும் அணைத்தேனும்
அனுக்காமல் நீ தந்தாய்!

படித்தே கிழித்தாலும்
படத்தைக் கிழித்தாலும்
எடுத்துடனே தந்தாய் நீ
எத்தனையோ புத்தங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டுச் சட்டையிலே
உன்னுடலை மறைத்தாலும்
பட்டுச் சட்டையுடன்
பல உடையும் நீ தந்தாய்!

விந்தைப் பொம்மைகளும்
விதவிதமாய் நீ தந்தாய்
என்தந்தாய், என்தந்தாய்!
யார் தருவார் அப்பப்பா!

## திருவருட்பயன் காப்பு

திருச்சிற்றம்பளம்

நற்குஞ்சரககன்று நண்ணிற்கலை ஞானம்
கற்குஞ்சரக் கன்றுகாண்

திருச்சிற்றம்பலம் – சமயக்குரவர்கள்

நமயக்குரவர் நால்வர்
திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருநாவுக்கரசு நாயனார் சுந்தர மூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் நாயனார் நால்வரையும் சமயா சாரியார் அல்லது சமயக்குரவர் என அழைப்பார். தேவாரம் பாடிய மூவரையும் தேவாரமுதலிகள் எனவும், 1–7 திருமுறைகளும் அடங்கன் முறை என அழைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்தர்

| | | |
|---|---|---|
| நாடு | - | சோழநாடு |
| ஊர் | - | சீர்காழி |
| குலம் | - | வைத்திகப் பிராமணர் |
| வேறு பெயர்கள் | - | ஆளுடைப் பிள்ளையார் கவுணியர்கோள் காழிவேந்தர், பரமசமயகோளரி, பாலறாவாயர். |
| முதல்பாடியபதிகம் | - | தோடுடைய செவியன் ... |
| கடைசியாகப் பாடிய பதிகம் | - | காதலாகி கசிந்து... |
| திருமுறை வகுப்பு | - | 1ம் 2ம் 3ம் திருமுறைகள் |
| முதலில் அருள் பெற்ற தலம் | - | திருப்பிரமபுரம் சீர்காழி |
| முத்தி பேற்ற தலம் | - | திருப்பெருமண நல்லூர் |
| சமகாலத்து நாயன்மார் | - | அப்பூதியடிகள், திருநாவுக்கரசர், மங்கையற்கரசியார், திருத்தொண்டர், நெடுமாறன், குலச்சிறையார், குங்கிலியக்கலயர், திருநீலக்கண்ட யாழ்ப்பாணம், திருநீலநக்கர். |
| முத்தியடைந்த வயது | - | 16 முத்தியடைந்த தினம் - |
| வைகாசி மூலம் வாழ்ந்த காலம் | - | கி. பி. 7 ம் நூற்றாண்டு. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசர்

| | | |
|---|---|---|
| நாடு | - | திருமுனைப்பாடி நாடு |
| ஊர் | - | திருவாமூர் |
| குலம் | - | வேளாளர் |
| தந்தை | - | புகழனார் |
| தாய் | - | மாதினியார் |
| வேறு பெயர்கள் | - | வசீகர், ஆளுடைய அரசர், தாண்டகவேந்தர், அப்பா, உழவாரப்படையாளி. |
| முதல்பாடிபதிகம் | - | கூற்றாயினவாறு... |
| கடைசியாக பாடிய பதிகம் | - | எண்ணு கேன் என் சொல்லி... |
| திருமுறை வகுப்பு | - | 4ம், 5ம், 6ம் திருமுறைகள். |
| துமலில் அருள் பெற்ற தலம் | - | திருவதிகை வீராட்டனம் |
| முத்தி பெற்ற தலம் | - | திருப்புகலூர் |
| சமகாலத்து நாயன்மார் | - | அப்பூதியடிகள், முருகநாயனார், சிறுத்தொண்டர், நெடுமாறன், குலச்சிறையார், மங்கையற்கரசி, குங்கிலியக்கலையர், திருநீலக்கண்ட யாழ்ப்பாணம், திருநீலநக்கர் |
| முத்தியடைந்த வயது | - | 81 |
| முத்தியடைந்த தினம் | - | சத்திரைச் சதய், |
| வாழ்ந்த காலம் | - | கி.ப. 7ம் நூற்றாண்டு. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுந்தரர்**

| | | |
|---|---|---|
| நாடு | - | திருமுனைப்பாடிநாடு |
| ஊர் | - | திருநாவலூர் |
| குலம் | - | சிவப்பிராமணர் |
| தந்தை | - | சடையனார் |
| தாய் | - | இசைஞானியார் |
| வேறு பெயர்கள் | - | நம்பியாரூரர், திருநாவலூரர், வன்றொண்டர், தம்பிரான் தோழர், சேரமான்தோழர், ஆளுடைய நம்பி, |
| முதல்பாடிபதிகம் | - | பித்தா பிறைசூடி... |
| கடைசியாக பாடிய பதிகம் | - | தானெனை முன்... |
| திருமுறை வகுப்ப | - | 7ம் திரு முறை |
| முதலில் அருள் பெற்ற தலம் | - | திருவஞ்சரக்களம் |
| சமகாலத்து நாயன்மார் | - | சடையனார், கரிக்காமர், இசைஞானியார், நரசிங்க முனையார், சிறமிண்டர், சேரமான, மனக்கஞ்காரர், |
| முத்தியடைந்த வயது | - | 18 |
| முத்தியடைந்த தினம் | - | ஆடிச்சோதி. |
| வாழ்ந்த காலம் | - | கி. பி. 9 ம் நூற்றாண்டு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்சிந்தனை

அன்பு காட்டு ஆனால் அடங்கிவிடாதே
இரக்கம் காட்டு அனால் ஏமாந்து போகாதே
பணிவாய் இரு ஆனால் கோழையாய் இராதே
கண்டிப்பாய் இரு ஆனால் கோபப்படாதே
சிக்கனமாய் இரு ஆனால் போக்கிரியாய் இராதே
சுறுசுறப்பாய் இரு ஆனால் பதட்டப்படாதே
தா்மம் செய் ஆனால் ஆண்டியாகிவிடாதே
பொருளைத் தேடு ஆனால் பேராசைப்படாதே
உழைப்பை நம்ப ஆனால் கடவுளை மறவாதே

| | | |
|---|---|---|
| வருவதும் போவதும் | - | இன்பம், துன்பம் |
| வந்தால் போகாதது | - | புகழ், பழி |
| போனால் வராதது | - | மானம், உயிர் |
| தானாக வருவது | - | இளமை, மூப்பு |
| நம்முடன் வருவது | - | பாவம், புண்ணியம் |
| அடக்க முடியாதது | - | ஆசை, ஏக்கம் |
| தவிக்க முடியாதது | - | பசி, தாகம் |
| நம்மால் பிரிக்க முடியாதது | - | பந்தம், பாசம் |
| அழிவைத் தருவது | - | பொறாமை, கோபம் |
| எல்லோருக்கும் சமமானது | - | பிறப்ப, இறப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| **நிறுவனங்களும் தொழிற்சாலைகளும்** | **அமைவிடம்** |
|---|---|
| சோயா ஆராய்ச்சி நிலையம் | – பள்ளேகல, கன்னறுவா |
| விவசாய நெல் ஆராய்ச்சி நிலையம் | – மகா இலுப்பலம, பத்தலகொட |
| இறப்பர் ஆராய்ச்சி நிலையம் | – அகலவத்தை |
| பருத்தி ஆராய்ச்சி நிலையம் | – அம்பாந்தோட்டை |
| விவசாய கால்நடை ஆராய்ச்சி நிலையம் | – மகா இலுப்பலம |
| கட்டிப்பால் தொழிற்சாலை | – பொலன்நறுவை |
| புடவைத் தொழிற்சாலை | – வியாங்கொட, பூகொட |
| காகிதத் தொழிற்சாலை | – வாழைச்சேனை எம்பிலிப்பிட்டிய |
| சீமெந்துத் தொழிற்சாலை | – கந்தளாய், ஹிங்குரான |
| மட்பாண்டத் தொழிற்காலை | – ரத்தோட்ட |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பண்டைய தகவல்கள்

**1. எமது நாட்டின் விவசாய அபிவிருத்தியில் அதிக அக்கறை காட்டிய மன்னர்கள்**

- பண்டு காபயன் - பசவக்குளமட் (அபயவாவி - முதலாவது குளம்)
- மகாசேனன் -மின்னேரியா
- தேவநம்பியதீசன் - தீசவாவி
- பராக்கிரமபாகு- பராக்கிரம சமுத்திரம்

**2. எமது பண்டைய தகவல்களை பெற்றுக்கொள்ள உதவும் சான்றுகள்**

- கல்வெட்டுக்கள்
- தொல்பொருள்கள்
- பராமக்கிரமபாகு கதை
- பண்டைய நாணயங்கள்
- மகாவம்சம், சூளவம்சம், தீபவம்சம் போன்ற நூல்கள்
- அகழ்வாராய்ச்சிப் பொருள்கள்
- நாட்டார் பாடல்கள்
- ஓவியங்கள், சிற்பங்கள், கட்டடக்கலை

**3. எமது நாட்டில் சைவசமய மறுமலர்ச்சிக்கு உழைத்தவர்கள்**

ஸ்ரீலஸ ஆறுமுக நாவலர், சேர் பொன். இராமநாதன், சேர் பொன் அருணாசலம்

**4. பௌத்த சமய வளர்ச்சிக்கு உழைத்தவர்கள்**

அநாகரிக தர்மபாலா

**5. இஸ்லாம் சமய வளர்ச்சிக்கு உழைத்தவர்**

சித்திலெப்பை

**6. இலங்கையின் தொன்மையான ஓவியங்கள்**

சீகிரிய ஓவியம், இசுரு முனிய ஓவியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. செதுக்கல் வேலைகளுக்குப் பிரபல்யமான இடங்கள்**

எம்பக்க தேவாலயம்(மரம்) கண்டி, யாப்பகூவ சிங்கம் (குருநாகல்) தலதாமாளிகை (கண்டி)

**8. இலங்கையில் உள்ள அதிசயமாகக் கணிக்கப்படுவது**

சிகிரிய ஓவியம்

**9. பண்டைய கலைத்துவப் படைப்புக்கள் காணப்படும்இடங்கள்**

பொலன்னறுவை, அநுராதபுரம், கண்டி, குருநாகல், கம்பளை, ருகுணை, யாழ்ப்பாணம்.

**10. தங்கவேலி** - புனித வெள்ளரசுமரம்

**தங்க கூரை** - தலதா மாளிகை

## பொது அறிவுத் துளிகள்

**1. இலங்கயின் தேசிய மரம்**

நாக மரம்

**2. இலங்கையின் தேசிய பறவை**

காட்டுக்கோழி

**3. இலங்கையின் தேசிய மலர்**

காட்டுக்கோழி

**4. இலங்கையின் முதல் ஜனாதிபதி**

வில்லியம் கொபல்லாவ

**5. இலங்கையின் வரைபடத்தை வரைந்தவர்**

குளோடியஸ் தொலமி

**6. இலங்கையின் மிகப் பெரிய மலை எது?**

பேதுருதலாகல மலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. இலங்கையின் பௌத்த கொடியை உருவாக்கியவர் யார்?**
திரு.கேணல் ஒல்கொட்

**8. இலங்கை சித்திர சிற்பக் கலை ஆராய்ச்சியாளர் யார்?**
டாக்டர் ஆனந்த குமாரசுவாமி

**9. இலங்கைக்கு புனித வெள்ளரச மரக் கிளையைக் கொண்டு வந்தவர் யார்?**
பிக்குணி சங்கமித்தை

**10. இலங்கையில் சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்கள் எவை?**
பொலனறுவை, கண்டி, மகியங்கனை, களனி.

**11. இலங்கையில் குகை ஓவியங்கள் காணப்படும் இடங்கள் எவை?**
சிகிரியா, தம்புள்ள, களனிவிகாரை, ஹிந்தலாகாவ, திம்புலாகல.

**12. பராக்கிரமபாகு சிலை எங்குள்ளது?**
பொலனறுவையில்

**13. மரத்தளபாடத்திற்கு புகழ்பெற்ற இடம் எது?**
மொரட்டுவ

**14. பாய் இழைத்தல், தும்பு வேலைக்கு சிறந்த இடம் எது?**
காலி, தும்பறை

**15. இலங்கையில் முதன் முதலில் வெளிவந்த பதிரிகைள்?**
சிங்களம் - சிங்கள ஹன்ட, தமிழ் - உதய தாரகை

**16. முகமூடி அலங்காரம் செய்வதில் சிறந்த இடம் எது?**
அம்பலாங்கொடை

**17. வெள்ளி வேலைக்கு பிரசித்தி பெற்ற இடம் எது?**
கண்டி, யாழ்ப்பாணம்.

**18. பூமியின் ஈர்ப்பு விசையைக் கண்டறிந்தவர் யார்?**
சேர். ஐசாக் நியூற்றன்

**19. விபுலானந்தர் இயற்றிய சிறந்த நூல் எது?**
யாழ் நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**20. மின்குமிழைக் கண்டுபிடித்தவர் யார்?**

தோமஸ் அல்வா எடிசன்

**21. செங்கல், ஓடுகள் செய்யப்படும் இடங்கள்**

ஒட்டுசுட்டான், நீர்கொழும்பு, அநுராதபுரம்

**22. எல்லா மதத்தவர்களும் போற்றி வழிபடும் மலை எது?**

சிவனொளிபாத மலை

**23. இலங்கையின் உயரமான அணைக்கட்டு எது?**

விக்ரோரியா

**24. இலங்கையின் இயற்கைத் துறைமுகம் எது?**

திருகோணமலைத் துறைமுகம்

**25. இலங்கையின் தேசாதிபதியாக இருந்த முதல் இலங்கையர்**

சேர். ஒலிவர் குணதிலக

**26. இலங்கையில் இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு**

1945

**27. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடம் எது?**

சபுகஸ்கந்த

**28. தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?**

தலவாக்கலை

**30. இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?**

அகலவத்தை

**31. நெல் ஆராயச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?**

மகா இலுப்பள்ளம

**32. காகித தொழிற்சாலை அமைந்துள்ள இடங்கள்**

வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டிய

**33. இலங்கை ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் எது?**

ஜனாதிபதி மாளிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**34. இலங்கைப் பிரதமரின் வாசஸ்தலம் எது?**
அலரிமாளிகை

**35. கலாசார முக்கோணப் பிரதேசம் உள்ளடக்கப்படும் பகுதி எது?**
கண்டி, அனுராதபுரம், பொலன்னறுவை.

**36. இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயம் அமைந்துள்ள இடம்**
கட்டுநாயக்க, பியகம, கொக்கல.

**37. இலங்கையின் தேசபிதா யார்?**
டி.எஸ்.சேனாநாயக்க

**38. நவீன விளையாட்டுக்கள் எவை?**
கிரிக்கெட், காற்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், வொலிபோல், வலைப்பந்தாட்டம்

**39. உள்ளரங்க விளையாட்டுக்கள் எவை?**
சதுரங்கம் (செஸ்), மேசைப் பந்து(டேபிள் ரெனிஸ்), பூப்பந்து (பட்மின்ரன்) கரம்

**40. சுவட்டு நிகழ்ச்சிகள் எவை?**
குருந்தூர ஓட்டம், மத்திய குருந்தூர ஓட்டம், மத்திய தூர ஓட்டம், நெடுந்தூர ஓட்டம், தடை தாண்டல்.

**41. மைதான நிகழ்ச்சிகள் எவை?**
நீளம் பாய்தல், உயரம் பாய்தல், முப்பாய்ச்சல், கோலூன்றிப் பாய்தல்.

**42. எறிதல் நிகழ்ச்சிகள் எவை?**
குண்டெறிதல் பரிதி வட்டம் எறிதல், ஈட்டி எறிதல்

**43. தலதா மாளிகையைக் கட்டுவித்த மன்னன் யார்?**
கீர்த்தி ஸ்ரீ மேகவர்ணன்

**44. வேகமாக பறக்கும் பறவை?**
புறா

**45. இலங்கையில் பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட்ட ஆண்டு**
1931 ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**46. உலகில் மிகச் சிறிய நாடு**

வத்திக்கான்

**47. இஸ்லாமியரின் விசேட தினங்கள் எவை?**

நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள், நபிகள் நாயகம் (ஸல்) பிறந்தநாள்.

**48. பௌத்தர்களின் விசேட தினங்கள்**

வெசாக், பொசன், சித்திரைப் புதுவருடப் பிறப்பு

**49. சைவ சமயத்தவர்களின் விசேட தினங்கள்**

தைப்பொங்கல், தீபாவளி. நவராத்திரி, சித்தரை வருடப்பிறப்பு.

**50. சிகிரியாக் கோட்டையைக் கட்டிய மன்னன் யார்?**

காசியப்பன்

**51. சூரியனைச் சுற்றி வரும் ஒன்பது கோள்களும் எவை?**

புதன், வெள்ளி, புவி. செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்ரியூன், புளுட்டோ

**52. வழியிலுள்ள வாயுக்கள் எவை?**

நைதரசன், ஒட்சிசன், காபனீரொட்சைட்டு, சடத்துவ வாயுக்கள், நீராவி.

**53.வளிமண்டலத்தின் அமுக்கத்தை அளக்கப் பயன்படும் கருவி**

பாரமானி

**54. மழைவீழ்ச்சியை அளக்கப்பயன்படும் கருவி எது?**

மழைமானி

**55. காற்றின் திசையை அறிய பயன்படுத்தப்படும் கருவி**

திசையறி கருவி

**56. வெப்பநிலையை அளப்பதற்கு பயன்படும் கருவி**

வெப்பமானி

**57. கிராமிய விளையாட்டுக்கள் எவை?**

கிளித்தட்டு, கிட்டியடித்தல், வாரோட்டம், சடுகுடு, போர்த்தேங்காய் அடித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயக்க மருந்தைக் கண்டு பிடித்தவர் யார்?

ஜேம்ஸ் அம்சன்

உலகில் அதி நீண்ட கடற்கரையைக் கொண்ட நாடு எது?

நோர்வே

உலகில் மிக உயரமான விமான நிலையம் உள்ள இடம் எது?

திபெத் லாசா

பிளாஸ்ரிக் ரூபா நோட்டுக்களை அறிமுகப்படுத்திய நாடு எது?

அவுஸ்ரேலியா

விண்வெளிக்குச் சென்ற இரண்டாவது இந்தியப் பெண் யார்?

சுனிதா வில்லியம்ஸ்

உலகில் உள்ள பல்லி இனங்களில் மிகப் பெரியது எது?

மானிட்டர் பல்லி இனம் (நீளம் 4.5 அடி)

18 வது உலகக் கிண்ண கால் பந்தாட்ட வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்த நாடு எது?

இத்தாலி

உலகிலேயே மிகப்பெரிய கப்பல் எது?

குயில் எலிசபத்

இராமகிருஸ்ணரின் பிள்ளைத் திருநாமம் யாது?

சுந்தரர்

விலங்கு இனத்தைச் சேர்ந்த பிராணி?

குரங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையை இலகுவாக்கும் வழிகள்

நாளாந்தம் சராசரி மனிதன் அதிகவேலைகள் செய்ய வேண்டியுள்ளது. அவ்வேலைகளை இலகுவாகவும், குறைந்த நேரத்திலும் முடிக்க வேண்டியுள்ளது. இதனால் அவ்வேலைகளை குழுவாகவும், பல்வேறு உபகரணங்கள் கொண்டும், இயந்திரப் பொறிகளைக் கொண்டும் நிறைவேற்றுகின்றான்.

**01. பாடசாலையில் கூட்டாகச் செய்யும் வேலைகள்**

☆ பாடசாலைச் சுற்றாடலைச் சுத்தம் செய்தல்

☆ வேலியடைத்தல் ☆மைதானத்தை சுத்தம் செய்தல்

☆ வகுப்பறைச் சுத்தம்

☆ மூலிகைத்தோட்டம், பூந்தோட்டம் பராமரித்தல்

**02. சமையலறையில் பயன்படுத்துபவை**

துருவுபலகை, கத்தி, அம்பி, அரைக்கும் இயந்திரம், உரல், அரிக்கும் சட்டி, மின்கேத்தல் மின்னடுப்பு, மீன் ரின் வெட்டும் உபகரணம் போத்தல் மூடி திறக்கும் உபகரணம்.

**03. மேசன் வேலை செய்பவர்கள் பயன்படுத்துபவை**

சாந்தகப்பை, தூக்குக்குண்டு, நீர்மட்டம், மணியாசு, மட்டப்பலகை, சவள், இரும்பு, அரியும் வாள், சுத்தியல்

**04. தச்சுவேலை செய்பவர்கள் பயன்படுத்துபவை**

சீவுளி, கைவாள், உளி, தட்டுப்பொல்லு துறப்பணம், மூலமட்டம், திருகாணி செலுத்தி

**05. கொல்லன் (இரும்பு வேலை செய்பவர்) பயன்படுத்துபவை**

இடுக்கி, பட்டடை, ஆமார், சுத்தியல் உலோகவாள், பிடிச்சுராவி, துருத்தி துறப்பணம், வெட்டிரும்பு

**06. விவசாயிகள் பயன்படுத்துபவை**

கலப்பை, அரிவாள், மண்வெட்டி, பரப்புப் பலகை, வேலக்காரன் கம்பு, குப்பைவாரி, முள்ளு மண்வெட்டி, கைமுள்ளு, பூவாளி, மருந்து தெளிகருவி, தண்ணீர் பம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது உணவு

01. பிரதான உணவுக் கூறுகள்
மாப்பொருள் - சக்தி வழங்குவது
புரதம் - வளர்ச்சிக்குதவுவது
கொழுப்பு - உடலை சூடாக வைத்திருப்பது, சக்தி தருவது
உயிர்ச்சத்து - உடலை நோய்களிலிருந்து பாதுகாப்பது
கனிப்பொருள் - உடலை நோய்களில் இருந்து காப்பது

02. மாப்பொருள் அதிகம் உள்ள உணவுப் பொருட்கள்
தானியங்கள், கிழங்குவகை, பலாக்காய், ஈரப்பலா, கோதுமை, சீனி, கருப்பட்டி

03. புரதம் அதிகளவில் உள்ள உணவுப்பொருட்கள்
பால், முட்டை, மீன், இறைச்சி, சோயா, கடலை, அவரை வகை, போஞ்சி, பயறு, பருப்பு, கருவாடு

04. கொழுப்பு அதிகளவில் உள்ள உணவுகள்
தேங்காய் எண்ணெய், இறைச்சி, மாஜரீன், நிலக்கடலை, வெண்ணெய், பட்டர், பாற்கட்டி, தேங்காய்

05. உயிர்ச்சத்து அதிகமுள்ள உணவுகள்
பழங்கள்

06. கனிப்பொருட்கள் அதிகமுள்ள உணவுகள்
பச்சை இலைக்கறிவகை, காய்கறி

07. கல்சியம் அதிகமுள்ள உணவுகள்
சிறு மீன்கள், நெத்தலி, கருவாடு, பால், பால் உற்பத்திப் பொருட்கள்

08. அயடின் அதிகமுள்ள உணவுகள்
கடல் உணவுப் பொருட்கள், கறிஉப்பு, உப்புத்தன்மையான சூழலில் வளரும் தாவரங்கள், கருவாடு

09. விற்றமின் A அதிகமுள்ள உணவுகள்
மஞ்சள் நிற மரக்கறிகள், பழங்கள், ஈரல், முட்டை, பால்

10. விற்றமின் B அதிகமுள்ள உணவுகள்
தவிடு நீக்காத அரிசி, பச்சை நிற மரக்கறி, தானியவகை, இறைச்சி, மீன், முட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. விற்றமின் C அதிகமுள்ள உணவுகள்
பழவகைகள், மரக்கறி வகைகள், புளிப்புச் சுவையுடைய பழங்கள்

12. விற்றமின் D அதிகமுள்ள உணவுகள்
பால். முட்டை, மீனெண்ணை, காலைச் சூரியஒளி

13. ஆரோக்கிய வாழ்விற்கு அவசியமான செயற்பாடுகள்

- சமநிலை உணவினை உட்கொள்ளல்
- உடற்பயிற்சி செய்தல்
- மனதை ஒருநிலைப்படுத்தல்

14. உணவைப்பாதுகாத்து வைக்கும் முறைகள்

- **உலர வைத்தல்** - பலாக்காய், ஈரப்பலாக்காய், எலுமிச்சம்பழம், ஒடியல், பனாட்டு, மீன், தானியம், மிளகாய், பாகற்காய், பனங்கிழங்கு, பிலிங்பழம், முந்திரிகைப்பழம்
- **மணலில் புதைத்து வைத்தல்** - எலுமிச்சை, பனங்கிழங்கு, இஞ்சி, முருங்கைக்காய்
- **உப்பிடுதல்** - மீன், பச்சைமிளகாய், எலுமிச்சை, மாங்காய்
- **தகரத்திலடைத்தல்** - மீன், பழங்கள், பால்மா, பழப்பாகு பானங்கள், பிஸ்கட்
- **புகையூட்டல்** - கருவாடு, புகையிலை
- **பொரித்துவைத்தல்** - மீன், இறைச்சி
- **பொலித்தீன் பைகளில் அடைத்தல்** - தேயிலை, பால்மா உப்பு, நூடில்ஸ், பிஸ்கட்
- **குளிரூட்டியில் வைத்தல்** - இறைச்சி, மீன், பானம், பழங்கள் காய்கறிகள், ஐஸ்கிறீம்
- **சீனிப்பாணியிடல்** - ஈரப்பலாக்காய், பலாக்காய்

15. உணவுப் பொருட்களை நீண்டகாலம் பேணப்படுவதால் கிடைக்கும் நன்மைகள்

- வீண்விரயமாகுவதைத் தவிர்த்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அரிதாகக் கிடைக்கும் காலங்களில் பயன்படுத்தல்
- ஏற்றுமதி, இறக்குமதி செய்யவும், வியாபாரம் செய்யவும் இலகு
- சுகாதாரத்திற்கு ஏற்றது
- உணவுத்தட்டுப்பாட்டுக்கு தீர்வாகும்
- பொருளாதாரப்பயன்

16. இலைக்கஞ்சி தயாரிக்கும் படிமுறைகள்
    - இலைகளை நன்கு சுத்தம் செய்தல்
    - போசனைத்தரமுடைய அரிசி வகையொன்றினைத் தெரிவு செய்தல்
    - சுத்தம் செய்த இலைகளை இடித்தல்
    - கஞ்சியை அதிக நேரம் வேகவைக்காது பச்சை நிறம் மாறாத நிலையில் கஞ்சியைத்தயாரித்தல்

17. போசனைப் பதார்த்தம் அழியாமல் உணவு சமைக்க வேண்டிய முறைகள்
    - காய்கறிகளை வெட்டுவதற்கு முன் கழுவுதல்
    - கறி இறக்கிய பின் புளி சேர்த்தல்
    - அதிக நேரம் அவிக்காதிருத்தல்
    - நீராவியில் அவித்தல்
    - சிறு துண்டுகளாக வெட்டாது பெரிய துண்டுகளாக வெட்டுதல்
    - பச்சையாக சம்பல் செய்து உண்ணல்

18. எந்த நீரில் காய்கறி, பழங்களைக் கழுவுதல் வேண்டும்?
    உப்பு நீரில்

19. உணவு சமைக்கக் கூடிய பாத்திரம்
    மண் பாத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. கறி உப்பு எவ்வாறு பாதுகாக்கவேண்டும்

சூரிய ஒளி படாத இடத்திலும், ஈரலிப்பில்லாத இடத்திலும், காற்றுப் புகாதவாறும், கண்ணாடிப்பாத்திரத்திலும் வைத்திருத்தல் வேண்டும். கறியுப்பில் அயடின் கலந்திருப்பதால் கழுவிப்பாவிக்கக் கூடாது.

21. உணவு சமைப்பவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

- ஏப்ரன் மேலங்கி அணிந்திருத்தல்
- தொப்பி அணிந்திருத்தல்
- துடைதுண்டு வைத்திருத்தல்
- நகங்கள் வெட்டி சுத்தமாக இருத்தல்

**குறைபாட்டு நோய்கள்**

22. உயிர்ச்சத்து A குறைபாட்டால் ஏற்படும் நோய் - மாலைக்கண்
23. உயிர்ச்சத்து B குறைபாட்டால் ஏற்படும் நோய் - பெரிபெரி
24. உயிர்ச்சத்து C குறைபாட்டால் ஏற்படும் நோய் - ஸ்கேவிநோய்
25. உயிர்ச்சத்து D குறைபாட்டால் ஏற்படும் நோய் - என்புருக்கி
26. உயிர்ச்சத்து K குறைபாட்டால் ஏற்படும் நோய்
    குருதி உறையாமை, தோல்வியாதி
27. இரும்புச்சத்துக் குறைபாட்டால் ஏற்படும் நோய் - குருதிச்சோகை
28. கல்சியம் குறைபாட்டால் ஏற்படும் நோய்
    பல், எலும்பு சம்பந்தமான நோய்கள்
29. அயடின் குறைபாட்டால் ஏற்படும் நோய் - தொண்டைக் கழலை
30. உணவை அசுத்தமாக்குவது
    கரப்பான் பூச்சி, வீட்டு ஈ, பல்லி விழுதல், பூனை, நாய் எச்சிற்படுத்தல், நஞ்சாதல், பற்றீரியாக்கள்
31. நீரில் கரையக் கூடிய விட்டமின்கள்- விற்றமின் B, விற்றமின் C
32. திறந்த நிலையில் உணவு சமைக்கவேண்டியது - மரவள்ளி
33. அறுசுவைகள்

| | |
|---|---|
| இனிப்பு | - வெல்லம் |
| கசப்பு | - வேம்பு |
| புளிப்பு | - புளி |
| உவர்ப்பு | - உப்பு |
| உறைப்பு | - மிளகாய் |
| துவர்ப்பு | - பாக்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போக்குவரத்து

01. போக்குவரத்து மார்க்கங்கள்
    - தரை - கார், பஸ், துவிச்சக்கரவண்டி, புகையிரதம், லொறி, வான் போன்றவை
    - வான் - விமானம்
    - கடல் - கப்பல், படகு, தோணி

02. பண்டைக்கால போக்குவரத்துச் சாதனங்கள்
குதிரை, பல்லக்கு, தேர், யானை, மாட்டு வண்டி, கட்டு மரம், பாய்க்கப்பல்

03. பண்டைய போக்குவரத்தில் கிடைத்த நன்மைகள்
    - சூழல் மாசடையவில்லை
    - உடற்பயிற்சி கிடைத்தது
    - எரிபொருள் தேவைப்படவில்லை
    - வாகனச் செலவுகள் இல்லை

04. பண்டைய போக்குவரத்தால் ஏற்படும் தீமைகள்
    - நீண்ட நேரப்பயணம்
    - சாதாரண மக்கள் காலநடையாகவே சென்றமை

05. தரையில் தற்போது அதிவேகமாக செல்லக் கூடிய போக்குவரத்துச் சாதனம்
மின்சாரப் புகையிரதம்

06. பிரதான வீதிகள்
    - A1 - கொழும்பு - கண்டி
    - A2 - கொழும்பு - வெள்ளவாயா
    - A3 - பேலிய கொட் - புத்தளம்
    - A4 - கொழும்பு - மட்டக்களப்பு
    - A5 - பேராதனை - செங்கலடி
    - A6 - அம்பேபுஸ்ஸ - திருகோணமலை
    - A7 - அவிஸ்ஸாவெல - இரத்தினபுரி
    - A8 - பாணந்துறை - இரத்தினபுரி
    - A9 - கண்டி - யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- A10 - கண்டி - புத்தளம்
- A12 - புத்தளம் - திருகோணமலை
- A15 - மட்டக்களப்பு - திருகோணமலை
- A32 - நாவற்குழி - மன்னார்
- A34 - மாங்குளம் - முல்லைத்தீவு
- A35 - பரந்தன் - முல்லைத்தீவு

07. புகையிரதப் பாதைகள்
- கொழும்பு - புத்தளம்
- கொழும்பு - மாத்தறை
- கொழும்பு - இரத்தினபுரி
- கொழும்பு - பதுளை
- கொழும்பு - கண்டி, மாத்தளை
- கொழும்பு - திருகோணமலை - மட்டக்களப்பு
- கொழும்பு - மன்னார்
- கொழும்பு - காங்கேசன்துறை

08. புகையிரதச் சந்திகள்
பொல்காவெல, மாகோ, கல்லோயா, பேராதனை, மதவாச்சி

09. சுற்றாடல் நேயப் போக்குவரத்துச் சாதனம்
துவிச்சக்கரவண்டி

10. பருவகாலச்சீட்டு ( சீசன் ரிக்கற்) மூலம் குறைந்த செலவில் பயணஞ் செய்யக் கூடிய போக்குவரத்துச் சாதனங்கள்
தொடரூந்து, பேரூந்து

11. வீதிகளில் போக்குவரத்து விதிகளை கண்காணிப்பது
போக்குவரத்துப் பொலிசார்

12. சமிக்ஞை விளக்குக் காணப்படுவது
சனநெரிசல் மிக்க நகரங்களில் உள்ள பிரதான சந்திகளில்

13. நாட்டுக்கு நாடு தேவையான அத்தியாவசிய பொருட்களை ஏற்றி இறக்கப் பயன்படுத்தப்படும் சாதனம்
கப்பல்

14. இலங்கையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள இடம்
அம்பாந்தோட்டையிலுள்ள வீரவல எனும் இடத்தில்

15. அதிக விபத்துக்களுக்கு காரணம்
கவனயீனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்

**01. உலகிலே நாம் பயன்படுத்தத்தக்க நீர் 01% வீதமே உள்ளது.**

**02. நீரின் பயன்பாடுகள் -** குடித்தல், குளித்தல், கழுவுதல், சமைத்தல்

**03. நீர் தொடர்பாக நாம் எதிர்நோக்கும் சவால்கள்**

☆ சனத்தொகை அதிகரிப்பினால் நுகரப்படும் நீரின் அளவும் அதிகரிப்பு ஏற்படுதல்.

☆ சூழல் சீர்கேடுகளால் நீர்வற்றுதல் வறட்சி ஏற்படுதல்.

☆ எதிர்காலச் சந்ததிக்கு நீர் பற்றாக்குறை ஏற்படலாமென்ற அச்ச நிலை.

**03. நீரைச் சிக்கனமாகப்பயன்படுத்தும் வழி முறைகள்**

☆ குளிக்கும், கழுவும் கழிவு நீரைத்தாவரங்களுக்கு பாய்ச்சுதல்

☆ குழாய் சீரைக் குறைந்த அளவில் திறந்து பயன்படுத்தல்

☆ நீர்க்குழாய்களை இறுக்கமாக மூடி விடல்

☆ தாவரங்களுக்கு அதிகளவு நீரைப்பாய்ச்சாது தேவையானளவு பாய்ச்சுதல்

**04. சுத்தமான நீர் நிலைகள்** - ஆறு, குளம், கிணறு

**05. நீரின் மூன்று நிலைகள்**

திண்மம் - **பனிக்கட்டி** திரவம் - **நீர்** வாயு - **நீராவி**

**06. சுத்தமான நீரின் இயல்புகள்**

சுவை இல்லை மணம் இல்லை நிறம் இல்லை

**07. உடலில் இருந்து நீர் வெளியேறும் முறைகள்**

வியர்வை, சிறு நீர், மலம், வெளிச்சுவாசம்

**08. எமது உடற் சமநிலையைப் பேணுவது** - நீர்

**09. மிகவும் சுத்தமான நீராகக்கருதக் கூடியது**

நன்றாகக் கொதிக்கவைத்து ஆறிய பின் வடிகட்டிய நீர்

**10. நீரைச் சுத்தமாக்கும் முறைகள்**

குளோரின் இடல், நன்றாக கொதிக்கவைத்தல், வடிகட்டல்

**11. நீர் அசுத்தமாகும் சந்தர்ப்பங்கள்**

☆ தொழிற்சாலைக் கழிவுகள் நீருடன் கலத்தல்

☆ மித மிஞ்சி செயற்கை உரம், கிருமிநாசினிப்பாவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**12. அசுத்த நீரினால் பரவும் நோய்கள்**

வாந்திபேதி, வயிற்றோட்டம், வயிற்றுளைவு, நெருப்புக்காய்ச்சல், மஞ்சட்காமாலை

**13. நீர்வட்டம்**

நீர் → நீராவி → முகில்கள் → ஒடுங்கல் → மழை

**14. நீரில் மிதக்கும் திரவங்கள்**

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், ஒயில், தேங்காய் எண்ணெய் போன்ற எண்ணெய்வகைகள்

**15. நீரில் மிதக்கும் பொருள்கள்**

றெஜிபோம், பனிக்கட்டி, எண்ணெய் வகை, பிளாஸ்ரிக் பொருள், மரகுற்றி, தேங்காய்

**16. நீரோடு தொடர்புடைய தமிழரின் திருமணப் பழக்கவழக்கங்கள்**

- ✯ மணமகளை தோழன் கால் கழுவி வரவேற்றல்
- ✯ நீர் சிரம்பிய நிறைகுடம் வைத்தல்
- ✯ நீர்ப்பாத்திரத்திலிட்ட மோதிரத்தை மணமக்கள் தேடி எடுத்தல்

**17. நீரோடுதொடர்புடைய சிங்களவரின் திருமணப்பழக்க வழக்கங்கள்**

- ✯ புதுமணத்தம்பதிகளுக்கு கையில் நீர் வார்த்தல்
- ✯ நீர்ப்பாத்திரம் கொடுத்து வரவேற்றல்
- ✯ புதுமணத்தம்பதியர் முன்னால் நிரம்பிய பாத்திரத்தில் வெண்ணிறப்பூக்களைப் போட்டு எடுத்துச் செல்லல்.

**18. சிங்களவர்கள் தமது புதுவருடத்தன்று நீருடன் தொடர்புடைய பழக்க வழக்கங்கள்**

- ✯ கிணற்றுடன் கொடுக்கல் வாங்கல்
- ✯ புதுவருடத்தினத்தில் குளித்தல்
- ✯ பழைய வருடத்தில் குளித்தல்

**19. தமிழர்கள் தமது சமயச்சடங்குகளின் போது நீருடன் தொடர்புடைய பழக்கவழக்கங்கள்**

- ✯ சித்திரைப் புதுவருடத்தில் மருத்து நீர் வைத்து நீராடல்
- ✯ ஆலயங்களில் பூசைக்கும் அபிஷேகம் செய்ய நீர் பயன்படுத்துதல்
- ✯ பிரசாதமாக நீர் தீர்த்தமாக வழங்குதல்
- ✯ ஆலயத்தினுள் பிரவேசிக்கு முன் நீரால் கால் கழுவுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதம்

## எண்கள் - Numbers

1) முழுஎண்கள் (Whole Numbers) :- 0, 1, 2, 3, 4, 5, 6, 7, .......

2) எண்ணும் எண்கள் (Counting Numbers) :- 1, 2, 3, 4, 5, ......

3) நேர் நிறை எண்கள் (Z+) (Positive integers) :- : 1, 2, 3, 4, 5, 6, .........

4) நிறை எண்கள் (Z) (Integers) :- ........., -4, -3, -2, -1, 0, 1, 2, 3, ......

5) இயற்கை எண்கள் (N) (Natural Numbers) :- 0, 1, 2, 3, 4, 5, ......

6) சேர்த்தி எண்கள் (Composite Numbers) :- 4, 6, 8, 9, 10, 12, 14, 15, 16, ......

7) மெய்யெண்கள் (Real Numbers) :- -5, -4, $-3\frac{1}{2}$, -2.5, 0, 1, $3\frac{2}{5}$, 6.05,...... $\sqrt{2}, \sqrt{3}, \sqrt{5}$ .......

8) முதன்மை எண்கள் (Prime Numbers) :- 2, 3, 5, 7, 11, 13, 17, 19, 23, 29, ......

9) முக்கோணி எண்கள் (Triangular Numbers) :- 1, 3, 6, 10, 15, 21, 28, ......

10) சதுர எண்கள் (Square Numbers) :- 1, 4, 9, 16, 25, 36, 49, .....

11) ஒற்றை எண்ள் (Odd Numbers) :- 1, 3, 5, 7, 9, 11, 13, .....

12) இரட்டை எண்கள் (Even Numbers) :- 2, 4, 6, 8, 10, 12, 14, .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுட்டி வடிவமும் மடக்கை வடிவமும்

1) $2^4 = 2 \times 2 \times 2 \times 2 = 16$

2) $3^3 = 3 \times 3 \times 3 = 27$

3) $a^2 = a \times a$

4) $0.1 = 1/10 = 1/10^1 = 10^{-1}$

5) $0.01 = 1/100 = 1/10^2 = 10^{-2}$

6) $x^0 = 1$

7) $\dfrac{64 \times 512}{128} = \dfrac{2^6 \times 2^9}{2^7} = 2^{6+9-7} = 2^8 = 256$

8) $a^4 \times a^8 = a^{4+8} = a^{12}$

9) $P^6 \div P^3 = P^{6-3} = P^3$

10) $(x^3)^5 = x^{3\times5} = x^{15}$

11) $125^{2/3} = (5^3)^{2/3} = 5^{3\times2/3} = 5^2 = 25$

12) $b^5 - b^8 = b^{5-8} = b^{-3} = {}^1/b^3$

$2^3 = 8$ ; $\log_2 8 = 3$

சுட்டி வடிவம்    மடக்கை வடிவம்

$a^m x a^n = a^{m+n}$

$a^m / a^n = a^{m-n}$

$(a^m)^n = a^{m \times n} = a^{mn}$

$10^3 = 1000$ ; $\log_{10} 1000 = 3$

$a^x = N$ எனின் $\log_a N = x$ அல்லது $\log_a N = x$ எனின் $a^x = N$

மடக்கை அட்டவணைகளை முதன்முதலாக அறிமுகஞ்செய்த பெருமை இத்தாலியைச் சேர்ந்த ஜோன் நேப்பியர் (John Napier - கி.பி.1550 - கி.பி.1617) என்ற கணிதவியலாளருக்கு உரியதாகும். அவருடைய சமகாலத்தவரான பிறிக்ஸ் என்ற கணிதவியலாளர் மேலும் விருத்தி செய்து முன்வைத்தார். தற்காலத்தில் கணிகருவியின் பயன்பாடு அதிகரித்தமையால் நவீன யுகத்தில் மடக்கை அட்டவணை பயன்படுத்தப்படுவது அரிதாகிவருகின்றது.

$\log_a(mn) = \log_a m + \log_a n$

$\log_a(m/n) = \log_a m - \log_a n$

$\log_a a = 1$ , $\log_a 1 = 0$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்சரகணிதக் கோவைகளின் காரணிகள்

1. $3a + 9 = 3(a+3)$
2. $4x^2 + 6x = 2x(2x + 3)$
3. $2pq - 4p^2q = 2pq(1-2p)$
4. $a^2bc + ab^2c - abc^2 = abc(a+b-c)$
5. $x(a+b) + y(a+b) = (a+b)(x+y)$
6. $p(a-b) - q(b-a) = p(a-b) + q(a-b) = (a-b)(p+q)$
7. $x^2+7x+10 = x^2 + 5x + 2x + 10 = x(x+5) + 2(x+5) = (x+5)(x+2)$
8. $a^2-8a+12 = a^2-2a-6a + 12 = a(a-2) - 6(a-2) = (a-2)(a-6)$
9. $x^2-7x-8 = x^2+x-8x-8 = x(x+1) - 8(x+1) = (x+1)(x-8)$
10. $-x^2-x+6 = -x^2+2x-3x+6 = x(-x+2) + 3(-x+2) = (-x+2)(x+3)$
    $= (2-x)(x+3)$

$$x^2-y^2 = x^2+0-y^2 = x^2-xy+xy-y^2 = x(x-y)+y(x-y) = (x-y)(x+y)$$

1) $x^2-4 = x^2 - 2^2 = (x-2)(x+2)$
2) $4x^2-9 = (2x)^2-3^2 = (2x-3)(2x+3)$
3) $25a^2-16b^2 = (5a)^2 - (4b)^2 = (5a-4b)(5a+4b)$

$(a-b)^2 = a^2-2ab+b^2$

$(a+b)^2 = a^2+2ab+b^2$

$(a+b)^3 = a^3 + 3a^2b+3ab^2+b^3$





$(a-b)^3 = a^3 - 3a^2b + 3ab^2 - b^3$





$a^3+b^3 = (a+b)(a^2-ab+b^2)$

$a^3-b^3 = (a-b)(a^2+ab+b^2)$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தள உருவம் | சுற்றளவு | பரப்பளவு |
|---|---|---|
| செவ்வகம்   | 2 (நீளம்+அகலம்) | நீளம் X அகலம் |
| சதுரம்   | ஒருபக்க நீளம் X 4 | $(\text{பக்க நீளம்})^2$ |
| முக்கோணி  | மூன்று பக்கங்களினதும் கூட்டுத்தொகை | 1/2 X அடி X செ.உ |
| வட்டம்   | $2\pi$ X ஆரை | $\pi$ X $(\text{ஆரை})^2$ |
| ஆரைச்சிறை   | $2\pi r \times \frac{Q}{360} + 2r$ | $\pi r^2 \times \frac{Q}{360}$ |

| திண்மம் | மேற்பரப்பளவு | கனவளவு |
|---|---|---|
| உருளை   | $2\pi r^2 + 2\pi rh$<br>$2\pi r(r+h)$ | $\pi r^2 \times h$ |
| கூம்பு   | $\pi r^2 + \pi rl$<br>$\pi r(r+l)$ | $\frac{1}{3} \times \pi r^2 \times h$ |
| கோளம்   | $4\pi r^2$ | $\frac{4}{3} \times \pi r^3$ |
| அரைக் கோளம்   | $3\pi r^2$ | $\frac{2}{3} \times \pi r^3$ |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை ஒழுக்குகள்


1. நிலையான ஒரு புள்ளியிலிருந்து மாறாத் தூரத்தில் அசையும் ஒரு புள்ளியின் ஒழுக்கு வட்டமாகும்.





2. இரண்டு நிலைத்த புள்ளிகளிலிருந்து சமனான தூரத்தில் அசையும் ஒரு புள்ளியின் ஒழுக்கு, அந்நிலையான இரண்டு புள்ளிகளையும் இணைக்கும் கோட்டின் செங்குத்து இரு சமகூறாக்கியாகும்.




3.தரப்பட்ட நேர்கோட்டிற்குச் சம தூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கானது, அந்நேர்கோட்டிற்கு இரு பக்கமும் சமதூரத்தில் வரையப்படும் சமாந்தர கோடுகள் ஆகும்.




4. ஒன்றையொன்று இடைவெட்டும் இரண்டு நேர்கோடுகளிலிருந்து சமனான தூரத்தில் அசையும் ஒரு புள்ளியின் ஒழுக்கு, அக்கோடுகள் இரண்டும் இடைவெட்டுவதால் உண்டாகும் கோணத்தின் இருசம கூறாக்கி ஆகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்

## தொடர்மொழிப் பொருளுக்கு ஒரு சொல்

| | |
|---|---|
| எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவர் | - தீர்க்கதரிசி |
| அரசனுடைய தேவிமார் இருக்கும் இல்லம் | - அந்தப்புரம் |
| முனிவர்கள் தங்கும் இடம் | - ஆச்சிரமம் |
| பிறருக்கு ஒன்றும் கொடாதவன் | - உலோபி |
| பகை அரசருக்குக் கொடுக்கும் திறைப்பணம் | - கப்பம் |
| கடவுள் இருக்கின்றார் என்று நம்புபவன் | - ஆத்திகன் |
| கடவுள் இல்லை என்று வாதிடுபவன் | - நாத்திகன் |
| தேர், கப்பல் முதலியவற்றை முதன் முதலில் செலுத்துதல் | - வெள்ளோட்டம் |
| தேர்தல் ஒன்றில் போட்டி இடுபவர் | - வேட்பாளர் |
| பட்டப்படிப்புக்காகப் பலகலைகளையும் கற்பிக்கும் நிலையம் | - பல்கலைக்கழகம் |

## சொற்களும் விளக்கமும்

| | |
|---|---|
| இடையன் | - ஆடு மேய்ப்பவன் |
| கற்றை | - வைக்கோல் முதலியவற்றின் தொகுதி |
| கும்பல் | - சனங்களின் கூட்டம் |
| குலை | - காய்களின் தொகுதி |
| குவியல் | - பொருட்களின் தொகுதி |
| குரும்பை | - பனை, தென்னையின் இளங்காய் |
| கொத்து | - பூக்களின் தொகுதி |
| சிப்பம் | - புகையிலை, கருவாடு முதலியவற்றின் தொகுதி |
| சோலை | - பூ மரங்களின் தொகுதி |
| தோப்பு | - மரங்களின் தொகுதி |
| நிரை | - பசுக்களின் கூட்டம் |

## உயிரினங்களின் ஒலி மரபு

| | |
|---|---|
| கழுத்தறுத்தல் | - பெருந்துன்பத்துக்குள்ளாக்குதல் |
| காலில் விழுதல் | - தஞ்சமடைதல் |
| கைகொடுத்தல் | - உதவி செய்தல் |
| துண்டுவிழுதல் | - நட்டமடைதல் |
| நாக்கு வளைக்குதல் | - இகழ்ந்து பேசுதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரபுப் பெயர்கள்

### ஆண் பெண் மரபு

| உயிரினம் | ஆண் | பெண் |
|---|---|---|
| யானை | களிறு | பிடி |
| கோழி | சேவல் | பேடு |
| மான் | கலை | பிணை |
| நண்டு | கடுவன் | பெட்டை |
| குரங்கு | கடுவன் | மந்தி |
| மயில் | போத்து | அளவு |
| ஆடு | கடா | மறி |
| மாடு | காளை | பசு |
| பூனை | கடுவன் | பெட்டை |

## தொடர்மொழிக்கு ஒரு மொழி

அந்தப்புரம் - அரண்மனைகளில் அரச மகளிர் தங்குவதற்கு அமைந்த தனியிடம்

அநாதை - தாய், தந்தையரை இழந்தோர்

அணிந்துரை - ஒரு நூலுக்கு நூலாசிரியர் அல்லாத பிறர் வழங்கும் புகழுரை

ஒத்திகை - கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு முன் சரி பிழை பார்த்துத் திருத்தும் நிகழ்ச்சி

குரவர் - அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன் என்போர்.

கைம்மருந்து - வைத்தியனின்றி ஒருவர் தாமே தமது நோய்குச் செய்து கொள்ளும் சிறுமருந்து

சதாவதானி - ஒரே சமயத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன்

சுயசரிதை - ஒருவர் தன்னைப் பற்றித் தானே எழுதும் வரலாறு

நூலகம் - வாசிப்பதற்காக நூல்களைத் தொகுத்து வைத்திருக்கும் இடம்

பன்னசாலை - இழை தழை கொண்டு வேயப்பட்ட குடிசை

நூன்முகம் / முன்னுரை - நூலாசிரியர் தாம் இயற்றிய நூலைப்பற்றி நூலின் முன்னே கூறும் உரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சொல் | ஒத்தசொல் | எதிர்ச்சொல் |
|---|---|---|
| புகழ் | கீர்த்தி | இகம் |
| வறுமை | மிடி(நல்குரவு) | செல்வம் |
| துயில் | நித்திரை | விழிப்பு |
| அறம் | தருமம் | மறம் |
| அலைமதி | அடக்கம் | ஆரவாரம் |
| ஆசை | விருப்பம் | நிராசை |
| வள்ளல் | கொடையாளி | உலோபி |
| ஈதல் | கொடுத்தல் | ஏற்றல் |
| அரசன் | வேந்தன் | ஆண்டி |
| மேதை | அறிவாளி | பேதை |
| நண்பன் | தோழன் | பகைவன் |
| தொழிலாளி | பாட்டாளி | முதலாளி |
| உண்மை | மெய் | பொய் |
| வானம் | ஆகாயம், விசும்பு | பூமி, வையகம் |
| இறப்பு | பிறப்பு | மரணம் |
| குன்று | மேடு | குழி |
| தண்டனை | அபராதம் | வெகுமதி |
| நயம் | இலாபம் | நட்டம் |
| மகிழ்ச்சி | சந்தோஷம் | துக்கம் |
| தன்னலம் | சுயநலம் | பிறர்நலம் |
| குரு | ஆசான்,தேசிகன் | சீடன் |
| புனிதம் | தூய்மை | அசுத்தம் |
| நண்பகல் | மத்தியானம் | நள்ளிரவு |
| கோலம் | அழகு | அலங்கோலம் |
| தந்திரம் | உபாயம் | அவதந்திரம் |

## இளமைச் சொற்கள் மரபு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தென்னை | - | ஓலை | புல் | - | தாள் |
| பனை | - | ஓலை | வாழை | - | இலை |
| கமுகு | - | ஓலை | மா | - | இலை |
| நெல் | - | தாள் | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரும்பத விளக்கங்களை அறிவோம்

| | |
|---|---|
| அறுசுவை | - கைப்பு, இனிப்பு, உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு |
| நவக்கிரகம் | - சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, |
| அட்டாவதானி | - எட்டு விடயங்களை ஒரே நேரத்தில் அவதானிப்பவன் |
| வெள்ளி விழா | - இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா |
| பொன் விழா | - ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா |
| வைரவிழா | - அறுபதாவது ஆண்டு நிறைவு விழா |
| மணி விழா | - ஒருவர் அறுபதாவது வயதில் கொண்டாடும் விழா |
| பவள விழா | - எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா |
| நூற்றாண்டு விழா | - நூறாவது ஆண்டு நிறைவு விழா |
| வள்ளல் | - இல்லை என்னாது கொடுப்பவன் |
| உலோபி | - பிறருக்குக் கொடுக்காதவன் |
| கட்டுக்கதை | - நம்பமுடியாத பொய்க்கதை |
| விகடகவி | - நகையாகவும், பரிகாசமாகவும் பேசுபவர் |
| சுயசரிதை | - தன் வரலாறு கூறுதல் |
| துறைமுகம் | - கப்பல்கள் தரிக்குமிடம் |
| ஒற்றன் | - உளவு பார்ப்பவன் |
| பட்டிமன்றம் | - அறிஞர் கூடி நேருக்கு நேர் வாதிடும் இடம் |
| அல்லங்காடி | - மாலையில் அல்லது இரவில் கூடும் சந்தை |
| சங்கமம் | - இரண்டு ஆறுகள் சேருமிடம் |
| குறிஞ்சி | - மலையும் மலை சார்ந்த இடமும் |
| முல்லை | - காடும் காடு சார்ந்த இடமும் |
| மருதம் | - வயலும் வயல் சார்ந்த இடமும் |
| நெய்தல் | - கடலும் கடல் சார்ந்த இடமும் |
| பாலை | - மணலும் மணல் சார்ந்த இடமும் |

## உள்ளீட்டுக்குரிய மரபுப்பெயர்கள்

| | | | |
|---|---|---|---|
| நெல்,கமுகு, திணை | - அரிசி | பலா, தோடை | - சுளை |
| மா, வாழை | - சதை | அவரை, துவரை, பயறு | - பருப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு பெயர் பல சொல்

| | |
|---|---|
| அக்கினி | - நெருப்பு, தணல், தீ |
| அறிஞர் | - சான்றோர், மேதாவி, புலவோர் |
| ஒற்றர் | - தூதர், சாரணர், வேவுகாரர் |
| குதிரை | - அசுவம், துரகம், புரவி |
| சோலை | - பொழில்,கா, நந்தவனம் |
| தெய்வம் | - தேவு, கடவுள், புத்தேள் |
| மாது | - மங்கை, பாவை, தையல் |
| வீரர் | - மறவர், சூழ், மன்னர் |
| கடல் | - பரவை, ஆழி, சமுத்திரம் |
| யானை | - கஜம், கரி, வாரணம், வேளம் |
| கண் | - விழி, நயனம், நேத்திரம் |

## இளமைச் சொற்கள் மரபு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நெல் | - | நாற்று | சிங்கம் | - | குட்டி, குருளை |
| பனை | - | கமுகு | பூனை | - | குட்டி |
| கமுகு | - | பிள்ளை, கன்று | மான் | - | கன்று, குட்டி |
| எருமை | - | கன்று | கரடி | - | குஞ்சு, பிள்ளை |
| அணில் | - | பிள்ளை, குஞ்சு | கிளி | - | குஞ்சு, பிள்ளை |
| எலி | - | குஞ்சு, குட்டி | கீரி | - | பிள்ளை |
| குதிரை | - | குட்டி | யானை | - | கன்று, குட்டி, போதகம் |
| குரங்கு | - | குட்டி, பறழ் | | | |

## ஒரு சொல் பலபொருள்

| | |
|---|---|
| அரம்பை | - வாழை, தெய்வப்பெண் |
| கம்பம் | - தூண், நடுக்கம் |
| உரம் | - வலிமை, நெஞ்சு, செயற்கைப் பசளை |
| சலம் | - அபரணம், பாத்திரம், கப்பல் |
| வளை | - சங்கு, புற்று, வளையல் |
| வரை | - மலை, மூங்கில், கோடு |
| திங்கள் | - மாதம், பிறை |
| பதி | - தலைவன், கடவுள், ஊர் |
| மதி | - அறிவு, சந்திரன், மாதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பகால தகவல் தொடர்பு சாதனங்கள்

- கூக்குரல் மூலம் தகவல் அனுப்புதல்
- புகை மூலம் தகவல் அனுப்புதல்
- பறவைகள், விலங்குகள் மூலம் தகவல் அனுப்புதல்
- பறையடிப்பதன் மூலம் தகவல் அனுப்புதல்.
- தூதுவர் மூலம் தகவல் அனுப்புதல்
- தம்பட்டமடித்தல் மூலம் தகவல் அனுப்புதல்
- நிறங்களில் ஆன துணிகள் மூலம் சமிக்ஞை செய்தல்.

## தொடர்பாடல் ஊடகங்கள்

| அச்சு | இலத்திரனியல் |
|---|---|
| கட்டுரைகள் | தொலைக்காட்சி |
| நூல்கள் | இணையம் |
| துண்டுப் பிரசுரங்கள் | தொலைநகல் |
| பத்திரிகைகள் | வானொலி |
| அறிவித்தல்கள் | மின்னஞ்சல் |
| கடிதங்கள் | விண்கலம் |

## கணினித் தகவல்கள்

- சாதாரண கூட்டல் பொறி 1642 ஆம் அணஂடு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிளெஸ் பஸ்கால் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- கணிப்பான் (கல்குலேட்டர்). இதனை ஜேர்மனிய கணித அறிஞரான கொட்பிரீட் லைப் நிற்ஸ் என்பவர் வடிவமைத்தார்.
- நவீன கணினி உருவாக்கத்திற்கு வழிகாட்டியவர் இங்கிலாந்தைச் சேர்ந்த கணிதப் பேராசிரியரான சார்ள்ஸ் பாபேஸ் (1833)
- குறைந்த செலவிலான கணினிகள் 1981ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணினிக் கலைச் சொற்கள்

- வலை - Web
- வலை தளம் - Web site
- கோப்பு - File
- இணையம் - Internet
- குறிப்புச் சொல் - Pass word
- வையக விரிவு வலை - World Wide Web
- மின்னஞ்சல் - E-mail
- எழுத்துரு - Font
- விசைப்பலகை - Keyboard
- அச்சுப்பிரதி - Print
- பதிவிறக்கம் - Download
- வன்பொருள் - Hardware
- வன் தகடு - Hard Disk
- நீக்குக - Delete
- பதிவேற்றம் - Upload
- மென்பொருள் - Software
- இறுவட்டு - Compact Disk (CD)
- சேமி - Save
- நெகிழ் தகடு - Floppy Disk
- உலாவி - Browser
- சொல்லாடற் பெட்டி - Dialog Box
- சுட்டி - Mouse
- ஆவணம் - Document



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுருக்கக் குறியீடுகள்

- ஆசிய அபிவிருத்தி வங்கி - ADB
- முற்பகல் - A.M
- பிற்பகல் - P.M
- பிரதம மந்திரி - PM (Prime Minister)
- தொலைக்காட்சி - T.V
- மிக முக்கியமான கனவான் - VIP
- பொதுச் சுகாதார தாதி - PHN
- பொதுச் சுகாதார பரிசோதகர் - PHI
- அரசாங்க அதிபர் - G.A
- உதவி அரசாங்க அதிபர் - A.G.A
- இலங்கை போக்குவரத்துச் சபை - இ.போ.ச. (C.T.B)
- இலங்கை மின்சார சபை - இ.மி.ச. (C.E.B)
- கிறிஸ்துவுக்கு முன் - கி.மு.
- கிறிஸ்துவுக்கு பின் - கி.பி.
- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - இ.ஒ.கூ(S.L.B.C)
- கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் -கூ.மொ.வி.நி.
- இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - இ.கா.கூ.
- பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - ப.நோ.கூ.ச.
- முற்பகல் - மு.ப
- பிற்பகல் - பி.ப
- பின்குறிப்பு - பி.கு
- கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம் - க.பொ.த(சா/த)
- கல்விப் பொதுத்தராதர உயர் தரம் -க.பொ.த(உ/த)
- பாடசாலை அபிவிருத்திக் குழு - பா.அ.கு(SDC)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல் சடங்குகள்
## (பிறப்பிலிருந்து இறப்புவரை)

### குழந்தைப் பருவம்

**நாமகரணம் - குழந்தை பிறந்து 31ஆம் நாள் பெயரிடல்**

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொல்கேளாதவர்" (குறள் - 66)

பூமியிலே பிறக்கும் குழந்தைக்கு முதன்முதல் நடத்தப்படும் கிரியை "நாமகரணம்" எனப்படும். 31 நாட்கள் வரை குழந்தையை வெளியே கொண்டு செல்லுதல்கூடாது. குழந்தை பிறந்து 31ஆம் நாள் ஆசௌச கழிவு நடத்தப்படும். இதனை 31ஆம் நாள் துடக்குக் கழித்தல் என்றும் கூறுவார்கள்.

31ஆம் நாள் வீட்டைச் சுத்தப்படுத்தி மஞ்சள் நீர் தெளிக்கவும் வாசலில் நிறைகுடம் குத்துவிளக்குகள் வைக்கவும். குழந்தைக்கு அன்று முடியை இறக்கி, நீராட்டி, புத்தாடை அணிவர். வேதியரை அழைத்து அவர் முன்னிலையிற் பின்வருவனவற்றை வைக்கவேண்டும்.

### தேவையான பொருட்கள்

நிறைகுடம் (நீர் நிரம்பிய குடம், முடியுடன் தேங்காய், மாவிலை 5, தலை வாழையிலை அல்லது தாம்பாளம், நெல் அல்லது பச்சை அரிசி, குத்துவிளக்கு, எண்ணெய், திரி, பூமாலை, விபூதி, சந்தனம், மஞ்சள், குங்குமம், பன்னீர், தட்டத்தில் வைக்கவும், பிள்ளையார் மஞ்சளிற் பிடித்து வைக்கவும். கற்பூரம், கற்பூரத்தட்டு, ஊதுபத்தி, சாம்பிராணி, சாம்பிராணித்தட்டு, வெற்றிலை, பாக்கு, எலுமிச்சம்பழம் ஒரு தட்டில் வைக்கவும். பழத்தட்டு, பால், கற்கண்டு, அறுகம்புல், மாவிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுப்பொருட்கள், உடைகள், உபயோகிக்கும் பொருட்கள் யாவும் கழுவிச் சுத்தம் செய்தபின், வீட்டிலுள்ளோர் குழந்தை உட்பட, யாவரும் நீராடிச் சுத்தமாகிய பின், வேதியரை அழைத்துவந்து புண்ணிய வாசனம் செய்வார். மந்திரம் ஓதிய நீரை அங்குள்ளோர் மீதும் மனை, ஏனைய பொருட்கள் என்பனவற்றின் மீதும் தெளிப்பது வழக்கம். துடக்குக் கழித்தபின் குழந்தைக்குப் பெயர் சூட்டுதல் மரபாகும். வேதியர் குழந்தையின் நட்சத்திரத்தைக் கூறி, பூஜை செய்த பின்பு தாய்மாமன் அல்லது பெரியவர் ஒருவர் மடியில் குழந்தையை இருத்தி, அதன் பெயரை வலதுகாதிலே மூன்றுமுறை ஓதி, கற்கண்டுத் தண்ணீர் பருக்கவேண்டும். குழுமியிருப்போருக்கும் இனிப்புப் பானம் வழங்கவேண்டும். இதன் பொருள் வம்சத்தில் தோன்றியுள்ள குழந்தை இறைவன் அருளால் பெயரும், வாழ்வும் பிரகாசிக்க வாழவேண்டும் எனப் பொருள்படும். அதன் பின்பு இன பந்தங்கள் குழந்தையின் பெயரைக் காதில் ஓதுவார்கள். பெற்றோர், உற்றோர் சுற்றம் சூழக் குழந்தையின் பெயரை மனம் நிறைந்த மகிழ்வுடன் எல்லோரும் அழைத்து மகிழ்வர். குழந்தை அன்றுதான் முதன்முதலாக அப்பெயரால் பல்லோராலும் அழைக்கப்பட்டு, ஆசீர்வாதம் பெற்று, அப்பெயருக்கு உரியவராகிறார். இந்நிகழ்ச்சியையே குழந்தைக்குப் பெயர் சூட்டும் சடங்கு என்போம். ஐயருக்குத் தானம், தட்சணை கொடுக்க வேண்டும்.

இந்நாளில் அரைஞாண் கட்டுதல், பஞ்சாயுத சங்கிலி, பஞ்சலோகத்தினாலான காப்பு, காற்சங்கிலி போன்றவை அணியலாம்.

ஒரு தட்டிற் பச்சை அரிசி பரவி, வாழைப்பழம், மஞ்சள், குங்குமம், வெற்றிலை பாக்கு, தேசிக்காய் வைத்து அதிற் குழந்தைக்குரிய நகையை வைத்து, தகப்பன் அல்லது தாய்மாமன் அக்குழந்தைக்கு அணிவர்.

### திருஷ்டிப்பொட்டு (கறுத்தப்பொட்டு) செய்யும் முறை

100 கிராம் சவ்வரிசியைத் தாச்சியில் இட்டு, சவ்வரிசி கறுப்பு நிறமாக வரும்வரை வறுக்கவும். பின் அதற்குள் தண்ணீர்விட்டு முல்லை, மல்லிகை மலர்களையும் வாசனைத் திரவியங்களையும் இட்டுக் காய்ச்சவும், கூழ் போன்ற நிலையில் உள்ள இக்கரைசலைப் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறவைத்து ஒரு துணியிலோ, வடியிலோ, வடித்தெடுத்துக் கொள்ளவும். இக்கரிக்கூழைத் தூய்மையாகச் செதுக்கிய சிரட்டையிலோ அல்லது கிண்ணத்திலோ ஊற்றி, வெய்யிலில் நன்றாகக் காய வைக்கவும். காய்ந்த இப்பொட்டைத் தினமும் சிறிதளவு நீர்விட்டு உரைத்து பிள்ளைகளின் நெற்றியில் இடலாம். இப்படியாகக் கறுப்புப் பொட்டு இடுவதனால் திருஷ்டி கழியும் என்ற நம்பிக்கை இந்துக்களுக்கு உண்டு.

**41ஆம் நாள்**

குழந்தை பிறந்து, துடக்குக் கழித்தபின் 41ஆம் நாள் தாயையும், குழந்தையையும் கோயிலுக்குக் கூட்டிச்சென்று கோயிலிற் குழந்தையின் நட்சத்திரத்தைச்சொல்லி, அர்ச்சனை செய்து இறைவனை வழிபட வேண்டும். கோயிலுக்குச் செல்லும்போது அர்ச்சனைப் பொருள்களைத்தட்டில் வைத்துக் கொண்டு செல்லவும் (வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், பூக்கள், கற்பூரம், ஊதுபத்தி குழந்தையைச் சுவாமி சந்நிதானத்தின் (கற்பக்கிரகம் முன்னிலை யில் வளர்த்தி எடுப்பது வழக்கம்)

**காது குத்தல் (கர்ணவேதனம்)**

குழந்தை பிறந்து 6ஆம், 7ஆம், 8 ஆம், 10ஆம் மாதங்களில் "காது குத்தல்" வைபவம் நடத்தப்படும். இதற்கு பூஜை, கிரியை எனச் செய்ய வேண்டியதில்லை. பிள்ளையார் பிடித்து வைத்து, நிறைகுடம் வைத்து வணங்கிச் செய்தல்வேண்டும். இது குழந்தைகளுக்கு ஏற்படும் அரிட்டதோஷ நிவர்த்திக்காகவும், தமிழர் கலாசாரத்திற்காகவும் அழகுக்காகவும் குத்தப்படுகிறது. பொற்கொல்லர் ஒருவரை வீட்டுக்கு அழைத்து வந்து காதுகுத்தித்தோடு போடுவார்கள். (தைப்பூசத்திற் காது குத்தல் செய்வது சிறப்பாகும்)

**சோறூட்டல் (அன்னப்பிராசனம்)**

ஆண் குழந்தைக்கு 6ஆம், 8ஆம், 10ஆம், 12ஆம் ஆகிய இரட்டை விழுந்த மாதங்களிலும், பெண் குழந்தைக்கு 5ஆம், 7ஆம், 9ஆம், 11ஆம் ஆகிய ஒற்றை விழுந்த மாதங்களிலும் சுபமுகூர்த்தம் பார்த்து, சர்க்கரை, அரிசி, கற்கண்டு, நெய் ஆகியவை கொண்டு, உப்பு நீக்கிய அமுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கி, அப்பொங்கலைப் படைத்து வைத்து, விளக்கேற்றி, பிள்ளையார் பூஜை செய்து அதன்பின் இது குழந்தையின் முதல் போசனமாதலால், தங்க மோதிரத்தால் அவ்வமுதைத் தொட்டு தந்தை மூன்று தடவை எடுத்து ஊட்டி, மற்றோரும் எடுத்து ஊட்டி நீண்ட ஆயுளுடனும் ஆரோக்கியத்துடனும் வாழக் குழந்தையை ஆசீர்வதிப்பர்.

## முதற் பல் தோன்றுதல்-பல் முளைத்தல்

குழந்தைக்குப் பல் முளைக்க ஆரம்பிக்கும்பொழுது பல்லுக் கொழுக்கட்டை அவிக்க வேண்டும். மஞ்சளிற் பிள்ளையார் பிடித்து, விளக்கு ஏற்றி வெள்ளைத் துணி விரித்து இறைவனை வழிபட்டு குழந்தையை அதில் இருத்தி குழந்தையின் தலைமீது வெள்ளைத் துணி போட்டு ஒன்பது குழந்தைகளுக்கு சிறிது ஊட்டி, உற்றார் உறவினர்களுக்கும் கொடுத்து மகிழவேண்டும். குழந்தைக்கு ஆரோக்கியமான பற்கள் முளைக்க வேண்டுமென்பதற்கும் இறைவனிடம் ஆசிபெறவுமே இவ்வழிபாடு கொண்டாட்டமாக நிகழ்த்தப்படுகின்றது. குழந்தை சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ உறவினர்கள் ஆசீர்வதிப்பர்.

**கொழுக்கட்டை**

| | |
|---|---|
| அரிசிமா | - 1/2 சுண்டு |
| அவித்த கோதுமை மா | - 3 மேசைக்கரண்டி |
| உடைத்த பயறு | - 100g (பயறு வறுக்கவும்) |
| சர்க்கரை | - 100g |
| தேங்காய் | - 1/2 முடி (வெள்ளைப் பூ) |
| ஏலக்காய் | - சிறிதளவு வறுத்து பொடி செய்ய வேண்டும். |
| உப்பு | - சிறிதளவு |

வறுத்த பயிற்றம் பருப்பை அவித்து, நீர் வடியவிட்டு ஆறவிடவும். ஆறிய பயற்றை சர்க்கரை, தேங்காய்ப்பூ, ஏலக்காய்ப் பொடியாவும் போட்டு ஒன்றாகச் சேர்க்கவும். அதன் பின்பு அரிசிமாவையும்,கோதுமை மாவையும் ஒன்றாகச் சேர்த்துத் தேவையான உப்புப் போட்டு, கொதிநீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு இடியப்பம் குழைக்கும் பதத்தில் குழைக்கவும். பின்பு சிறு உருண்டைகள் பிடித்து அவற்றைக் கிண்ணம்போல் செய்து பயற்றுத் துவையலை அவற்றுள் வைத்து அரைவட்ட வடிவமாக்கி, பல்லுப்போல் விளிம்பைச் செய்து சிறுதேங்காய்ச் சீவலுடன் கொழுக்கட்டை அவிக்கவும்.

**கல்வி ஆரம்பம் (ஏடு தொடக்குதல்)**

பண்டைக் காலத்திற் கல்வியை ஏட்டிலிருந்தே பெற்றுக்கொண்டனர். அதன் காரணமாகவே இன்றும் வாழ்க்கையில் முதன்முதலாகக் கல்வியை ஆரம்பிக்கும்போது "ஏடு தொடக்கல்" என்று கூறப்படுவது வழக்கமாகிவிட்டது.

இது மூன்று அல்லது ஐந்தாம் வயதில் நடைபெறலாம் சுப வேளையில் பிள்ளையார் பூஜை செய்து வித்தியாரம்பம் செய்தல் வேண்டும். குழந்தைக்கு முதன் முதலில் கல்வி கற்க ஆரம்பித்தல் பெரும்பாலும் எம்மவர்கள் விஜயதசமி எனப்படும் நவராத்திரி விழாவின் பூர்த்தியன்றே மேற்கொள்வார்கள். தைப்பூசத் தன்றும், தை முதல் ஆனி வரையிலான காலப்பகுதியில் ஜாதகரின் நட்சத் திரத்திற்கு ஏற்றதாக அமைந்த சுபநாளிலும் செய்யலாம். தந்தை அல்லது ஆலயகுரு அல்லது ஆசிரியர் யாரேனும் ஒருவர் இந்த வித்தியாரம் பத்தை மேற்கொள்வார்கள். கல்வியில் மேன்மையடையவே, முதற்கல்வியை சுபநாளில் சுபநேரத்தில் செய்வது எமது மரபு. ஏடு தொடக்குவதைக் கோயிலிலும் செய்யலாம். (வசதியில்லாதோர்) ஒரு தட்டில் பூசைக்குரிய பொருட்களுடன், (வெற்றிலை,பாக்கு, பழம், முடித்தேங்காய், கற்பூரம்,ஊதுபத்தி, பூ, தட்சணை கோயிலுக்குச் செல்லவேண்டும். கோயிலுக்கு செல்ல இயலாதவர்கள் வீட்டில் பிள்ளையார் படத்தையோ, மஞ்சள் அல்லது சாணத்தில் பிள்ளையார் பிடித்து வைத்தோ நிறைகுடம் வைத்து விளக்கு ஏற்றி இறைவனை வணங்கி ஒரு தட்டில் அரிசியைப் பரப்பி அதில் குழந்தையின் கையைப் பிடித்து முதல் எழுத்தாகிய 'அ' அகரத்தை அதில் எழுதி தொடக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயல், இசை, நாடகம் பயிலல்**

இவற்றைத் தகுதிவாய்ந்த ஒரு குருவிடம் கற்றலே சிறந்தது. இசை, நடனம் மற்றும் நுண்கலை பயில்பவர்கள்முதன்முதலில்ஒரு குருவிடம் செல்லும் பொழுது குருதட்சணையாக பின்வரும் பொருட்களை எடுத்துச் செல்லவேண்டும். ஒரு தட்டில், வெற்றிலை, பாக்கு, பழம், கற்கண்டு, குங்குமம், முடியுள்ள மஞ்சள் பூசிய தேங்காய் அவரவர்களது வசதிக்கு ஏற்ப வஸ்திரம் (வேட்டி, சேலை) தட்சணை ஆகியவற்றை எடுத்துச்செல்லவேண்டும்.

பின்பு குருவிடம் இவற்றை ஒப்படைத்துவிட்டு அவர் பாதங்களில் வீழ்ந்து, வணங்கி ஆசீர்வாதம் பெற்றே பாடத்தை ஆரம்பிக்க வேண்டும். பெரும்பாலும் விஜயதசமியன்று அல்லது பொது சுபமுகூர்த்தங்களிலோ பாடத்தை ஆரம்பிக்க வேண்டும்.

# கிரியையுறுப்பியல்

**1.விநாயகர் குருவழிபாடு :**

உலகங்கள் யாவற்றிற்கும் முதற்காரணமாகிய பொருள் மகாமாயை அல்லது பிரணவம் எனப்படும். அதற்குத் தலைமை யாயிருக்குஞ் சிவசக்திக்கு விநாயகர் என்று பெயர். (வி-இல்லாத விநாயகர் - தலைவர், அதாவது தமக்குத் தலைவரில்லாதவர், மேலான தலைவரெனப் பொருள்படும்) ஆதலால் எவ்வுலகத் திலேனுஞ் செய்யப்படும். எந்தக் கிரியையும் இனிது முடிதற்குவிநாயகக் கடவுளது திருவருள் வேண்டி முதற் செய்யப்படுங் கிரியை விநாயக வணக்கம். குரு, சமயக் கிரியைகளுக்குத் தலைவராதலாலும், அவரிலே சிவபெருமானுடைய திருவருள் சிறந்து நிற்றலாலும் குருவையும் வழிபடுவர். (கு-மலம், ரு-நீக்குபவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2.ஆசமனம் :**

ஆசமனமாவது மூவகைத் தத்துவங்களையும் நினைத்து வலக்கைப் பெருவிரலடியிற் பொருந்திய அற்ப தண்ணீரை (உழுந்தமிழ்ந்திய தண்ணீரை மந்திரத்தோடு (அஸ்த்திராயபட்) மூன்று முறை பருகி. உதடுகளைப் பெருவிரலடி யினால் இரு முறையும். உள்ளங்கையினால் ஒருமுறையுந் துடைத்து, மந்திரத்தோடு (இருதயாய வெளஷட்) உடம்பின் பகுதிகளைத் தொடுதல், மூவகைத் தத்துவங்களை மந்திரத்தோடு (ஆத்மதத்வாயஸ்வதா, வித்யாதத் வாயஸ்வதா, சிவதத்வாயஸ்வதா) நினைத்தலால் அவற்றாலாக்கப்பட்ட உடம்பு,அருள் வழிநிற்கும். மந்திரத்தோடு இடங்களைப் பெருவிரலணி விரல்களாலே தொடுதலினால், அவ்வுறுப்புக்களால் வரத்தக்க குற்றங்களை அவற்றின் அதிதேவதைகள் நீக்குவர்.

**3.பிராணாயாமம் :**

அதாவது பிராணவாயுவையடக்குவதினால் மனத்தை ஒரு வழிப்படுத்தித் திருவருளிலே நிறுத்துதல், (பிராண + ஆயாமம் = பிராணவாயுவை அடக்குதல்)

**இது செய்யும் முறைமை**

வலக்கையிற் கட்டுவிரலையும்நடுவிரலையும் உள்ளே மடக்கிப் பெரு விரலினால் வலமூக்கைப் பிடித்துக்கொண்டு, சங்கிதை மந்திரத்தை உச்சரித்து இடமூக்கால் மூச்சை இழுத்த பின்பு, பெருவிரலணி விரல்களால் இருமூக்குகளையும் பிடித்துக் கொண்டு, அம்மந்திரத்தை உச்சரித்து மூச்சை யடக்கியும், அணிவிரலால் இடமூக்கைப் பிடித்துக்கொண்டு, சங்கிதையை உச்சரித்து மூச்சை வெளியே விடுக. பிராணாயாமமானது பொறிகளையும் மனத்தையும் சுத்திகரித்து அவைகளை அடக்குதற்குத் துணையாகின்றது.

**4.பவித்திரமணிதல்**

பவித்திரமாவது மோதிரம்போலத் தர்ப்பையினாற் செய்யப்பட்டு அணி விரலில் அணியப்படுவது. இதன் நோக்கம் கிரியை செய்யும்போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் வாக்குக் காயங்களால் வரத்தக்க பாவங் களின்றுங் காத்தல். (பவித்திரம்) பதனாத் ராயதே = பாவத்திலே விழுதலினின்றுங் காப்பது - காமிகம்) ஆண்கள் வலது கை மோதிர விரலிலும், பெண்கள் இடது கை மோதிரவிரலிலும் அணிவர்.

**5.சங்கற்பம்**

சங்கற்பமாவது செய்யப்போகுங் கிரியையிலே மனத்தைப் பதித்து அதிலே நிறுத்துவது. இன்ன காலத்திலே இன்ன நோக்கமாக இது செய்யப்போகிறேன் என்பது சங்கற்ப வாக்கியத்தின் சுருக்கமான கருத்து. நிகழுஞ் சிருட்டித் தொடக் கத்திலிருந்து அன்று வரையும் உள்ள காலம் இதிலே குறிக்கப்படுதலாலே, காலத்தின் பெருமையையும், தற்கால வாழ்வின் சிறுமையும், ஆன்ம ஈடேற்றத் தின் மகிமையும் உணரத்தக்கன.

**சங்கற்ப முறை**

ஆண்கள் வலது கையிலே தருப்பை, பூ, அரிசி அல்லது எள்ளு முதலிய வற்றை வைத்துக்கொண்டு வலதுகையை மேலாகவும் இடது கையைக் கீழாகவும் வைத்து, இடதுபெருவிரலை வலது பெருவிரலால் அமர்த்தி, வலது முழந்தாளில் வைக்கவும் பெண்கள் இடது முழந்தாளில் வைக்கவும்.

**சங்கற்ப வாக்கியத்தின் கருத்து**

சிவபெருமானது சங்கற்பத்தாலே தொழிற்படும் ஆதிப்பிரமாவின், இரண்டாவது பரார்த்தத்தில், சுவேதவராக கற்பத்தில் வைவஸ வமந்வந்தரத்தில் இருபத்தெட்டாவது சதுர்யுகத்திற் கலியுகத்தின் முற்பகுதியிற் சம்புத்துவீபத்திற் பாரத வரஷத்தில், பரதகண்டத்தில் மேருவுக்குத் தெற்கே - (இடத்தின் பெயர், பிரபவ முதலான அறுபது வருஷத்துள்) ... (இன்ன) வருஷத்தில் ... (இன்ன அயனத்தில்) ... (இன்ன) பருவத்தில் ... (இன்ன மாதத்தில்) ... (இன்ன) பட்சத்தில் ... (இன்ன) திதியில், வாரத்தில் நட்சத்திரத்தில் (இன்ன) நன்மையான யோகம் (இன்ன) நன்மையான கரணமுள்ளதாய் விசேஷ குணத்தோடு சேர்ந்த இந்தப் புண்ணியத்தினத்தில்! ... (இன்ன) நோக்கமாக ... (இன்ன) கிரியை செய்யப்போகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கும்பம் வைத்தல்**

கடவுளை லிங்கம் முதலியவற்றிலே வழிபடுவதுபோலக் கும்பத்திலும் வழிபடலாம். கும்பம் உடம்பின் பாவனை. அதிசூல சுற்றிய சேலை தோலாகும். நூல் நாடிகள். குடம் தசை. தண்ணீர் இரத்தம் அதனுள் இடப்படும் ரத்தினம் எலும்பு. தேங்காய் தலை. மாவிலை தலைமயிர். தர்ப்பை குடுமி. அதிலே பதிக்கப்பட்ட மந்திரம் உயிர்.

**சகளீகரணம்**

சகளீகரணமாவது சரீரத்தைச் சிவரூபமாக்குதல். (சகளம் = (சிவ) சரீரம், கரணம் = செய்தல்) சிவவடிவத்திற்குரிய சிவ மந்திரங்களை எமது சரீரத்திற் பதித்தலாற் சிவவடிவமுண்டாகும். இதில் மூன்று படிகளுண்டு. முதலாவது கையைச் சுத்திசெய்தல் கரசுத்தி (கைகளை உள்ளும் புறமும் சக்தி மந்திரத்தால் தடவிக் குவித்து, அருளை வேண்டல்) எனப்படும். கையிலே சிவபெருமானைப் பூசித்துச் சிவ மந்திரங்களைப் பதித்தல் கரநியாசம் (கைகளிற் சிவாசனமூர்த்தி, ஈசான மூர்த்தி, மந்திரங்களினால் மந்திரங்களை, பதித்து சிவகரங்களாக்கல்), அந்தக் கையினாலே உடம்பின் மற்றப் பகுதிகளிற் சிவமந்திரங்களைப் பதித்துச் சிவவடிவமாக்கல். அங்கநியாசம். (சிவகரத்தால் அங்கம் முழுவதையும் மந்திரங் களால் தொட்டு சிவரூபமாக்கல்)

இந்தச் சகளீகரணமாகிய கிரியை. சைவசமயத்துக்கு உயிர் போலுள்ளது. கைகளையும் மற்றப் பகுதிகளையும் மந்திரங்களினிட மாகவும் சிவபெருமானது இருப்பிடமா கவுங்கொள்ளுதலினாற் பூசை செய்யும்போதும் செய்த பின்னும், மனம் அருள்வழியிலேயே சென்றுகொண்டிருக்கும். சிவ சரீரமாக்கி ஒருவன் தன்னைச் சிவமாகப் பாவிக்கும்போதுஅவனுக்கு உலகத்திலுள்ள ஒரு பொருளிலும் பற்றுவராது. தன்னுடைய சரீரத்துக்கு வரத்தக்க துன்பங்களையும் மதியான். அவனுடைய சரீர உறுப்புக்களும் மனமுஞ் சிவ பூசைக்கே துணையாய் நிற்கும். சண்டேசுர நாயனாருக்கு அவருடைய தந்தையார் அடித்தபோது. அந்த அடி அவருக்குத் தெரியாததும் இதனாலேயே. ஒருவன் நாள்தோறும் தன்னுடைய சரீரத்தை மந்திர சரீரமாகப் பாவித்து வருவானாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழிவான செய்கை களுக்கேனும், பாவங்கள் செய்தற்கேனும் இலகுவில் உடன்படான். மந்திரம் பதிந்த கையினாற்களவு செய்யவேனும், கைக்கூலி வாங்கவேனும் வேறு பாவங்கள் செய்யவேனுந் துணியான். மந்திரம்பொருந்திய வாயினால் தீயசொற்களைச் சொல்லான். சிவபெருமானுடைய ஆசனமாகிய இருதயத்தினாலே தீமை செய்யும் கருத்தைக் கொள்ளான். தன்னுடைய சரீரம் சிவ சரீரமென்று நினைக்கிறவன் இழிவான செய்கைகளுக்கேவப்படும்போதும் தன் மகிமையை நினைத்து அவற்றினின்றும் விலகுவான்.

**சிவோகம்பாவனை**

மந்திர செபஞ் செய்யமுன், சிவோகம்பாவனை செய்யப்படும். அதாவது தன்னைக் கடவுளாகப் பாவித்தல் (சிவ = கடவுள், அகம் = நான், பாவனை, பாவித்தல்) தான் ஆன்மா என்ற கருத்தை விட்டுத் தனக்கு உயிராகிய சிவமாகத் தன்னைப் பாவித்தல். இது நல்லொழுக்கத்துக்கும் உலகப்பற்று நீக்குதற்கும், சிவவசமாதற்கும் பெருந்துணை.

**பூசை**

பூசை தொடங்கமுன் ஸ்நானம் முதலியன முடித்து ஆசமனமும் சகளீகரணமும் செய்க. பின்பு ஆசமனதுக்கும் மூர்த்திக்கும் (=விக்கிரகம்) பூசை செய்து, கடவுளை நினைத்து அந்த மூர்த்தியிலே எதிர்முகப்படுத்தல் ஆவாகனம் எனப்படும். இதன்பின் தாபனம், சந்திதானம், சந்திரோதானம் செய்து, பாத்தியம், ஆசமனம், அர்க்கியம்கொடுத்துப் பூசைச் சாத்தலாகிய ஏழு கிரியைகள் உண்டு. இவற்றின் மேல் அபிஷேகம், தூப தீபம், அர்ச்சனை தோத்திரம் ஆகிய இவைகள் செய்யப்படும்.

குறிப்பு : இவற்றை ஒரு குருவின் மூலம் அறிந்து கொள்வதே முறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ அநுட்டானம்

விடிதற்கு ஐந்து நாழிகைக்கு முன் நித்திரைவிட்டெழுந்து, கடவுளை நினைத்துத் துதித்து, வெளியே போய் மலசலங் கழித்துச் சுத்திசெய்து, ஸ்நானம் பண்ணித் தோய்த்துலர்ந்த சேலை கௌபீனங்களை அணிந்து, திருநீறு பூசிச் சைவ அநுட்டானஞ் செய்க. சைவ அநுட்டானத்திற்கு உயிராயுள்ளது ஐந்தெழுத்தாற் கடவுளை வழிபடுதலே. இதற்குத் துணையாக உடல் சுத்தியும் உள்ளச் சுத்தியும் வேண்டும். அதாவது ஆணவம் கன்மம் மாயையாகிய மும்மலங்களின் வலிமையை அடக்க வேண்டும். இவற்றிற்கு விபூதி ஸ்நானமும் மந்திர ஸ்நானமுமே முக்கியமானவை. ஆதலாற் சைவ அநுட்டானத்தில் மூன்று பகுதிகளுண்டு. அவை விபூதி ஸ்நானம், மந்திர ஸ்நானம். கடவுள் வழிபாடு என்பன. இவைகள் ஒவ்வொன்றுஞ் செய்யுமுன் ஆசமனஞ் செய்யவேண்டும்.

**01. விபூதி ஸ்நானம் :**

சுத்தமான பாத்திரத்திலே தண்ணீர் நிறைத்துக் கிழக்கு முகமாக வேனும் வடக்குமுகமாகவேனும் இருந்து விநாயகரையுங் குருவையும் வணாங்கித் தண்ணீரைச் சுத்தி செய்க. எப்படியெனில்

**I) நீர்ச்சுத்தி**

வலதுகைச் சுட்டுவிரல் நடுவிரல்களை மடக்கிக்கொண்டு பெருவிரல் அணிவிரல்களுக்கிடையாக இச்சாஞானக் கிரியா சக்தி வியாபகமான தனது கண்களால் சிவமந்திரத்தை உச்சரித்துக் கொண்டு தண்ணீரைப் பார்க்க, இதனாலே தண்ணீரிலுள்ள குற்றங்கள் தீரும். இது நிரீட்சணம் எனப்படும். நிரீட்சணம்-பார்த்தல். அஸ்திர (பட்) மந்திரஞ் சொல்லிப் பெருவிரல் சுட்டு விரல்களால் நீரைச் சுற்றி நொடித்துக் கவச மந்திரம் (வௌஷட்) உச்சரித்துச் சுட்டுவிரல் நுனியினாற் சுற்றுக. இவை முறையே திக்குபந்தனம் அவகுண்டனம் எனப்படும். இவைகள் நீரிலே குற்றங்கள் வராமற் காக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2) ஆசமனம்

ஆசமனமாவது மூவகைத் தத்துவங்களையும் நினைத்து வலக்கைப் பெருவிரலடியிற் பொருந்திய அற்ப தண்ணீரை (உழுந் தமிழ்ந்திய தண்ணீரை மந்திரத்தோடு (அஸ்த்திராயபட்) மூன்று முறை பருகி, உதடுகளைப் பெருவிரலடி யினால் இருமுறையும், உள்ளங்கையினால் ஒருமுறையுந் துடைத்து மந்திரத் தோடு (இருதயாய வௌஷட்) உடம்பின் பகுதிகளைத் தொடுதல், மூவகைத் தத்துவங்களை மந்திரத்தோடு (ஆத்மதத்வாயஸ்வதா, வித்யாதத் வாயஸ்வதா, சிவதத்வாயஸ்வதா) நினைத்தலால் அவற்றாலாக்கப்பட்ட உடம்பு அருள் வழிநிற்கும். மந்திரத்தோடு இடங்களைப் பெருவிரலணி விரல்களாலே தொடுதலினால், அவ்வுறுப்புக்களால் வரத்தக்க குற்றங்களை அவற்றின் அதிதேவதைகள் நீக்குவர்.

## 3) விபூதி சுத்தி

திருநீற்றை இடதுகையில் வைத்து, அஸ்திரமந்திரத்தினால் (பட்) நீரைத் தெளித்து, அதில் ஒரு சிறுகூற்றைப் பெருவிரலணி விரல்களாலெடுத்து அஸ்திர மந்திரத்தால் (உம்பட்) தென்மேற்கு மூலையிலே தெளிக்க.

தென்மேற்கு இராட்சதமூலை எனப்படும். விபூதியிற் குற்றமான பகுதியென அது நீக்கப்படும். முன்போல், நிரீட்சணம் திக்குபந்தனம் அவகுண்டனஞ்செய்து, பதினொரு மந்திரங்களையுஞ் சொல்லி, அதிலே பதிக்க, இதனாலே சிவசக்தி வடிவமான திருநீற்றிலே சிவசக்தி பதியும்.

## 4) விபூதி அணிதல்

எஞ்சிய விபூதியின் ஒரு கூற்றைப் பெருவிரலணி விரல்களால் எடுத்துத் தலைமுதலாக உடம்பெங்கும் பூசி, மற்றொரு கூற்றில் இருதயத்தால் நீர் விட்டுக் கவசத்தாற் (வௌஷட்) குழைத்து நடுவிரல் மூன்றினாலும் சிரசிலும் நெற்றியிலும் மார்பிலும் கொப்பூழிலும் முறையே ஈசானம் முதலிய நான்கினாலும் பூசி, முழந்தாள், புயம், முழங்கை, மணிக்கட்டு, விலா, முதுகு, கழுத்து ஆகிய இடங்களிலே சத்தியோசாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரஞ் சொல்லிப் பூசுக.

### 5) விபூதி ஸ்நானம்

எஞ்சிய திருநீற்றிலே தண்ணீர் விட்டுப் பிடித்துக்கொண்டு பஞ்சப்பிரம மந்திரங்களைச் சொல்லியபின் தலையிலே தெளிக்க.

## 02. மந்திர ஸ்நானம்

ஆசமனமும் பிராணாயாமமுஞ் செய்து, அநுட்டான தீர்த்தத்தைச் சிவதீர்த்த மாக்கி, அதை மந்திரஸ்நானத்துக்காக உபயோகிக்க சிவதீர்த்தமாக்குதல் சிவதீர்த்தகரணம் எனப்படும்.

1. சிவதீர்த்த கரணம் - புருவ நடுவிலே ஞானமயமாகிய அமிர்த முண்டு. அதை இருதயமந்திரம் (வௌஷட்) சொல்லிச் சுட்டுவிரலினால் எடுத்துத் தீர்த்தத்திலே வைத்து மூலமந்திரத்தால் அபிமந்திரித்துத் திக்குபந்தனமும் அவகுண்டனமுஞ் செய்க.
2. சலத்தை இடக்கையில் விட்டுச் சங்கிதையால் அபிமந்திரித்துத் தலையிலே தெளிக்க.
3. சலத்தை வலக்கையால் மூடிச் சங்கிதையால் அபிமந்திரித்து இடக்கையிலே சலத்தைவிட்டுக் கீழே ஒழுகுகின்ற சலத்தைச் சங்கிதையால் (வௌஷட்) தலையிலே தெளிக்க.
4. எஞ்சிய சலத்தை வலதுகையில்விட்டு, மூக்குக்குக் கிட்டப் பிடித்து, அந்தத் தீர்த்தத்திலுள்ள சிவசக்தியினாலே சரீரத்திலுள்ள தீவினையைக் கெடுத்து, வலக்காற் பெருவிரலிலுள்ள ஞானாக்கினியில் அஸ்திர மந்திரம் (உம்பட்) சொல்லி விட்டுக் கைகழுவுக. இதனாலே தீவினையின் பயன் அப்போது மறையும். இது அகமர்ஷணம் எனப்படும்.

(அகம் - பாவம், மர்ஷணம் = கெடுத்தல்)

## 03. கடவுள் வழிபாடு - ஆசமனஞ் செய்து

1. சிவபெருமான், உமாதேவியார், விநாயகர், சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகளுக்குத் தர்ப்பணஞ் செய்க. தர்ப்பணம் = திருப்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தல், எப்படியெனில், இரண்டு கையும் நிறைந்த சலத்தைச் சிவமந்திரத்தைச் சொல்லி மூன்றுமுறை விடுக. சிவமந்திரத்தைப் பத்துத்தரம் சொல்லிச் சிவமந்திரத்தாற் பின்னுந்தர்ப்பணஞ் செய்து, சங்கிதையால் (சுவாகா) ஒவ்வொரு தரமும் உமாதேவியார், விநாயகர், சுப்பிரமணியராயினோர்க்கு ஒவ்வொரு முறையும் அந்தந்த மந்திரத்தால் (சுவாகா) தருப்பணஞ் செய்க.

2. ஆசமனஞ்செய்து சலத்திலே வைத்த அமிர்தத்தை இருதய மந்திரத்தால் (வௌஷட்) எடுத்துப் புருவ நடுவில் ஒடுக்குக. இது தீர்த்தோபசங் காரமெனப்படும். இரண்டு கைநிறையச் சலம் விட்டுச் சங்கிதையைச் செபித்துச் சூரிய மண்டலத்திலே விளங்கும் சிவபெருமானுக்குத் தருப்பணஞ் செய்க.

3. வடக்குமுகமாக இருந்து சிவபெருமானது உருவத்திருமேனி யாகிய உருத்திரவடிவத்தை நினைத்துச் சிவமூலமந்திரத்தை நூறு முறையேனும் ஐம்பது முறையேனும் பத்து முறையேனும் இயன்றளவு செபித்து செபத்தைக் கடவுளுக்கு ஒப்புக் கொடுத் துத் தோத்திரஞ் செய்க. சலத்தைக் கால்படாத இடத்தில் விடுக.

**சந்தியா வந்தனம்**

மாலை, இரவு : இரவு, காலை ஆகிய காலங்களின் சந்திப்பிற் செய்யப்படும் கடவுள் வழிபாடே சந்தியாவந்தனம் எனப்படும். இது சூரியனை வழிபடுதலாகும். நாம் அன்றாடம் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் பாவங்களை மன்னித்து நல்வாழ்க்கை வாழ்வதற்கு ஆண்டவனிடம் பிரார்த்திப்பதே சந்தியாவந்தனத்தின் உட்பொருளாகும்.

**செய்யும் முறை**

(1) ஆசமனம் - கடவுளைத் தியானித்து, சிறிது நீரை உள்ளங்கையில் விட்டு அருந்தவும்.

(2) மார்ஜனம் வேண்டி - உடலையும் மனத்தையும் தூய்மைப்படுத்த சிறிது நீரை உடல் மீதுதெளிக்கவும்.

(3) அகமர்சனம் - பல முற்பிறவிகளிற் செய்த பாவத்திற்குப் பிராயச் சித்தமாக வேண்டுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) சூர்ய அர்க்யம் - சூரிய பகவானைக்குறித்துப் பிரார்த்தனை செய்து நீர் தெளித்தல்.

(5) பிராணாயமம் - அலையும் மனதை கட்டுப்படுத்தி, மூச்சுப் பயிற்சி செய்து, காயத்ரி மந்திரத்தைப் பாராயணம் செய்தல்.

(6) உபஸ்தானம் - கருணையும் அருளும் வேண்டி, சூரிய பகவானிடம் வேண்டுதல்.

**தீட்சை**

குரு தன் சீடனுக்குச் செய்யும் அருள் உபகாரம். தீட்சை ஞானத்தை அருளிப் பாசத்தைப் போக்குவது என்பது இதன் பொருள் சைவர்களுக்குத் தீட்சை பெறுவதே சமயப் பிரவேசம் ஆகும். சமய தீட்சை பெற்ற பின்னரே சைவ சமய அனுட்டானங்களை மேற்கொள்ளலாம். இதுவே அடிப்படைத் தீட்சை, யாகம் வளர்த்துத் தீட்சை வைப்பதே முறை.

தீட்சை வைபவத்தின்போது, குருவின் அருட்பார்வையாற் சீடன் ஆணவ மலத்தினின்று விடுபடுகிறான். குரு ஆசீர்வதித்துத் திருநீற்றைக் கொடுக்கும்போது கெட்ட எண்ணங்கள் நீங்குகின்றன. அவர் தர்ப்பையினால் தீண்டி ஆசீர்வதிக்கும்போது நல்ல எண்ணங்கள் உண்டாகின்றன. அதன்பின் தீட்சை மந்திரத்தைக் குருசீடனுக்கு உபதேசித்து அருளுகின்றார்.

ஆகவே, தீட்சைபெற்றுச் சைவர்களாக வாழவேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளோடுதான் தீட்சை வைபவங்களை நடாத்து கிறார்கள்.

1) சமய தீட்சை - சரியை மார்க்கம் தொடங்க முன் செய்யப் பெறுவது. அக்கினி காரியம் செய்து சமய தீட்சை செய்யப்படுகிறது.

2) விசேஷ தீட்சை - கிரியா மார்க்கத்திற்கு உரியது

3) நிர்வாண தீட்சை - யோகத்திற்கும் ஞானத்திற்குமுரியது

4) ஸ்பரிஸ தீட்சை - குரு தன் திருக்கரங்களாற் சீடனைத் தொடுவது.

5) நயன தீட்சை - குரு, தன் அருட்பார்வையாற் சீடனை நோக்குவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) மானச தீட்சை - குரு தன் மனத்தாற் சீடனது மனத்தைத் தன் வயப்படுத்துவது.

7) வாசக தீட்சை - குரு உபதேசம், நல்ல அருள்வாக்குகளைச் சொல்வது.

8) சாத்திர தீட்சை - குரு, சீடனுக்கு பதி, பசு, பாசத் தொடர்பை உபதேசிப்பது.

9) யோக தீட்சை - குரு, சீடனுக்கு இறைவனோடு சேரவேண்டிய யோக முறைகளைச் சொல்லித் தருவது.

10) ஔத்திரி தீட்சை - அக்கினி காரியத்தோடு செய்து சீடனைத் தூய்மைப்படுத்துவது.

குறிப்பு : இவற்றைக் குருவின்மூலம் அறிந்துகொள்வதே சிறந்தது.

# பூப்புனித நீராட்டு விழா

ஒரு பெண்குழந்தை பிறந்து வளர்ந்து பருவமடைந்து தாய்மைக்குத் தகுதியுடைய வளாக மாறும் நாள், பூப்படைதல் என்று சொல்லப்படும். பெரும் பாலும் 9 வயது முதல் 12 வயதிற்குள் பூப்படைதல் பெண்குழந்தைகளுக்கு ஏற்பட்ட பின்னரே, பரிபூரணமான பெண்ணாகின்றாள்.

**நீராட்டல்**

பெண் பூப்படைந்தவுடன் முற்காலத்திற் கிணற்றடியிற் காய்ந்த இலைகளின்மேல் இருத்தி, தாய்மாமன் தேங்காய் உடைக்க, மாமி தண்ணீர் ஊற்றி நீராட்டுவார்கள். கிணற்றடி பொது இடம், பெண்ணிலிருந்து வெளிப்படும் தீட்டு பிறர் கண்ணிற்படாது குப்பைக்குள் மறைந்துவிடும் என்பதால்காய்ந்த இலைகளின்மேல் இருத்தி நீராட்டுவார்கள். இக்காலகட்டத்திற் பெண்ணைக் குளியலறையில் மாமியார் நீராட்டலாம். பின்பு பெண்ணுக்கு வெள்ளை ஆடைஅணிவித்து தாய்மாமனிடம் ஆசீர்வாதம் பெற்றபின், ஒரு தனியறையிற் பெண்ணை விடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வறையில் வேப்பிலையும் காம்புச் சத்தகம் முதலானவற்றை இருப்பிடத்தின் மேலே சொருகி விடுவர். பெண் பூப்படைந்தபோது அணிந்திருந்த ஆடையினைக் குடும்பச் சலவைத் தொழிலாளிக்குக் கொடுப்பதே மரபாக உள்ளது. தீட்டுக்கழியும் வரை மாற்றுடுப்புகளை வழங்கவேண்டியபொறுப்பும் அவரையே சார்ந்துள்ளது. அழுக்கடைந்த சேலையை கட்டாடியார் எடுத்துச்சென்று, சிறுமி பூப்படைந்துவிட்டாள் என்பதைக் கட்டாடியார் உறுதிப்படுத்துவார். அவ்வீட்டில் உள்ள அனைவருக்கும் மூன்றுநாள்கள் தீட்டுத்துடக்காகையால், அதை நிவர்த்தி செய்வதற்கு அந்தணரை அழைத்து புண்ணியவாசம் செய்வர். (இதை 5ஆம், 7ஆம் நாட்களிலும் செய்யலாம்) முன்பு கிராமப் புறங்களிற் பூப்பெய்தி 4ஆம்நாள், பசும்பால் வைத்து நீராட்டித் தீட்டுத் துடக்கைப் போக்குவார்கள்.

**உணவுமுறை :**

முதல் மூன்றுநாட்களும் பச்சையரிசிச் சாதமும், கத்தரிக்காய்ப் பால்கறியும் கொடுத்தல் வேண்டும். மூன்று நாட்களின்பின், அதிகாலை ஒரு பச்சை முட்டை குடிக்கக் கொடுக்கும்பொழுது, அதன் அளவு நல்லெண்ணெய்யும் முட்டைக்கோதுக்குள் விட்டுக் குடிக்கக் கொடுக்க வேண்டும். பின்பு காலை உழுத்தங்களி, மதியம் சோறு கறி, கத்தரிக் காய்ப் பொரியல் கொடுக்கலாம் பால்விடாது காலை, மாலை கோப்பி கொடுக்கலாம். இரவு இடியப்பம் கொடுக்கலாம். இக்காலத்தில் இலகு வாக ஜீரணிக்கக்கூடிய போசாக்கான சத்துள்ள உணவுகளைக் கொடுக்கவேண்டும். முக்கியமான அனைத்து உணவுகளிலும் உழுந்தும் நல்லெண்ணெய்யும் மிகுதியாகச் சேர்க்க வேண்டும்.

அத்துடன் காலையில் (வேப்பிலை 10, மிளகு 3, விரற்பிடி சின்னசீரகம், 2 உள்ளிப் பல், சிறுதுண்டு மஞ்சளும் இஞ்சியும்) இவற்றை அரைத்துக் குளிசை களாக்கி 3 நாள்களுக்கு விழுங்கக் கொடுப்பது உடலுக்கு நல்லது.

**சாமர்த்தியச் சடங்கு**

சடங்கு செய்வதற்கு, சுபநாளில் ஒன்றைத்தெரிவுசெய்து (5, 7, 9, 11, 13 நாட்களின்பின் சடங்கு செய்யலாம்) அன்று பருவமடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின் இரண்டு கைகளிலும் ஒவ்வொரு வெற்றிலைக்குள் பாக்கும் சில்லறைக்காசும் வைத்துச் சுருட்டிக் கொடுத்து, தலையில் வெள்ளைத் துணியால் முகத்திரை இட்டு (அபசகுணங்களைப் பார்க்காமல் இருப்பதற்கு) மாமியார் பால்அறுகு வைக்கும் இடத்திற்கு அழைத்து வந்து, கிழக்கு அல்லது வடக்கு நோக்கிப் பார்க்கக்கூடியதாக, பாயின் மேலோ அல்லது ஒரு பலகைக் குற்றியின் மேலோ, ஒரு வெள்ளைத் துண்டை இட்டு, பருவமடைந்த பெண்ணை உட்கார வைக்க வேண்டும். அவளின் முன் நிறைகுடமும், குத்துவிளக்குகளும்,ஒரு பாத்திரத்தில் பால், அறுகம்புல், சில்லறைக் காசு என்பனவும்,வேறு ஒருதட்டில், பழம், பாக்கு, வெற்றிலையும், ஒரு தேங்காயுடன் உடைப்பதற்குக் கத்தியும் பாத்திரமும் வைக்கவேண்டும். இச்சடங்கில் தாய்மாமன், மாமிக்குத்தான் முக்கியஇடம் அளிக்கப்படும். பெண்ணை நிறைகுடம், குத்துவிளக்கு பார்க்கும்படி பெண்ணுக்குக் கூறி, முகத்திரையை விலக்கிவிட்டு அதன்பின் கற்பூரம் ஏற்றி, பிள்ளையாரைத் துதித்து, எடுத்த காரியம் இனிதே நடை பெறவேண்டும் என்று நினைத்து வணங்கவேண்டும். தாய் மாமன் தேங்காய் உடைப்பார். பின் பால், அறுகு இருக்கும் தட்டிற் சில்லறைக் காசு போட்டு, மாமியார் இருகைகளினாலும் எடுத்து பெண்ணை ஆசீர்வதித்து, தலையிலே வைப்பார். அதைத் தொடர்ந்து 5 பேர் அல்லது 7 பேர் என ஒற்றை எண்ணிக்கையானவர்கள் பாலறுகு வைப்பர். பாலறுகு வைத்து முடிந்ததும் பெண்ணை நீராட்டும் இடத்திற்கு அழைத்துச்சென்று, அங்கும் கிழக்கு அல்லது வடக்கு முகமாகப் பெண்ணை இருத்தி, முதலில் தாய்மாமன் தலையிலே தண்ணீரை ஊற்றவார். அதனைத் தொடர்ந்து ஏனையவர்களும் ஊற்றுவர். பெண்ணுக்கு மஞ்சள் பூசி, நன்கு நீராட்டி திரும்பவும் தலையைத் துணிகொண்டு மூடி அழைத்துவந்து, சுடர்விட்டுப் பிரகாசிக்கும் குத்துவிளக்கில் தரிசிக்க விடுவர். பின்பு பெண்ணை அலங்காரம் செய்து, தாய்மாமன் பெண்ணின் கையில் கும்பம் (நீர் நிரம்பிய செம்பு, தேங்காய் வேப்பிலைக் கொத்து, மாவிலை) கொடுப்பார். கன்னிப் பெண்கள் ஆரத்திப் பொருட்களுடன் பெண்ணை அழைத்துக் கொண்டு மணவறை நோக்கிச் செல்வர். அங்கு ஆரத்தித் தட்டங்களை வரிசையாக வைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர், சுமங்கலிப் பெண்கள் இருவர், எதிரெதிராக நின்று கொண்டு ஒவ்வொரு தட்டங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக மூன்று முறை வலது தோளால் உயர்த்தி ஆரத்தி எடுத்து, பின் சிரசை மூன்று முறை வலது தோளால் உயர்த்தி ஆரத்தி எடுத்து பின் சிரசை மூன்று முறை சுற்றி, அதைப் பின்னுக்குக் கொடுத்து கண்ணூறு கழிப்பார்கள். பின்பு கடைசியாக வேப்பமிலை, பால் றொட்டியால் ஆரத்தி எடுத்து, பெண்ணை வேப்பிலையாற் சுற்றித்தடவி பால்றொட்டியை உடைத்து நாலுபக்கமும் எறிந்து வேப்பிலையால் தலையைச் சுற்றிப் பெண்ணை வாயில் வேப்பிலையை மென்று துப்பச் செய்த பின்னர், வாழைப்பழ ஆரத்தி எடுப்பர். (ஆரத்திக்குரிய தட்டங்களின் ஒழுங்கு இடத்துக்கிடம் வேறுபடலாம். ஆனால் எப்பவும் நிறை நாழி முதலாவதாகவும் வேப்பிலை வெள்றொட்டித் தட்டம் இறுதியாகவும் செய்யவேண்டும். அதன்பின் வாழைப்பழம் ஆரத்தி எடுத்து நிறைவு செய்தல்வேண்டும். (பொதுவாகப் பெண்ணின் தாயார் ஆராத்தி எடுப்பதில்லை) பெற்றோர் ஆண்டாள் மாலையைப் பெண்ணின் கழுத்தில் இட (ஆண்டாள் மாலை அணிவது பெண்ணைப் பாவையாகக் கருதுவதால்) பெண்ணின் முன் இருக்கும். நிறைகுடத்தைத் தாய்மாமனும் குத்துவிளக்கை மாமியாரும் எடுத்துக்கொண்டு அதனுடன் பெண்ணையும் அழைத்துக்கொண்டு பூஜை அறையினுள் சென்று வைப்பர். தாய்மாமன் பெண்ணின் கையிலிருக்கும் செம்பை வாங்கி, பூஜை அறையில் வைப்பார். (இம்முறை வீட்டிற் மங்கலம் செய்வோருக்குப் பொருந்தும்) பூஜை அறையில் தூப, தீபம் காட்டி வழிபட்டு, பெண் பெற்றோரினதும், மாமன் மாமியினதும் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெறுவாள். பின்பு சடங்கிற் பங்குபற்றிய உறவினர்கள் பெண்ணை வாழ்த்தித் தம்மால் இயன்றவற்றைப் பரிசளிப்பர். அதன்பின் விருந்தினர்களுக்கு மதியபோசன விருந்தளித்து உபசரிப்பர்.

**ஆரத்தி எடுக்கும் முறை :**

ருது சாந்தியின்போது எடுக்கும் ஆரத்தி, 3 முறை மேலும் கீழுமாகச் சுற்றி, பின் பெண்ணின் தலைக்கு மேல் 3 முறை சுற்றிப் பின்புறம் கொடுக்க வேண்டும் (நிறைநாழியும், பன்னீர்த் தட்டமும் முன்னுக்கு வைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். உணவுத் தட்டங்களைத் தலைக்கு மேல் சுற்றிப் பின்புறம் கொடுக்க வேண்டும்) பூந்தட்டத்தால் ஆரத்தி எடுத்தபின், பூக்களைப் பெண்மேல் தூவிவிடுதல் வேண்டும். பின் இந்த உணவுப்பண்டங்களை எல்லாம் கட்டிக் கட்டாடியிடம் கொடுத்துவிட வேண்டும். அல்லது ஆற்றிலோ, கடலிலோ சேர்த்து விடலாம். இன்றைய நிலையில் ஏழைகளுக்குக் கொடுத்துவிடலாம்.

பால்சாதம்: பச்சைஅரிசிக்குள் தேங்காய்ப்பாலும், நீரும் சிறிது உப்பும் போட்டுச் சாதமாக அவித்து 3 தளிசுகளாகத் தட்டில் வைக்கவும்.

பிட்டு: வழமைபோல் வறுத்த உழுத்தம்மா அரிசிமா கலந்து செய்த பிட்டை நீற்றுப்பெட்டியில் மும்முறை அவித்துத் தட்டத்தில் வைக்கவும்.

களி : வறுத்த அரிசிமா 1 சுண்டு, வறுத்த உழுத்தம் மா 1/2 சுண்டு, தேங்காய்ப்பால் 3 சுண்டு, பனங்கட்டி 3/4 சுண்டு, உப்பு விரற் பிடியளவு, தேங்காய்ப்பாலைக் காய்ச்சி (உழுத்தம்மா, அரிசிமா, உப்பு தூளாக்கிய பனங்கட்டி) எல்லாவற்றையும் கலந்து, பாலின் மேல் தூவி, கட்டி படாமல் கிளறி எடுக்கவும். 3 தளிசுகளாகத் தட்டத்தில் வைக்கவும்.

**வென்ரொட்டி (பால் ரொட்டி)**

ஒரு சுண்டு பச்சை அரிசியைக் கழுவி, ஊறவைத்து, இடித்து 1/4 சுண்டு கப்பிமா எடுக்கவும். மிகுதியை மாவாக்கவும். இரண்டையும் கலந்து 1/2 தேக்கரண்டி உப்பும் சேர்க்கவும். ஒரு தேங்காய் துருவி, முதற்பால் எடுத்துக் காய்ச்சி, மாவில் ஊற்றி, இறுக்கமாகக் கையில் ஒட்டாத பதத்திற்குக் குழைக்கவும். 1/2 மணித்தியாலம் விட்டு, ஒரு வாழையிலையில் எண்ணெய் தடவி மாவைச் சிறு சிறு உருண்டை களாக்கித் தட்டி, எண்ணெய்யிற் பொரிக்கவும். இது பூரிபோற் பொங்கி வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆரத்திப் பொருட்கள்**

நிறைநாழி (நிறைநாழிக்கொத்தில் நெல்லை நிரப்பி அதிற்காம்புச் சத்தகத்தை நிற்க வைத்து, நுனிக்காம்பில் ஒரு வெற்றிலையைச் சொருகி வைக்க வேண்டும்)

**பிட்டு, களி, பால்சாதம், சோறுகறி**

தேங்காய்த்தட்டம் (முடியுடன் கூடிய 3 தேங்காய்களை மஞ்சள் நீர்கொண்டு கழுவித் தட்டில் வைக்க வேண்டும்)

பழங்கள், பலகாரம், பன்னீர்த்தட்டம், வெற்றிலை, பாக்கு, எலுமிச்சை, பூந்தட்டு, வெள்ரொட்டி, வேப்பிலை, ஆரத்தி.

# திருமணச் சடங்கு

திரு என்பது தெய்வத்தன்மை எனவும், மணம் என்பது இணைதல் எனவும் பொருள்பட்டு, மேன்மையான தெய்வீகம் வாய்ந்த இணைதல் எனப்படுகின்றது. அதாவது இரு இதயங்கள் இணைவது எனக் கூறலாம்.

தமிழரின் இந்துத் திருமணம், ஆகமமரபுச் சடங்குகளுடன், சில சிறப்பு அம்சங்களையும் தழுவி நடைபெறுகின்றன. இச் சடங்குகளை நன்கு படித்த சிவாச்சாரிய மங்கலக் குருக்கள் சமய முறைப்படி, அக்கினி பூர்வமாக இறைவனின் ஆசியுடன் நடாத்தி வைக்கிறார். திருமண நிகழ்வில் முக்கியமான நிகழ்ச்சி நிர்ணயிக்கப்பட்ட சுபவேளையில் தாலி கட்டுதலாகும். இதனை "மாங்கல்யதாரணம்" எனக் கூறுவர். தாலி கட்டியதும் அப்பெண் "சுமங்கலி" அதாவது திருமணமானவள் என்ற அந்தஸ்த்தைப் பெறுகிறாள்.

இரு வீட்டாரும் முதலிற் சாதகப் பொருத்தத்தை ஆராய்வார் தமிழ்நாட்டில் பெண் பார்க்கும் படலம் போன்று, நம் நாட்டிற் பெண்ணை மணமகன், பொதுஇடங்களிற் பார்ப்பது வழக்கமாகவுள்ளது. பின் நிச்சயதார்த்தத்தை உறுதிசெய்யப் பெண்வீட்டார் தாம்பூலம், பலகாரம் பழங்களோடும், உறவின ரோடும் மணமகன் வீட்டிற்கு நல்லநாளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துச் செல்வார். இதன்பின் இரு வீட்டாரும் திருமணநாளைச் சோதிடரிடம் கேட்டு நிச்சயிப்பர். அத்தோடு பொன்னுருக்கும் நல்லநாளை நிச்சயிப்பர்.

**பொன்னுருக்கல்**

திருமணநாளுக்கு முன்பு ஒரு சுபநாளில் மணமகன் இல்லத்தில் அல்லது ஆசாரி வீட்டிற் பொன்னுருக்கல் நடைபெறும். இதில் மணப்பெண்ணைத் தவிர, பெண்ணின் உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொள்வர். பெண் வீட்டார் ஓர் இனிப்புப் பண்டம் (கொழுக்கட்டை) கொண்டு செல்லுதல் தொன்றுதொட்டுவரும் சம்பிரதாயம்.

மணமகன் வீட்டு வாசலில் முறைப்படி நன்மங்கலமாக நிறைகுடம், குத்துவிளக்கு, பன்னீர்த்தட்டு, குங்குமம், சந்தனமும் வைத்து, பொன்னுருக்கும் இடத்தில் ஒரு நிறைகுடம், குத்து விளக்குகள் 2, தேங்காய் 2, மாவிலை, வெற்றிலை பாக்கு, வாழைப்பழம், மஞ்சள் கட்டை (துண்டு), தேசிக்காய், அறுகம்புல், பூக்கள், ஒரு சட்டியில் தண்ணீர், தேங்காய் உடைக்க பத்தி, விபூதி, குங்குமம், சந்தனம், தேசிக்காய், மஞ்சளிற் பிள்ளையார், சாம்பிராணியும் தட்டும், கற்பூரத்தட்டும், கற்பூரம் முதலியன முக்கியமாகத் தேவைப்படும் பொருட்களாகும்.

திருமாங்கல்யத்திற்குரிய தங்கநாணயத்தை (பவுணை ஆலயத்தில் (இறைவனிடத்தில்) வைத்து, பூசைசெய்து ஒரு தட்டத்தில் வெற்றிலை, பாக்கு, மஞ்சள், குங்குமம், பூ, பழத்துடன் நாணயத்தையும் வைத்துக் கொண்டுவந்து பூஜையறையில் வைக்க வேண்டும்.பொன்னுருக்கும் நாளன்று அதை மணமகனின் பெற்றோர்அல்லது பெரியோர் எடுத்து மணமகனிடம் கொடுக்க அவர் அதை ஆசாரியாரிடம் கொடுத்து உருக்க வேண்டும் ஆசாரியார் கும்பம் வைத்து விளக்கேற்றி, தூபதீபம் காட்டி வெற்றிலை,பாக்கு, வாழைப்பழம் முதலியவை வைத்து, தேங்காய் உடைத்துப் பூசை செய்து, பொன்னை உருக்குவார். உருக்கிய பின், தாய்மாமன் தேங்காய் உடைத்து அந்த இளநீரை உருக்கிய தணலில் ஊற்றித் தீயைத் தணிப்பார். பின் ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், பூ, மஞ்சள், குங்குமம், தேசிக்காய் வைத்து வெற்றிலை மேல் உருக்கிய தங்கத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து, மணமகனிடம் ஆசாரியார் கொடுப்பார். அதை மணமகன் வந்துள்ள சபையோருக்குக் காண்பித்து அதன்பின் ஆசாரியாருக்கு அரிசி, காய்கறியுடன் தட்சணை அளித்து, உருக்கிய தங்கத்தைத் திருமாங்கல்யம் செய்து ஒப்படைக்க வேண்டும். பின்னர் விருந்துபசாரத்தில் அனைவரும் கலந்துகொள்வர். மணமகன் வீட்டிலிருந்து தோழி ஒருத்தி விருந்தில் ஒரு பகுதியை மணமகளின் வீட்டிற்கு சென்று மணமகளிற்குக் கொடுப்பார். இதே நாளில் இரு வீடுகளிலும் திருமணத்திற்குரிய பலகாரங்களைச் செய்யத் தொடங்குவார்கள். முதன்முதலாக இனிப்புப் பலகாரம் செய்ய வேண்டும் என்பதால் சீனி அரியதரம் செய்யலாம். அதற்குரிய மாவைக் குழைத்து வைத்தால், கன்னிக்கால் ஊன்றியபின் பலகாரம் சுடலாம். (இந்த நாளிலிருந்து திருமணநாள் வரை மணமக்கள் ஒருவரை ஒருவர் பார்க்கக்கூடாதென்பது பழையகால சம்பிரதாயம்)

**கன்னிக்கால் ஊன்றல்**

இதே நாள் பெண் வீட்டிலும் மணமகன் வீட்டிலும் தனித்தனியே அவர்களின் வளவில் ஈசான (வடகிழக்கு) மூலையில் முகூர்த்தக்கால் அல்லது கன்னிக்கால் ஊன்ற வேண்டும். அதற்கு இப்போது முள்முருங்கை மரத்தில் ஒரு தடியை வெட்டி அதன்மேல் நுனியில் 5 மாவிலைகளை மஞ்சள் பூசிய கயிற்றால் கட்டி, இடையில் ஒரு மஞ்சள் பூசிய வெள்ளைத் துணியில் ஒரு செப்புக்காசு முடிந்துகட்டிவிட வேண்டும். பெரியவர் ஒருவர் அத்தடியை நிலத்தில் ஊன்றியதும், அதற்குத் தேங்காய் உடைத்து சாம்பிராணி, கற்பூரம் காட்ட வேண்டும். அதனடியில் நவதானியத்தோடு பவளம் அல்லது நவமணிகளும் இட்டு நீர், பால் ஊற்றி (3 சுமங்கலிப் பெண்கள்) மரத்திற்கு திருநீறு, சந்தனம், குங்குமம் சாத்த வேண்டும். இது நன்கு வளரவேண்டுமென்று நினைத்துக் கும்பத் தண்ணீரை ஊற்றலாம்.

மஞ்சளிற் பிள்ளையார் பிடித்து வைத்து வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து தேங்காய் உடைத்துத் தூபதீபம் காட்டி பந்தற்காலை ஊன்றுவார்கள். பந்தற்காலைத் தொடர்ந்து, பந்தல் அமைக்கும் வேலை தொடரும். மணமகன் வீட்டில் ஊன்றியபின் பெண்வீட்டுக்கும் சென்று இதேபோற் செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகூர்த்தக்கால் ஊன்றிய பின், இரு வீட்டாரும், திருமணச் சடங்குகள் முற்றாக முடிவடையும் வரை, எந்தவிதமான துக்க நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்ளக்கூடாது என்பர். (பந்தற்கால் ஊன்றுபவருக்குத் தட்சணை கொடுக்க வேண்டும்)

**முளைப்பாலிகை போடல்**

பெண்வீட்டில் மூன்று அல்லது ஐந்து மண்சட்டிகளில்மண்பரப்பி நீர் ஊற்றவும். பாலில் ஊறவைத்த நவதானியங்களை 3 அல்லது 5 சுமங்கலிப் பெண்கள் அச்சட்டிகளில் தூவி, நீரும் பாலும்தெளிக்க வேண்டும் (3 முறை) இவற்றை சாமி அறைக்குள் வைத்து, திருமணத்தன்று மணவறைக்குக் கொண்டுபோகவேண்டும். அநேகமாக பொன்னுருக்கன்று செய்வார்கள். (இதை 3 நாட்களுக்கு முன்னாவது செய்தால் திருமணத்தன்று நவதானியம் வளர்ந்து இருக்கும்)

முளைப்பாலிகை இடுவதன் நோக்கம், திருமணம்செய்து கொள்ளும் மணமக்களும் அவர்கள் குடும்பமும் முளைவிட்டுப் பல்கிப்பெருகி வாழ வேண்டும் என்பதே. "விரித்த பாலிகை முளைக்கும் நிரையும்" என்கிறது சிலப்பதிகாரம். இந்தப் பாலிகையானதைத் திருமணத்திற்குப் பின் நதியிலே சேர்த்து விடலாம்.

நவதானியம் - நெல், கோதுமை, பயறு, துவரை, மொச்சை, எள்ளு, கொள்ளு, உழுந்து, கடலை என்பனவாம்.

**பந்தல் அமைத்தல்**

முகடுடைய பந்தல்அமைக்கும் பழக்கம் அக்காலத்தில் நடைமுறையில் இருந்து வந்துள்ளது. பந்தலின் உட்பகுதியில், மேலுக்குத் துணிகளைக் கட்டுவார்கள். அழகுக்காகவும் திருமணச் சடங்கு நடக்கும் பொழுது பந்தலின் மேலிருந்து தூசி அழுக்குப் பொருட்கள், பல்லி போன்றவை விழுந்துவிடாமல் இருப்பதற்காகவும் இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பந்தலைக் கமுகு, வாழை, தென்னை ஓலைகளால் அலங்கரிப்பர்.

வாழைமரம் ஒருமுறை தான் குலைபோடும். அதுபோல் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்விலும் திருமணம் ஒருமுறைதான் என்பதை உணர்த்துகிறது பாக்குக் கொத்தாகக் காய்ப்பதால் இது புதுத் தம்பதி ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. வாழையும் தென்னையும் 'கற்பகத்தரு' இவை அழியாப் பயிர்களாகும். தென்னை நூறாண்டு வாழக்கூடியது. வாழை 'வாழையடி வாழையாக' வளர்வது. தேங்காயும் வாழைப்பழமும் இறைவழிபாட்டில் முக்கியமாகிறது. தம்பதி நிலைத்துநின்று அனைவருக்கும் பயன்படக்கூடியவாறு வாழ வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துகின்றது.

திருமணம் வசதிக்கேற்பப் பெண்வீட்டிலோ, கோயிலிலோ அல்லது வேறு மண்டபத்திலோ வைக்கலாம். அப்படி வேறு மண்டபத்தில் வைப்பதனால் இருவரது வீட்டுவாசல்களிலும் மண்டப வாயில்களிலும், மாவிலை, தோரணம், வாழை மரங்களால் அலங்கரிக்க வேண்டும்.

வாழைமரம் கட்டுவதன் நோக்கம், வாழையடி வாழையாக, வாழைமரம் தழைத்து வளருவதுபோல, நமது சந்ததியும் பெருக வேண்டும் என்பதாகும். மாவிலை தோரணங்கள் நன்மங்கல முறையாகக் கட்டவேண்டும். வாசலில் நிறைகுடம் வைக்க வேண்டும். வசதிக்கேற்ப வீடுகளையும் மண்டபத்தையும் அலங்கரிக்கலாம். மண்டபத்தில் நன்கு அலங்கரிக்கப்பட்டே மணவறை கிழக்கு நோக்கி அமைக்கப்படும். மணவறையின் முன்பு சுவாமி, அம்பாள், கும்பங்கள், சந்திரகும்பம், விநாயக பூஜை, பஞ்சகவ்வியம் பூசைக்கென ஒரு கும்பம், அக்கினிக் கிரியைக்குரிய பாத்திரம், அம்மி, மஞ்சள் நீர் உள்ள பாத்திரம் ஆகியவை வைக்கப்படும்.

1. விநாயகர்
2. ஓமகுண்டம்
3. அரசாணி
4. சந்திரகும்பம்
5. அம்மி
6. ஈசான மூலை - சுவாமி அம்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அக்கினி மூலை - நவக்கிரக கும்பங்கள்

8. மஞ்சள் நீர்ப்பாத்திரம் - மோதிரம் போட்டெடுத்தல்

அரசாணியைச் சுற்றி 4 விளக்குகள் 4 நிறைகுடங்கள் வைக்கப்படும். (4, 5, 6, 7) சந்திர கும்பத்திற்கு முன்பாக முளைப்பாலிகைச் சட்டிகள் வைக்கப்படும்.

குருக்கள் தன் முன்பாக புண்ணியதானத்திற்குரியவற்றை வைத்து, அதன் பக்கத்தில் மஞ்சட் பிள்ளையாரும், ஒரு கிண்ணத்திற் பஞ்சகவ்வியமும் வைத்திருப்பார். அரசாணி மரமும் அலங்கரிக்கப் பட்டிருக்கும். அதன் இருபக்கமும் ஒரு பக்கம் பாலிகைச்சட்டியும், நடுவில் அம்மியும், அதன் பின்பு சிவன் பார்வதி கும்பங்களும், மறுபக்கம் நவக்கிரக கும்பங்களும், ஆக முன்பாக அரசாணிப் பானையும், நான்கு பக்கமும் நான்கு விளக்குகளும் அரசாணி மரத்தைச் சுற்றி நான்கு கும்பங் களும் வைத்துக் கல்யாண மண்டபம் மேற்கூறியபடி நிறுவப்பட்டிருக்கும்.

**மணமகன் அழைப்பு**

திருமணத்தன்று மணமகனை கிழக்கு முகமாக ஒரு பலகையில் இருத்தி அவரின் கைகளில், வெற்றிலையைச்சுருட்டி அதற்குள் சில்லறைக்காசு வைத்துக் கொடுக்கவேண்டும். அவருக்கு முன்னால்நிறைகுடம், குத்து விளக்கு, தாம்பூலம் வைக்க வேண்டும். 3, 5, 7 என்ற எண்ணிக் கையில் ஆண்களும்பெண்களும் அறுகும் காசும் பாலும் கொண்டகலவையை மணமகனின் தலையில் ஒரு வெள்ளைத்துண்டை விரித்து அதன்மேல் பாலை இடலாம். முதல் பால் வைக்கும்போது வடக்கு முகமாயிருந்து தாய்மாமன் தேங்காய் உடைக்கவேண்டும். பால் வைத்ததும் மணமகன் போய் குளித்துவிட்டு வரவேண்டும். பெண் வீட்டாரும் இதில் கலந்து கொள்வார்கள். மணமகன் சாமி அறையில் சாமி கும்பிட்டு கற்பூரம் காட்டி, தாய் தந்தையரை விழுந்து வணங்க வேண்டும். பெண் வீட்டார் மணமகன் வீட்டுக்கு வரும் போது ஒரு தட்டில் வாழைப்பழம், ஒரு தட்டில் பலகாரம், இன்னொரு தட்டில் பூ எல்லாமாக 3 தட்டுக்களுடன் வரவேண்டும். எல்லோருக்கும் விருந் தோம்பல் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடுக்கன் பூணல்

முன்னாளிற் கடுக்கன் பூணல் என்ற சடங்கும் நடைபெற்றது. இப்போது அது அருகிவிட்டது.

மணமகனைக் கிழக்குமுகமாக அலங்கரிக்கப்பட்ட இடத்தில் இருத்தி விநாயகர் வழிபாடுசெய்து தேங்காய் உடைத்து மணமகனுக்கு கடுக்கன் பூட்டும் வைபவத்தைச் செய்யலாம்.

### தலைப்பாகை வைத்தல்

மணமகன் கிழக்கு நோக்கி நிற்க, ஒரு பெரியாரைக் கொண்டு தலைப்பாகை வைக்க வேண்டும். உத்தரியம் அணிவிக்க வேண்டும். உத்தரியம் இடும்போது இடத்தோளின் மேலாக வந்து வலப்பக்கத்து இடுப்பளவில் கட்ட வேண்டும். (அந்தணர் பூணூல் அணிவது போல்) அங்கு அவருக்கு பூமாலை சூட்டிக் கௌரவிப்பர். அணிவிப்பர். தோழனுக்கும் இதேபோல் உடை உடுத்தி, தலைப் பாகையும் உத்தரியமும் இட்டு, மணமகனோடு அழைத்து வருவர். தோழன் மணமகனின் இடப்பக்கமாக நிற்பார்.

### மணமகன் புறப்படுதல்

வீட்டைவிட்டுப் புறப்படுமுன் வாசலில் இரு சுமங்கலிப் பெண்கள் ஆரத்தி எடுப்பார்கள். மாப்பிள்ளையோடு தோழி (மாப்பிள்ளையின் திருமணமான சகோதரி, அல்லது அவர்களின் உறவுமுறையான திருமணமான பெண் தோழியானவள், திருமணச் சடங்கில் முக்கிய பங்குவகிப்பதால், நடைமுறைகளை நன்கு தெரிந்த சுமங்கலிப்பெண்ணையே அமர்த்த வேண்டும்) தோழன்(பெண்ணின் சகோதரன் அல்லது அவர்களின் உறவு முறையிலுள்ள ஒரு ஆண் அநேகமாகத் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் ஆகியோ ருடன் உற்றார், உறவினர் மணமண்டபத்திற்குச் செல்வர். செல்லும் போது தோழி கூறைத்தட்டும், வேறு இரு பெண்கள் 3 தேங்காய் வைத்த தட்டமும், 3 அல்லது 5 பலகாரங்கள் கொண்ட ஒரு தட்டமும் எல்லாமாக 3 அல்லது 5 தட்டங்கள் கொண்டு போகவேண்டும். அலங்கரிக்கப்பட்ட வாகனத்திற் செல்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பலகாரத் தட்டம்**

அரியதரம், அச்சுப்பலகாரம், பயற்றம் உருண்டை, வெள்ரொட்டி, சிற்றுண்டி போன்றவை.

**தேங்காய்த் தட்டம்**

3 முடியுள்ள தேங்காய்களை சீவி, அழகாக மஞ்சள் பூசி வைக்க வேண்டும்.

**கூறைத் தட்டம்**

ஒரு பெரிய தட்டில் நெல்அல்லது பச்சையரிசி பரப்பி, அதன் மேல் கூறைச்சேலை, சட்டை, வெற்றிலை 5, முழுப்பாக்கு 3, கஸ்தூரி மஞ்சள் 1, குங்குமம் (டப்பி) 1, தேசிக்காய் 1, வாழைப்பழச் சீப்பு 1, கொண்டை மாலை, அலங்காரப் பொருட்கள் முதலிய சாதனங்கள் சீப்பு, கண்ணாடி, பவுடர், வாசனைத் திரவியம், சவர்க்காரம் முதலியன, தாலிக்கொடியோடு, மெட்டி 1 சோடி ஆகியன வைக்கவேண்டும்.

**பெண் புறப்படுதல்**

பெண்வீட்டிற் பெண்ணுக்கும் அதேபோல், அறுகு, காசு, பால் தலையில் வைத்து நீராட்டி (ருது சாந்தி செய்யாத பெண்ணாகில் அன்று அல்லது முந்தைய நாளில் ருது சாந்தி செய்தல் வேண்டும்) மணப்பெண்ணை அலங்கரித்து மணமண்டபத்திற்கு அழைத்துச் செல்லல் வேண்டும். இங்கும் மாப்பிள்ளை வீட்டார் 3 தட்டங்களோடு வந்து விருந்தோம்பி, பெண்ணைஅழைத்துச்செல்வார்கள். பெண் வீட்டைவிட்டுப் புறப்படுமுன் ஆரத்தி எடுக்கப்படும். பெண் மண மண்ட பத்திற்கு மணமகன் வருவதற்கு முன்னதாகச் செல்ல வேண்டும். மணப்பெண்ணோடு ஒருதட்டிற்கோயிலில் அர்ச்சனை செய்யத்தேவையான பொருட்களை அடுக்கி எடுத்துச்செல்ல வேண்டும். மண்டபத்திற் பெண் அவருக்கென்று கொடுக்கப்பட்ட அறையில் இருக்க வேண்டும்.

அர்ச்சனைக்குரிய பொருட்கள் : வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழங்கள், ஊதுபத்தி, கற்பூரம், பூக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாப்பிள்ளை அழைப்பு**

மாப்பிள்ளை மணமண்டபத்திற்கு வந்தவுடன் அவரைப் பெண் வீட்டார் மேளதாளத்தோடு வரவேற்பர். அங்கு தோழன் மாப்பிள்ளையின் காலைக் கழுவி விடுவார். அதற்கு உபகாரமாக மாப்பிள்ளை தோழனுக்கு மோதிரம் ஒன்றை அணிவிப்பார். பின் பெண்ணின் தகப்பன் மாப்பிள்ளைக்கு மாலை சூட்டி வரவேற்பார். இரு சுமங்கலிப் பெண்கள் ஆரத்தி எடுப்பர். பின் தோழன் கைகோர்த்து வலமாக மணவறைக்கு அழைத்துச் செல்வார். (கும்பத்திற்கு வலது பக்கம்) (Clockwise)

மணமகன் மணவறைக்கு வந்தவுடன் தொடங்கும் திருமணச் சடங்கு முடியும்வரை புரோகிதரின் தலைமையில் நடைபெறும்.

கிழக்கு நோக்கியிருக்கும் மணவறையில் தோழன் மணமகனுக்கு இடதுபக்கத்தில் அமருவார். மணவறையில் நெல் பரவி, அதன்மேல் கம்பளம் விரித்து மணமகனை இருத்துவதுதான் மரபு. கிரியை செய்யும் குருக்கள் மணவறையின் வலது பக்கத்தில் வடக்கு நோக்கியிருப்பார். மணமகனுக்குத் திருநீறு கொடுத்து பவித்திரம் கொடுத்து வலக்கை மோதிரவிரலில் அணியச் சொல்வார். பின் சங்கற்பம் செய்து, புண்ணியாகவாசன பூஜை, விநாயகர் பூஜை, பஞ்சகவ்வியபூஜை ஆகியவற்றை மந்திரஉச்சாடனத்துடன் செய்வார்.

பவித்திரம் வலதுகை மோதிரவிரலில் அணியவேண்டும்.இந்தச் சடங்கு, வைபவம் முடியும்வரை, ஒரு குற்றமும் நேராமலிருக்கவும் மனம், வாக்கு, காயங்களால் வரத்தக்க பாவங்களின்றும் காக்கவும் பவித்திரம் அணிவிக்கப்படுகின்றது பஞ்சகவ்வியத்தை அவ்விடத்திற் சுற்றித் தெளித்து, அதனைப் பருகும்படி மணமகனுக்குக் கொடுப்பார். இதனால் அந்தவிடம் சுத்தமாக்குவதோடு மணமகனின் அகமும் புறமும் சுத்தியடையும் என்பதாலும் இவை செய்யப்படுகிறது. இதனைப் புண்ணியாகவாசனம் என்பர்.

**அரசாணிக்கால்**

முற்காலத்தில் திருமண வைபவங்களுக்கு அரசனுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப் பிதழ் அனுப்புவார்கள். அரசனுக்கும் எல்லாத் திருமணங் களுக்கும் செல்ல முடியாத நிலை இருக்கும். எனவே, அவர் தனது ஆணைக் கோலை அனுப்பி வைப்பார். அரசு ஆணைக்கோல் மருவி அரசாணிக்கால் ஆகிவிட்டது. இன்று பதிவுத் திருமணம்போல், அன்று அரசனால் அங்கீகரிக்கப்பட்டது. ஆகவே அவரது ஆணைக்கோல் வந்து விட்டால் அத்திருமணம் அங்கீகாரம் பெற்றுவிடுகிறது. இதுவே இன்று திருமணப்பந்தலில் முள்முருங்கை மரக்கிளை ஒன்றை வைத்து அதற்குப் பட்டுச்சாத்தி அலங்கரித்து வைப்பதன் காரணமாகும்.

**அங்குரார்ப்பணம்**

வித்திடுதல் என்று அர்த்தம். அதாவது முளைக்கும் விதைகளை, பாலிகையிலிடல் என்பது. சந்திரகும்பத்தைப் பூசித்து, அதற்கு முன்பாக இருக்கும் மண்சட்டியில் 3 அல்லது 5 சுமங்கலிப் பெண் களைக் கொண்டு நவதானியம் இட்டு, தண்ணீர் தெளித்து, புஷ்பம் சாத்திப் பூசை செய்வது. இதன் அர்த்தம் நவதானியம்செழித்து வளர்வது போல் இத்தம்பதி தமது வாழ்வும் செழிப்புடையதாக அமைய வேண்டும் என்பதற்காக இப்பூஜை செய்யப்படுகிறது. அப்பெண்களுக்கு வெற்றிலையிற் பழம், பூ வைத்து உபசாரம் செய்தனுப்புவார்கள். அதன்பின் கற்பூரம் காட்டப்படும்.

(முன்பே பாலிகை போட்டிருந்தால் தண்ணீர் மட்டும் தெளித்தாற் போதுமானது)

**இரட்சாபந்தனம் (காப்புக்கட்டல்)**

தொடங்கிய கருமம் நிறைவுபெறும் வரை எந்தவித தீட்டுக்களோ, இடையூறுகளோ, துக்கங்களோ மணமக்களைச் சாராதிருக்க வேண்டிய பாதுகாப்புக் கருதிச் செய்யப்படுவது (காலமிருத்து,அவமிருத்துப் போன்ற அபாயங்களிலிருந்து காப்பாற்றவும், சர்வரோகமும்அணுகாமலும், பீடை, பிணி அணுகாமலும் இருக்கவேண்டிய விவாகச் சடங்கு இனிதே நடைபெறவும் கட்டப்படும் நூல் காப்புக் கட்டுதல் ஆகும்)

இதற்கு ஒரு தாம்பாளத்தில் அரிசி பரப்பி, தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம், காப்பு நூல் முதலியவற்றை வைத்துப் பூசித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளையின் வலது மணிக் கட்டிற் காப்புக் கட்டுவார்கள். காப்புக் கட்டும்போது மாப்பிள்ளை வீட்டார் ஒரு தேங்காய் உடைப்பார்கள். பின்னர் குருக்கள், சிவன் பார்வதி பூசை முதலியவற்றை மந்திர உச்சாடனத்துடன் செய்வார். (பின்னர் அக்கினி மூடப்பட்டு அதற் குரிய பூசை வழிபாடுகள் நடைபெறும்) முகூர்த்ததோஷம், லக்கின தோஷம் போன்ற தோஷங்கள் நீங்கும் பொருட்டும் இந்தத் திருமணத்தின் போது நல்லருள் புரியவேண்டுமென நவக்கிரக தேவர்களுக்காக அமைக் கப்பட்டுள்ள கும்பங்களுக்கும் பூஜை செய்வார். அதன்பின் அரசாணி மரத்திற்கும் அதன் நாலு பக்கங்களிலுள்ள கும்பங்களுக்கும் பூஜை செய்வார்.

**மணமகளை அழைத்தல்**

மணமகளை (பட்டாடை அணிந்து, அணிகலன்கள் பூண்டு முகத்தை மெல்லிய முகத்திரையால் மறைத்த வண்ணம்) தோழிகள், மணமகளின் பெற்றோர் மற்றும் உறவினர் புடைசூழ மணமேடைக்கு அழைத்து வருவர். மணமகனுக்கு வலப்பக்கத்திற் பெண்ணை அமரச் செய்வர். மணமகனுக்குச் செய்யப்பட்ட அத்தனை பூசைகளும் இவருக்கும் செய்யப்படும். பவித்திரம் இடதுகை மோதிரவிரலில் அணிவித்து, ரட்சாபந்தனம் இடக்கை மணிக்கட்டிற் கட்டப்படும். பெண்வீட்டார் ஒருவர் தேங்காய் உடைப்பார். பின்னர் இருவரினதும் பெற்றோர்களை அழைத்து மணமகளின் பெற்றோர்கள் பெண்ணின் வலப்பக்கத்திலும் மணமகனின் பெற்றோர் மணமகனின் இடப்பக்கத்திலும் கிழக்கு நோக்கி அமர்வர். இவர்களுக்கும் குருக்கள், பவித்திரம், விபூதி கொடுத்து சங்கல்பம் செய்வித்து, இரு வழியிலும், பிதுர்தோஷம் நீங்கவும் இரண்டு (நாந்தி தானம்) தானம் கொடுத்து பிதுர்களின் ஆசியைப் பெறச் செய்வார். பின் கன்னிகாதானக் கிரியைகளை ஆரம்பிப்பார்.

**கன்னிகாதானம்**

மணமகளை அவரின் பெற்றோர்தாரைவார்த்துக் கொடுப்பதைக் கன்னிகாதானம் என்பர். மணமக்களின் பெற்றோர்இருபகுதியினரும் சங்கற்பம் செய்து மணமகளின் பெற்றோர் மணமகனின்பெற்றோர்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகனின் பெற்றோர் பெண்ணின் பெற்றோருக்கும் திலகமிட்டு பன்னீர் தெளித்து, மரியாதை செய்வர். பின் பெண்ணின் வலக்கரத்தில் வெற்றிலை, பாக்கு, பழம், எலுமிச்சம்பழம், தங்கக்காசு அல்லது நடைமுறை நாணயம் ஒன்றைக் கையிற் கொடுத்து, பெண்ணின் தந்தை இடது கை கீழாகவும் வலது கை மேலாகவும் சேர்த்துப் பிடித்துக் குருக்கள் மணமக்களின் மூன்று தலைமுறைப் பெயர்களையும் மணமக்களின் பெயர்களையும் உரிய மந்திரத்துடன் 3 முறைகள் சொல்லி, இரு வம்சம் தழைக்கவும், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய 4 பயன்களையும் பெறவேண்டியும் எனது மகளைக் கன்னிகாதானம் செய்து தருகிறேன். எல்லாவித செல்வமும் பெற்று எனது மகளைக் காப்பாற்றவேண்டும்என்று வேண் டிக் கொள்வார் மணமகனின் சம்மதம் பெற்றவுடன் மணமகளின் தாயார் நீர்விட்டுத்தாரை வார்க்க, தந்தையார் மணமகளின் கைகளை மணமகனின் கரங்களில் ஒப்படைப்பார் அப்போது மங்கள வாத்தியம் முழங்க, பெண் வீட்டார் ஒருவர் தேங்காய் உடைக்க, மணமகன் பெண்ணைத்தானம்எடுப்பார் தொடர்ந்து மணமகன் கொண்டுவந்த தாலியோடுகூடிய கூறைத் தட்டத்தை விதிப்படி பூசித்து, ஆசீர்வதித்து அக்கினியாற் சுத்தி செய்தபின், அச்சபையிலுள்ள பெரியோர்களிடம் காட்டி நல்லாசி பெறப்படும். பின் மணமகன் மணமகளிடம் கூறையைக் கொடுப்பார். மணமகளும் தோழியுடன் சென்று கூறையை உடுத்தி மீண்டும் மணவறைக்கு அழைத்து வரப்படுவார். இதற்கிடையிற் குருக்கள் மாங்கல்யத்தை எடுத்துச் சுத்தி செய்து, மந்திரம் சொல்லி சந்தனம், குங்குமம் சாத்தி தீபம் காட்டி சம்பாதஹோமம் செய்து பூசை செய்வார்.

(சம்பாதஹோமம்-சிருவத்தில் நெய் எடுத்து ஆகுதி செய்து மிகுதி நெய்யைத் தாலியில் விடுதல்) மணவறையைச் சுற்றி நிற்பவர்களுக்கு அட்சதை மலர்கள் கொடுக்கப்படும்.

**தாலி கட்டுதல்**

கூறை உடுத்தி வந்த மணமகள், மீண்டும் மணமகனின் வலப்புறத்தில் கிழக்கு நோக்கி அமர்வார். குறித்த சுபமுகூர்த்தத்தில் மணமகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்து மணமகளின் வலப்புறம் சென்று, வடக்கு நோக்கி நின்று, இறைவனைத் தியானித்து குருக்கள் ஆசீர்வதித்துக் கொடுக்கும் மாங்கல்யத்தை இருகரங்களாற் பற்றி, கெட்டி மேளம் முழங்க, வேதியர் வேதம் ஓத, மாப்பிள்ளை வீட்டார் ஒருவர் தேங்காய் உடைக்க, பெரியோர் அட்சதை மலர்கள் தூவ, ஒரு பெண் பின்னால் தீபம் பிடிக்க, மணமகன் மேற்குத் திசை நோக்கித் திரும்பிப் பெண்ணின் கழுத்தில் திருமாங்கல்யம் பூட்டுவார். அப்போது சொல்லப்படும் மந்திரம்,

"மாங்கல்யம் தந்துநாநேந மம ஜீவ ஹேதுநா//
கண்டே பத்தாமி ஸீபகே ஸஞ்ஜிவசரதசதம்"//

'ஓ! பாக்கியவதியே' யான் சிரஞ்சீவியாக இருப்பதற்குக் காரணமான மாங்கல்யத்தை உன் கழுத்திற் கட்டுகிறேன். நீயும் நூறாண்டு வாழ்வாயாக' என்று குருக்கள் கூறும்மந்திரத்தை மனதிற்கொண்டு தாலி முடிச்சில் திருநீறு இட்டு, தனது இடத்தில் இருக்கவேண்டும். மணமகளின் உச்சந்தலையிற் குங்குமத்தால் திலகமிடவேண்டும்.

தாலி - தாலியிற் சிவலிங்கம், விநாயகர் அல்லது லட்சுமியின் திருவுருவம் அமைத்தல் நல்லது. கொடியும் தாலியும் அதனருகில் கோர்த்திருக்கும் இரு தங்கநாணயங்களும் சேர்ந்து (9, 11) என்ற ஒற்றை எண் வரக்கூடிய அளவு பவுணில் செய்ய வேண்டும் தாலிக்கொடியிற் சேர்க்கப்படும் தங்கநாணயம் ஆங்கில நாணய மாக இருக்கவேண்டும் என்ற நியதியில்லை. அந்த நாணயத்திற் கடவுளின் உருவங்களும் விருப்பத்திற்கேற்ப அமைக்கலாம்.

**மாலை மாற்றுதல்**

மணமகள் எழுந்து, வடக்கு நோக்கி இறைவனைத் தியானித்து, மணமகன் கழுத்தில் மாலை சூட்டுவாள். மணமகன் மணமகளைத்தன் இடப்பக்கத்தில் அமரச்செய்து, மாலை சூட்டுவான். மாலை மாற்றுதலின் பொருள் இருமனம் கலந்து ஒரு மனமாகி இல்வாழ்க்கையை ஆரம்பித்தல். மூன்றுமுறை மாலை மாற்றல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து, கொண்டுவந்த மங்கலப் பொருட்களாகிய மஞ்சள், குங்குமம், பூ, வாசனைப் பொருட்கள், சீப்பு, கண்ணாடி முதலிய வற்றை மணமகன் மணமகளிடம் கொடுப்பார். கணவன் மனைவியாக ஆனபின் தம் மங்கலக் கோலத்தை இருவரும் கண்ணாடியிற் பார்த்து மகிழ்வர்.

**பால் பழம் கொடுத்தல்**

பால், வாழைப்பழம் கலந்து மணமகள் முதலில் மணமகனுக்கு மூன்று முறை கொடுப்பார். பின் மணமகன் மணமகளுக்கு மூன்று முறைகொடுப்பார். நாயகன் நாயகி உணவு கொள்ளல் மறைவிற் செய்யவேண்டுமென்பதால், திரை ஒன்று முன்னாற் பிடிக்கப்படும் முதன் முதலில் தம்பதி தமக்குக் கொடுக்கும் இனிப்புப் பதார்த்தமாகையால் வாழ்க்கை இனிமையாக இருக்க வேண்டும் என்று உணர்த்தவே இச்சடங்கு.

**கோதரிசனம்**

இல்லறவாழ்வு தொடங்கும் தம்பதி தம் வாழ்விற்கு வேண்டிய அட்ட ஐஸ்வரியங்களையும் வேண்டிப் பசுவை இலட்சுமிதேவியாக வணங்குவர். பசுவைக் கிழக்கு முகமாக நிறுத்திச் சந்தனம், குங்குமம், புஷ்பம் சாத்தித் தீபாராதனைசெய்து வணங்குவர். பசுவின் உடலெங்கும் உறைகின்ற சகல தேவர்கள், முனிவர்கள், தெய்வங்களின் ஆசீர்வாதமும் இதன் மூலம் கிடைக்கும். அரிசி, காய்கறி, தட்சிணை வைத்துத் தானம் வழுங்க வேண்டும்.

**பாணிக்கிரகணம் (கைப்பிடித்தல்)**

தருமம் செய்வதற்காகவும் சந்ததி விருத்திக்காகவும் திருமணம் செய்யப் படுகிறது. பாணிக் கிரகணம் என்றால் மணமகளின் கையை மணமகன் பிடிப்பது என்று பொருள் 'நீயும் நானும் முதுமையடைந்துவிட்டாலும்கூட ஒருவரை விட்டொருவர் பிரியாதிருப்போம் என்று உன் கையைப் பிடிக்கிறேன்' என்று கூறி மணமகளின் கையைப் பிடிக்க வேண்டும் ஆணின் வலக்கை பெண்ணின் வலக்கையைப் பிடிக்க வேண்டும். பின்னா் ஏழடி எடுத்துவைத்து அம்மி மீதித்து அக்கினியை வலம் வருவார்கள் வலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்போது தோழனும் தோழியும் சேர்ந்து வருவர். பஞ்ச பூதங்களின் சாட்சியாக கையைப் பிடிப்பதாக ஒருகருத்து. மணப்பெண்ணால் ஐம்புலன்களால் செய்யப்படும் செயல்கள் கணவனுக்கு மட்டுமே உரியவை. கன்னியின் கையை வரன்கிரகிப்பது என்பது பொருள்.

**ஏழடி நடத்தல்**

பெண்ணின் வலதுகாலை மணமகன் கைகளாற் பிடித்து ஏழடி எடுத்து வைக்கும்படி செய்யவேண்டும். ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வொரு மந்திரம் சொல்லப்படும்.

1) உனக்கு வாழ்க்கையில் உணவு குறைவில்லாமல் அளிப்பதற்கு இறைவன் உன்னைப் பின்தொடர்ந்து வரட்டும்.
2) உடல்வலிமை கிடைக்க இறைவன் பின் தொடரட்டும்.
3) விரதத்தை அனுஷ்டிக்கும் பொருட்டு உன்னை இறைவன் பின் தொடர்ந்து வரட்டும்.
4) சுகமும் மனச்சாந்தியும் கிடைக்க இறைவன் உன்னைப் பின் தொடரட்டும்.
5) பசுக்கள் முதலான பிராணிகள் விருத்தியடையப் பின்தொடர்ந்து வரட்டும்.
6) சகல சௌபாக்கியங்களும் கிடைக்கப் பின்தொடர்ந்து வரட்டும்.
7) உன் வாழ்க்கையில் இடம்பெறும் சுபகாரியங்கள், ஹோமங்கள் குறையின்றி நிறைவேற இறைவன் உன்னைப் பின்தொடர்ந்து வரட்டும். ஏழடிகள் நடந்து நாமிருவரும் சினேகிதரானோம் இருவரும் சேர்ந்து இந்த ஏழு செல்வங்களையும் ஈட்டுவோம். இன்பதுன்பங்களைச் சேர்ந்தே அனுபவிப்போம். 'என்னுடன் கூடவா' எனும் பொருளில் இந்நிகழ்ச்சி அமையும். இதற்கு "ஸப்த பதி" என்று பெயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அம்மி மிதித்தல்

பெண்ணின் வலது காலை (அதாவது எட்டாவது அடி) மணமகன் கையால் தூக்கி அம்மியில் வைத்து பெருவிரலுக்கு அடுத்துள்ள விரலில் மெட்டி அணிவிப்பார். இந்தக் கல்லைப்போல் நிலையாக நின்று உன் எதிரி களைச்சகித்துக்கொள். இதுபெண்ணுக்குக்கற்பையும் ஆணுக்கு ஒழுக்கத்தையும் புகட்டுகிறது. கல் எப்படி எதையும் தாங்குமோ, அதுபோல் வாழ்க்கையிலும் இன்பதுன்பங்களைக் கண்டுகலங்காமல் உறுதியான கொள்கைகளைக் கடைப்பிடித்து நடக்கவேண்டும் என்று உணர்த்துகிறது.

தொடர்ந்து அக்கினியை வலது வந்து, ஓமகுண்டத்தில் நெற் பொரியையும் ஓமப்பொருட்களையும் இடுவார்கள். திரும்பவும் இரண்டாம்முறை அக்கினியை வலம் வரும்போது, இடக்காலை அம்மியில் வைத்து, மெட்டி அணிவிக்கப்படும். திருமணமான பெண் அவளைப்பார்க்கும் இன்னொரு ஆடவன் அவள் திருமணமானவள் என்பதை உணர்த்த மெட்டி அணிவிக்கப்படுகிறது.

### கணையாழி எடுத்தல்

மூன்றாம் முறை அக்கினியை வலம்வரும்போது, கிழக்குப் பக்கத்தில் வைத்திருக்கும் மஞ்சள் நீர் நிறைந்த பாத்திரத்தில் இருக்கும் மோதிரத்தை இருவரும் தேடிஎடுக்கவேண்டும். இது மூன்று முறைகள் நடைபெறும். இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து எடுத்தல் வேண்டும். இது தம் வாழ்க்கையிலும் விட்டுக்கொடுத்து வாழவேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

### அருந்ததி பார்த்தல்

மூன்றாம் சுற்றில் அருந்ததி பார்த்தல் நடைபெறும். இருவரையும் கூட்டிக்கொண்டு மண்டபத்தின் வடக்கு வாசலுக்கு வந்துவானத்தில் இருக்கும் நட்சத்திரங்களுக்குப் பூஜை செய்து அருந்ததியைக் காண்பிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிரந்தரக் கற்பு நட்சத்திரமாக மின்னுவேன்" என்று ஆணையிடுவதாகும். சப்தரிஷிகள் கிருத்திகை எனப்பெயர் கொண்ட தங்கள் மனைவிகளுக்குள்ளே முதலானவளான அருந்ததியை எப்படி நிலைத் திருப்பச் செய்தார்களோ, அப்படி மற்ற ஆறு கிருத்திகைகளும் அருந்ததியைப் போலிருக்கச் செய்கின்றனர். இந்த அருந்ததியைத் தரிசனம் செய்வதால் என்னுடைய மனைவி எட்டாமவளாக வளர்ச்சி பெறட்டும் என்பதேயாகும். இந்த நட்சத்திரத்தைக் காட்டுவது நல்ல வாழ்க்கையையும் வளத்தையும் பெறுவதற்கேயாகும்.

அருந்ததி வசிட்டரின் மனைவி. சிறந்த பதிவிரதை. வானத்தில் துருவ மண்டலத்திற்கு அருகில் ஏழு நட்சத்திரங்களுக்கிடையில் வசிட்ட நட்சத்திரமும், அதன் அருகில் அருந்ததி இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன.

அருந்ததியோடு சேர்த்து துருவ நட்சத்திரத்தையும் காட்டுவார்கள். துருவ நட்சத்திரம் விண்ணில் ஒரு நிலையான இருப்பிடத்தை உடையவராகவும் மற்ற விண்மீன்கள் நிலைத்திருப்பதற்கும் காரணமாகவும் கட்டுத்தறியாகவும் இருப்பதால் 'எங்களை எதிரிகளிடமிருந்து காப்பாற்றுவீராக' என்று தரிசிப்பதாகும். இவர்கள் எம் வாழ்க்கையில் ஒரு வழிகாட்டியாக அமைகிறார்கள். துணைவனைப் போல் மணமகனுக்கு ஸ்திரத்தன்மையும் அருந்ததியைப்போல் மணமகளுக்குப் பதிவிரததன்மையும் இருத்தல் வேண்டும்.

**பொரியிடுதல்**

அக்கினியை மூன்றுமுறை வலம் வரவேண்டும். ஒவ்வொரு முறையும் வலம் வந்து மணமக்கள் கிழக்கு நோக்கி நிற்க, தோழன் நெற்பொரியைக் குருக்களிடமிருந்து பெற்று, மணமகனின் கையில் கொடுக்க, மணமகன் மணமகளின் கையிற் கொடுத்து மணமகளின் கைகளைத் தன் கைகளால் தாங்கி ஓமகுண்டத்தில் இடுவார்கள். "அக்கினி பகவானே சகல செல்வங்களையும் எமக்குத் தந்தருள வேண்டும்" என வேண்டிக்கொண்டு பொரியிடுதல் வேண்டும். நெல், பொரியாக மலர்வதுபோல் நம்வாழ்வும் மலரவேண்டும் என்பதே தத்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் முறை சுற்றி வந்தவுடன், பூர்ணாகுதிக்குரிய பொருட் களைத் தட்டத்தில் வைத்து, குருக்கள் மணமக்களுக்குக் கொடுக்க, இருவரும் சேர்ந்து குண்டத்திற் சொரிதல்வேண்டும்.

அக்கினிபகவானிடம் சேர்க்கும் சகல திரவியங்களும் அக்கினி பகவான் அந்தந்தத் தெய்வங்களிடம் ஒப்படைத்து விடுவார் என்பதை வேதங்கள் கூறுகின்றன. ஆகவே, அக்கினியில் ஆவாகனம் செய்யப்பட்ட மூர்த்திகளுக்கு செய்யும் சடங்கைக் குறைவின்றிச் செய்து, அவர்களுக்குப் பரிபூரண பலன் வேண்டி அனுப்பவேண்டும் என்று பிரார்த்தித்து செய்வதே ஓமம்.

அதன் பின் தீபாராதனை செய்து, ஓமத்திலிருந்து எடுக்கப்பட்ட ரட்சயை (கரிப்பொட்டு) மணமக்களுக்குத் திலகமிட்டு 'விபூதி' சந்தனம் கொடுத்து ஆசி வழங்குவார் குருக்கள்.

**ஆசீர்வாதம்**

மணமக்களைக் கிழக்குமுகமாக நிற்கவைத்துக் குருக்கள் பிரார்த்தனை செய்து, மந்திரத்துடன் ஆசீர்வாதம் சொல்லி மணமக்களுக்குச் சிரசில் அட்சதையிட்டு ஆசீர்வதிப்பார். தொடர்ந்து மணமகனின் பெற்றோர், மணமகளின் பெற்றோர், சபையோர் ஆசீர்வதிப்பர்.

**அட்சதை**

முனை முறியாத பச்சையரிசி, அறுகம்புல், மஞ்சள்மா கலந்த கலவையை அறுகரிசி என்று சொல்வார்கள். பெரியோர் இரண்டு கைகளாலும் அறுகரிசி எடுத்து "ஆல் போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி, மூங்கில் போல் சுற்றம் முழுமையாய்ச் சூழப் பதினாறு பேறுபெற்றுப் பெருவாழ்வு வாழ்க" என வாழ்த்தி உச்சியில் 3 முறை இடவேண்டும். மணமகனுக்கு 3 முறையும் மணமகளுக்கு 3முறையும் தனித்தனியே இடவேண்டும். உறவினர்களும் நண்பர்களும் மணமக்களுக்கு அன்பளிப்பு வழங்கி மகிழ்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிறைவு**

மணமக்களின் கைகளிற் கட்டப்பட்ட காப்புக்களை அவிழ்த்து, பவித்திரங்களைக் கழற்றி, அவற்றுடன் பெற்றோரின் பவித்திரங் களையும் வெற்றிலையில் வைத்து குருக்களின் தட்சணையும் சேர்த்துக் குருக்களிடம் கொடுக்கவேண்டும். குருக்களுக்கு அரிசி, காய்கறி தானம் வழங்கப்படும்.

**ஆரத்தி**

இரு தரப்பிலுமிருந்து ஒரு பெண்ணாக இரு சுமங்கலிப் பெண்கள் ஆரத்தி எடுப்பார்கள். தம்பதிக்கு தீயசக்தியினால் தீமை ஏற்படாமலும், கண்திருஷ்டி நீங்கும் பொருட்டும் இவை செய்யப்படுகின்றன.

விருந்துபசாரமும் நடைபெறும். மணமக்கள் இருவரும் அர்ச்சனைத் தட்டோடு ஆலயம் சென்று வணங்கி, அர்ச்சனை செய்து, மணமகள் இல்லம் செல்வர். அங்கு வாசலில் ஆரத்தி எடுத்து, வலதுகாலை முதலில் வைத்து வீட்டுக்குள் செல்வர். முதலில் பூசை அறைக்குள் சென்று வணங்கிய பின், பால் அருந்தக் கொடுப்பார்கள்.

**பூதாக்கலம்**

மணமக்களுக்கு ஒரே இலையில் மணமகள் உணவு பரிமாறி, மணமகனுக்கு முதலில் தன் கையால் உணவூட்டிய பின் மணமகன் மணமகளுக்கு உணவூட்ட வேண்டும்.

பின் மணமகன் மணமகளைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்வார். அங்கும் ஆரத்தி எடுத்து உட்செல்வர். வலதுகால் எடுத்து உட்சென்று பூசைஅறை சென்று வணங்கி, பெற்றோரின் காலிலும் விழுந்து வணங்குவர்.

**சில தத்துவங்கள்**

➢ தாலிகட்டிய பின் மணமகன் மணமகளின் உச்சந்தலையில் குங்குமத்தால் திலகமிடுவார். இது அவள் தன் கணவனுக்கே உரியவள் என்பதை எடுத்துக் காட்டவே. அத்தோடு அவ்விடத்தில் தான் மகாலட்சுமியும் வாசம் செய்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாங்கல்யம் சூட்டும்போது கெட்டிமேளம் கொட்டுவது சபையில் உள்ளோர் யாராவது தும்முதல், அபசகுண வார்த்தைகள் பேசுதல் போன்றவை மணமக்களுக்குக் கேட்கக்கூடாது என்பதற்காகவே.
- மஞ்சட் கயிற்றில் தாலி கட்டும்போது மூன்று முடிச்சுப் போடுவார்கள்.

  முதலாவது முடிச்சு - கணவனுக்குக் கட்டுப்பட்டவள்

  இரண்டாவது முடிச்சு - தாய் தந்தையருக்கு கட்டுப்பட்டவள்

  மூன்றாவது முடிச்சு - தெய்வத்திற்குப் பயந்தவள்
- தாலி கட்டும்போது தூவப்படும் அட்சதை, மணமக்களைத் தீய சக்திகளிடமிருந்து காப்பதற்கும் வளமான வாழ்க்கை அமைவ தற்கும் ஆசீர்வதிப்பதாகும். தாலிகட்டும்போது கைவிளக்கு ஏந்தி நிற்பது, ஏனென்றால் தாலி கட்டியதற்கு விளக்கு ஏந்தியவர் ஒரு சான்றாவார். இன்னொரு விளக்கம் சகுனத் தடைகள் ஏற்படாமலிருக்க.

**திருமணத்தின்போது மணப்பெண் முகத்திரை அணிவது ஏன்?**

முற்காலத்தில் மணமகள் தாலி கழுத்தில் ஏறும்வரை மணமகனைப் பார்ப்பதில்லை. ஆகவே முகத்திரை அணிந்து மணவறைக்கு அழைத்து வந்தார்கள். அத்தோடு கண்திருஷ்டிகளிலிருந்தும் விமர்சனங்களிலிருந்தும் விடுவிப்பதும் ஒரு காரணமாகும். தாலி ஏறியதும் முகத்திரையை அகற்றி, நான் இப்போது "இவரின் மனைவியாகிவிட்டேன்" என்று சபையோருக்குத் தன் முகத்தைக் காட்டுகிறாள்.

**அட்சதை**

அட்சதை என்றால் குத்துப்படாததும், பழுதற்றதும் என்று பொருள்படும். பழுதுபடாத பச்சைஅரிசியைப் போல் வாழ்க்கையும் பழுதுபடாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே ஆசிவழங்கும்போது, பெரியவர்கள் அதைத் தெளிக்கிறார்கள். (நுனி முறியாத முழுஅரிசியாக இருக்கவேண்டும்)

நெல்லிருந்து பிரித்தெடுக்க முளையுள்ள அரிசியுடன் மஞ்சட்பொடி, பன்னீர், மலர் இதழ்கள் ஆகியவற்றைக் கலந்து அட்சதை தூவுவதே முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆரத்தி**

ஒரு தட்டில் 3 வாழைப்பழத் துண்டுகளை வைத்து அதன் நடுவேதிரியைச் சொருகவேண்டும். இலகுமுறை ஒரு நெருப்புக்குச்சியிற் பஞ்சைச் சுற்றி நெய்யில் தோய்த்து வாழைப்பழத்தின் நடுவே குத்துவதாகும். தட்டில் திருஷ்டி கழிப்பதற்காக மஞ்சளும் சுண்ணாம்பும் சிறிது நீர்விட்டுக் கலந்து வைக்கவும். இக்கலவை சிவப்பு நிறமாக மாறிவரும். அவசரத்திற்குக் குங்குமம் பாவிக்கலாம் (வெளிநாடுகளில் இருப்பவர்கள் சுண்ணாம்புக்குப் பதில் அப்பச்சோடா (சோடியம் பைகாபனேற்) பாவிக்கலாம்.

ஆரத்தி எடுக்கும்போது, யாருக்குத் திருஷ்டி கழிக்கிறோமோ அவரை நிற்கவைத்து (கிழக்குமுகமாக அல்லது வடக்குப் பார்த்து நிற்கவேண்டும்) அவரை இறைவனாக நினைத்து இறைவனுக்கு நாம் எப்படிக் கற்பூரம் காட்டுகிறோமோ அதேபோல் ஆரத்தித் தட்டைச் சுற்றவேண்டும். (வலம் சுழியாக)

மணமக்களுக்கு ஆரத்தி எடுக்கும்போது, மணமகன் பக்கத்தில் மேலெழும்பி மணமகள் பக்கமாக ஆரார்த்தி கீழிறங்க வேண்டும். 3 முறை செய்ய வேண்டும். கீழே 3 தரம் நேராக அசைத்து ஆட்டிப் பின் மேலெழும்பிச் சுற்றவேண்டும்.

**திருமணத்தில் அறுகரிசி இடும்முறை**

எமது இந்துசமய விளக்கப்படி அறுகரிசியை (அட்சதை பெரி யோர்கள் இரு கைகளிலும் எடுத்து மணமக்களின் சிரசில் தூவிப் பின், இருதோள்களிலும் இடுப்பு, முழுந்தாள் என்று மேலிருந்து கீழேவர வாழ்த்தவேண்டும். (3 முறை) அல்லது சிரசில் மட்டும் 3 முறை தூவி ஆசீர்வதிக்கலாம்.

நாங்கள் மணமக்களை பார்வதி பரமேஸ்வரன் தெய்வமென்ன கருதுவதால் தெய்வத்திற்குப் பாதத்திலிருந்து சிரசிற்குச் செல்லவேண்டும் என்று சொல்வார்கள். மணமக்கள் மானிடர்கள் ஆகையால் சிரசிலிருந்து பாதத்திற்கு வரவேண்டும் என்று சொல்வார்கள். இவ்விரண்டு விதமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருணனைகளையும் எமது இலக்கியங்களிற் காணலாம். பாதாதிகேசமா? கேசாதி பாதமா? இவை வர்ணனைகளே அன்றி அட்சதை தூவுவதற்கல்ல தெய்வத்திற்கு நாம் செய்வது பாதபூஜை, பூ சொரிவதல்ல அத்தோடு மணமக்களைப் பெரியோர்களே அட்சதை தூவி ஆசீர்வதிப்பார்கள். ஆகவேசிரசில் இருந்துதான் வரவேண்டும். மீனாட்சி சுந்தரேசர் கல்யாணத்தில் தேவர்கள் வானிலிருந்து மலர்தூவி ஆசீர்வதித்து வாழ்த்துவதாகப் புராணம் சொல்கின்றது. ஆகவே அரிசி மேலிருந்து கீழே வருவதுதான் சாலப்பொருந்தும். (காலிலிருந்து தலையை நோக்கிச் செய்யப்படும் கிரியைகள் அபரக் கிரியையிலும், பிதுர்க்கடமையின் போதுமே செய்யப்படுகின்றது. பிரிந்த உயிர் பூலோகத்திலிருந்து மேல்நோக்கி விண்ணுலகம் செல்வதாக எடுத்துக்காட்டவே காலி லிருந்து தலையை நோக்கிக் கிரியைகள் செய்யப்படுகின்றன.

**கௌரி கல்யாண வைபோகமே**

திருமணத் திகதி முற்றாகியதும் கவனிக்கவேண்டியவை

- ஆண், பெண் இருவரின் ஜாதகப் பொருத்தம் பார்த்து திருமணத் திகதியும், பொன்னுருக்கல் திகதியும் நிச்சயிக்கப்படவேண்டும்.
- திருமண மண்டபம் ஒழுங்கு செய்யப்படவேண்டும்.
- புரோகிதரை ஒழுங்கு செய்யவேண்டும்.
- நாதஸ்வரம், மேளம் ஒழுங்கு செய்யவேண்டும்.
- மணப்பெண்ணை அலங்கரிக்க உரியவரை நியமிக்கவும்.
- மணவறை, மாலை, திருத்தொங்கல், வாழைமரம் கட்ட பூக்காரனை நியமிக்கவேண்டும்.
- கோலம்போட ஒழுங்கு செய்யவேண்டும்.
- விருந்தினர்களின் எண்ணிக்கைப் பிரகாரம் உணவு ஒழுங்கு செய்யப்படவேண்டும்.
- படம், வீடியோ ஒழுங்கு செய்யவேண்டும்.
- திருமண அழைப்பிதழ் அச்சடித்து விநியோகித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1942 | 2016 |
| 08 | 07 |
| 31 | 12 |



அமரர்

## சபாரத்தினம் கனகம்மா (கமலா)

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடமை காத்து பக்குவமாய் வழி நடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து
எல்லோருக்கும் நல்லவராய் நாணயமாய் நடந்தீர்
துன்புறோர் துயர்துடைத்து துணைக்கரமாய்
அடைக்கலம் தந்த உம்மை ஆண்டவன் அழைத்தானே
என் செய்வோம் இறைவன் சித்தம் இது
இனி காண முடியாத சோக நிலையோடு
இங்கிருந்தே ஏங்கியழுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின்
துயரில் நாமும் பங்குகொண்டு அவரின்
ஆத்ம சாந்திக்காக பிராத்திப்போமாக.

நுணாவில் மேற்கு
சாவகச்சேரி


தங்கேஸ்வரன் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 31 | | 12 |
| 08 | | 07 |
| 1942 | | 2016 |



நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த
மது பிறிண்ட்டேர்ஸ் நிறுவன உரிமையாளர் சுரேகா அவர்களின் அன்பு பெரியம்மா

**அமரர்**

## சபாரத்தினம் கனகம்மா (கமலா) அவர்கள்

போனீர்களோ! போனீர்களோ!
பூவுலகைவிட்டு நீங்களும்
விண்ணுலகம் சென்றீர்களோ!
அன்புடையோர் அலறிட
அவனிவிட்டு சென்றீர்களோ!
பாசத்துடன் பெற்ற பிள்ளைகள் கலங்கி
பரிதவித்து நிற்கையிலே
வானளாவிச் சென்றீர்களோ!

**அன்னாரின் பிரிவால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்

**நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி**

**ராம் கென்ரெக்சன் & ஹாட்வெயர்
நிறுவன உரிமையாளரும், ஊழியர்களும்.**

திருக்கணித பதிப்பகம் – சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 31 . 08 . 1942



உதிர்வு 12 . 07 . 2016

## அமரர் கனகம்மா சபாரத்தினம் (கமலா) அவர்கள்

அன்புக்கு இலக்கணமாய் பண்பின் உருவமாய்
பாசத்தின் திருவுருவாய் எம்நெஞ்சமதில்
வாழ்ந்துவிட்டு பளையில் பிறந்து நுணாவிலில் வாழ்ந்து
மக்கள் நெஞ்சமதில் இடம்பிடித்து மக்கள் கதறியழ
கனகம்மா (கமலாவாக மாறி) கமலாக்கா எனமக்கள்
பாசத்துடன் அழைத்தனரே எத்தனைமுறை கூப்பிடுவீங்கள்
தம்பி தம்பி இனியாரை கூப்பிடப்போறீங்கள்
உங்கள் இறப்புநம்ப முடியவில்லையே ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டுவிட்டீர்கள் என்றும் எம்மனதில்
உறைந்திடுவீர் இனியாரைத் தேடுவேன் கமலாக்கா என்று
எந்நேரம் போனாலும் சிரித்த முகத்துடன் வரவேற்று
இல்லை என்ற சொல்லுக்கே இடமில்லை
அப்படி வாழ்ந்த தெய்வம் காலனுக்குப் பொறுக்கவில்லை.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

உங்கள் பிரிவால் வாடும்
சு.பூபாலசிங்கம்
தலைவர் - வீரபத்திரர் ஆலயம்,
இலட்சுமி ஸ்ரோர்ஸ்

15.07.2016
நுணாவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 31 . 08 . 1942

விண்ணில் 12 . 07 . 2016



## அமரர் கனகம்மா சபாரத்தினம் (கமலா) அவர்கள்

ஆதிநாள் தொடங்கி வீரபத்திர பெருமானுக்கு தொண்டாற்றி
அனுதினமும் அவன்பாதம் பணிந்து
ஆலய முன்மண்டபம் திருத்தி அமைத்து கும்பாபிஷேகம்
கண்டுகளித்த உங்களை தன்னருகே அழைத்துக் கொண்டானோ?
வீரபத்திர பெருமானுக்கு எந்நேரமும் அள்ளி அள்ளிக் கொடுத்த
உங்கள் கரங்கள் கண்ணிமைக்கும் நேரத்தில்
காலனுமை கவர்ந்து சென்றதேனோ?
கணவன் கதற, பிள்ளைகள் குமுற, ஊர் கலங்க, உற்றார் கலங்க,
உற்ற சொந்தம் அலற காலன் கவர்ந்து சென்றானோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய எம்பெருமானைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்களை இழந்து தவிக்கும்
பரிபாலன சபை,
வீரபத்திரர் ஆலயம்.

நுணாவில் மேற்கு,
15.07.2016.

Printed by - Angel Navoid



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
31
✧
08
✧
1942

உதிர்வு
12
✧
07
✧
2016



நுணாவில் மேற்கு சாவகச்சேரியை
பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

## சபாரத்தினம் கனகம்மா (கமலா)

**அவர்கள்**

சொந்தங்கள் சிறகடித்த சோலையிலே
சோகத்தை நிரப்பிச் சென்றதும் ஏனோ?
நீங்கள் தேடிய சொந்தங்கள் எல்லாம்
உங்களைத் தேடி வாடுதம்மா!
உங்களை இழந்து தவிக்கும் உறவுகளுக்கு
ஆறுதல் தான் இனியாரோ?

**அன்னாரின் பிரிவால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**அம்பாள் சனசமூக**
**நிலையத்தினரும்,**
**விளையாட்டுக்கழகத்தினரும்**

**நுணாவில்**

திருக்கணித பதிப்பகம் - சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நன்றி நவில்கின்றோம்



அன்பின் உறைவிடமாய் அறிவிற்கு இமயமாய், ஆற்றலின் அகிலமாய் என்றும் அரும்பெரும் சோதியில் கலந்து அணைந்தும் அணையாத சோதியான திருமதி கனகம்மா சபாரத்தினம் அவர்கள் கடந்த 12.07.2016 இல் இறைவனடி சேர்ந்து எல்லோரையும் ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டார்.

அன்னாரின் துயரச்செய்திகேட்டு ஓடோடி வந்து உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி அழைப்புக்கள், மின்னஞ்சல், தந்திகள் மூலம் துயர் பகிர்ந்தோருக்கும், மலர்வளையம், மாலைகள், புஸ்பங்கள் சாத்தியோருக்கும் அன்னாரின் பிரிவுத் துயரில் பங்குகொண்ட அன்பு உள்ளங்களுக்கும் இறுதிக் கிரியைகளை சிறப்புற நடத்திய சிவாச்சாரியர்களுக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் பங்குபற்றியவர்களுக்கும் மேலும் இம்மலரை சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய அன்ரா பிறிண்டேர்ஸ் (யாழ்ப்பாணம்) நிறுவனத்தாருக்கும் மற்றும் இங்கே தனிப்பட்ட நன்றி கூறப்படாமல் விடப்பட்டவர்கள் அனைவருக்கும் இருகரம் கூப்பி நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா வ

*பொன்னையா
+
*வள்ளிப்பிள்ளை

குமாரசாமி | சபாரத்தினம் | இரத்தினம்


சௌந்தரராஜன்
+
மோகனாம்பிகை
செந்தூரன்

நிர்மல
+
கலைச்
நிசா

* அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா வழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

"எது நடந்ததோ.
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ.
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்.
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ.
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ.
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ.
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்.
அது வேறொருவருடையதாகும்"
இதுவே உலக நியதியும்.
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

**- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Print@ Andra, Jaffna. | 021 222 8929